# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 348 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 23, செவ்வாய்க்கிழமை 08.11.2016







## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று

வொசிங்டன், நவ. 8
அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளராக >> 21

## யாழ்ப்பாணத்தில் நேற்றும் ரி.ஐ.டியினரால் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 8
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். இவருடன் சேர்த்து யாழ்ப் >> 06

## அமைச்சர்களை விசாரிக்கும் குழு நியமனத்தில் சர்ச்சை

யாழ்ப்பாணம், நவ.8
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு நியமனத்தில் சர்ச்சை நீடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. >> 21

## ஆட்சிக் கவிழ்ப்புக்கு சில ஊடகங்கள் சதி

### அது முடியாத காரியம் என்கிறார் பிரதமர் ரணில்

யாழ்ப்பாணம், நவ. 8
தேசிய அரசைக் கவிழ்க்கச் சில ஊடகங்கள் சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. ஊடகங்களின் இந்த முயற்சியால் அரசைக் கவிழ்க்க முடியாது.
இவ்வாறு பிரதமர் ரணில் >> 21

## ஆவா குழு என்பது திட்டமிட்ட ஒரு சதி

### அரசு மீது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 8
ஆவா குழு என்று ஒன்றுமே இல்லை. இது அரசின் திட்டமிட்ட ஒரு சதி. அரசியல் >> 24

# புதிய சட்டத்தால் நிலைமை மேலும் மோசமடையும்

## அபாய எச்சரிக்கை விடுக்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

யாழ்ப்பாணம், நவம்பர் 8
பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அரசு புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள சட்டவரைவினால், படைத் தரப்பால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் உட்படக் கொடூரங்கள் மேலும் மோசமடையும் என்று நியூயோர்க் நகரைத் தளமாகக் கொண்டு செய்ற்படும் பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.
இலங்கையில் ஏற்கனவே சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் பொலிஸார் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய >> 21

## வீடுகளைப் பார்வையிட்ட பாக். தூதுவர்



யாழ்ப்பாணம், நவ. 8
பாகிஸ்தான் அரசின் நிதி உதவியில் வடக்கில் அமைத்துக் >> 21



## கண்ணிவெடி அகற்ற பிரிட்டன் ரூ.22 கோடி

### யாழில் கூறினார் அந்நாட்டு அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 8
வடக்கில் கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 1.2 மில்லியன் பவுண்ஸ் (இலங்கை மதிப்பில் சுமார் 22 கோடி) வழங்குவதற்குப் பிரிட்டன் அரசு தயார் என்று, யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த >> 21

## 118 கிலோ கேரளக் கஞ்சா சுண்டிக்குளத்தில் சிக்கியது



கிளிநொச்சி, நவ.8
வடமராட்சி கிழக்கு - சுண்டிக்குளம் கடற்கரைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை படகில் இருந்து இறக்கிய 118 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் தப்பிச் >> 24

## படகுகள் அணைக்கும் 4 துறைகள் படை வசம்

### இதனால் வாழ்வாதாரம் பாதிப்பு என வலி.வடக்கு மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 8
வலி.வடக்கில் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதும் தமது வாழ்வாதாரத்துக்குரிய 4 படகு அணைக்கும் துறைகள் விடுவிக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர். >> 21



## கொலையுண்ட மாணவர்களுக்கு நேற்று பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 8
துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரினதும் அஞ்சலி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அஞ்சலி உரைகளும் அங்கு இடம்பெற்றன. பெரும் எண்ணிக்கையான மாணவர்கள், விரைவுரையாளர்கள், பேராசிரியர்கள், >> 21

## முஸ்லிம்களை மீள்குடியமர்த்த மாகாண சபை தவறிவிட்டது

### மன்னாரில் அமைச்சர் ரிசாத் குற்றச்சாட்டு

மன்னார், நவ.8
வடக்கு முஸ்லிம்களை மீளக் குடியமர்த்தும் தார்மீகப் பொறுப்பிலிருந்து வடக்கு மாகாண சபை தவறி இருக்கின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் >> 06

## ஓய்வுநிலை சிப்பாய்கள் மீது கண்ணீர்ப் புகை வீச்சு

### ஜனாதிபதி செயலகம் முன்பாகப் பதற்றம்



யாழ்ப்பாணம், நவ. 8
ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த முயன்ற ஓய்வு பெற்ற இராணு >> 23

## பன்னாட்டுத் தலையீடின்றி தமிழருக்கு கிடையாது நீதி

### பிரிட்டன் அமைச்சரிடம் நேற்று எடுத்துரைத்தார் வடக்கு முதல்வர்



யாழ்ப்பாணம், நவ. 8
பன்னாட்டுத் தலையீடு வராவிட்டால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்று நேற்று யாழ்ப்பாணம் >> 25


www.seylan.lk

நிலையான வைப்புகளிற்கு உயர் வட்டி வீதம்...

மூன்று மாதங்கள்

12.5%

5 மில்லியனிற்கு குறைந்த நிலையான வைப்புகளிற்கு 12%

விரையுங்கள்
இச்சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே

மேலதிக விபரங்களிற்கு அருகிலுள்ள கிளைகளில் அல்லது அழையுங்கள்

011 200 88 88
077 200 88 88
www.facebook.com/Seylanbank

செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறுப்புரிமை பறிப்பால் பீரிஸ் சீற்றம்

யாழ்ப்பாணம், நவ. 8
மைத்திரிபாலவுக்கு ஒரு நடவடிக்கையும், எனக்கு இன்னொரு நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்று சினந்துள்ள முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தனது உறுப்புரிமை பறிப்பை மீளாய்வு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆதரவுக் கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்படும் ஜி.எல்.பீரிஸ், அந்த அணியினரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்சியின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து, சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை பீரிஸ் இழந்துவிட்டார் என்று, கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திசநாயக்க அறிவித்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பொது எதிரணியின் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட்ட போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவும் இடைநிறுத்தப்பட்டார். அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த முடிவை ரத்துச் செய்தது. இந்தப் பின்னணியைக் கொண்டு எனது நீக்கத்தையும் ஆராயவேண்டும்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உரிமைக்கு நான் சவால் விடுக்கப் போவதில்லை. ஒழுங்கை மீறிய இரண்டு உறுப்பினர்களுக்கு எதிரான இரண்டு வெவ்வேறு நடவடிக்கை களை எடுக்க முடியாது.

ஒழுக்காற்று நடவடிக்கை விடயத்தில், இரட்டை நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சித் தலைமை கடைப்பிடிக்கக் கூடாது. எனது உறுப்புரிமைநீக்கத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீளாய்வு செய்யும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (த-5)

# அரசியல்வாதிகளை வரவேற்க மாணவரை பயன்படுத்தக் கூடாது

## தீர்மானம் கொண்டு வருகிறார் கிழக்கு மாகாண முதலமைச்சர்

மட்டக்களப்பு, நவ.08
மாணவர்களை வீதியோரங்களில் நீண்ட நேரம் காத்திருக்க வைத்து, அரசியல்வாதிகளுக்கு மலர் மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்து அழைத்து வந்து, பட்டாசு கொளுத்தி, சூழலை மாசுபடுத்தும் இவ்வாறான விடயங்களைத் தடை செய்யும் தீர்மானத்தை மாகாண சபையில் கொண்டு வரும் யோசனை உள்ளதாகக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
பாடசாலைகளுக்கு அரசியல்வாதிகள் பயணம் செய்யும் பல்வேறு நிகழ்வுகளின்போது அவர்களை வரவேற்றுப் பவனி வருவதற்கு மாணவர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

இது ஒரு கலாசாரமாகவே வந்து விட்டது. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதைப் பல்வேறு தரப்பிலிருந்தும் அறியக் கிடைத்துள்ளது.

மாணவர்கள் மழை வெயில் என்றும் பாராது வீதியோரங்களில் நீண்டநேரம் கால் கடுக்க நிற்க வைக்கப்படுவதால் மன, உடல் உளைச்சலுக்கு உள்ளாகின்றார்கள். அத்துடன் அவர்களது கற்றலுக்கான நேரமும் வீணடிக்கப்படுகின்றது.

இதனைத் தவிர்த்து மாணவர்களின் கற்றலுக்கும் அவர்களது உடல் உள ஆரோக்கியத்திற்கும் ஊறு விளைவிக்காதவாறு பாடசாலை நிகழ்வுகளில் மாணவர்களைப் பயன்படுத்துவதில் கல்விப் புலம் சார்ந்தோர் அக்கறை காட்டவேண்டும்.

இந்த விடயத்தை மாகாண சபையில் ஒரு தீர்மான்மாகக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றிச் சட்டமாக்கிச் செயற்படுத்துவதற்கு யோசனை உள்ளது - என்றார். (த-ய-46)

### கைதியின் கொலை

# பொலிஸார் ஐவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம் நவ 8
யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கைதி ஒருவரைச் சித்திரவதை செய்து கொலை செய்தமை தொடர்பில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் இடம்பெறும் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட தாகக் கூறப்படும் 5 பொலிஸாரையும் நாளை மறுதினம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கடந்த 2011 ஆம் ஆண்டு திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கைதி ஒருவரைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்து கொலை செய்தமை தொடர்பாக அப்போதைய சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 8 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

அதில் கொலைக் குற்றச்சாட்டில் 5 பேருக்கு எதிராகக் கிளிநொச்சி நீதிமன்றத்திலும், சித்திரவதை தொடர்பாக குறித்த 5 பொலிஸார் உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களில் ஒருவர் வெளிநாட்டில் உள்ளதனால் ஏனைய 7 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாளை மறுதினம் இவர்களுக்கான சுருக்க முறையற்ற விசாரணை நடைபெறும் என நீதிமன்று தெரிவித்தது. (த-4-6)

# கைதுகள் குறித்து மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 8
யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட 7 பேர் தொடர்பில் அவர்களது உறவினர்களால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளதாக, பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் சிறப்பு அணியால் ஆவாக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 8 பேரில், ஆறு பேரினது உறவினர்கள் கைது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்திப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குக் கடிதம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# நாடாளுமன்றில் நாளை சோதனை

கொழும்பு, நவ. 8
நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டம் நாளைமறுதினம் சமர்ப்பிக்கப்படவிருப்பதை முன்னிட்டு நாளை புதன்கிழமை நாடாளுமன்றத்திலும் அதன் வளவிலும் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், 10ஆம் திகதியன்று நாடாளுமன்றத்திலும் அதன் வளவிலும் சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# படகில் தங்கக் கட்டிகள் கடத்திய இருவர் கைது

## தலைமன்னார் கடற்பகுதி ஊடாக இந்தியாவுக்குப் பயணித்தவேளை



யாழ்ப்பாணம், நவ. 8
இலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட இருவரை நேற்று அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தலை மன்னாருக்கு மேற்குப் பகுதியி லுள்ள கடற்பரப்பில் வைத்து மீன்பிடிப் படகொன்றின் மூலம் 5 கிலோ கிராமுக்கு அதிகமான எடை கொண்ட தங்கக் கட்டிகளைக் கடத்தும்போது கடற்படையினரினால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவரென்றும் மற்றையவர் சிலாவத்துறையைச் சேர்ந்தவரென்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த சிறப்பு இரகசியத்தகவலின் அடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு, பெறுமதி வாய்ந்த தங்கக் கட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன.(த-5-56)

# போரில் பாதிப்புற்றோருக்கான உதவி குறித்து கனடா ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 8
போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், பெற்றோரை இழந்த சிறார்கள், முன்னாள் போராளிகளுக்கு உதவியளிப்பது தொடர்பில் கனடா நாட்டு அதிகாரிகள் குழு வடக்கு மாகாண முதலமைச்சருடன் நேற்று ஆராய்ந்துள்ளது.

கனடா, ஒட்டாவா தலைமையகத்தின் ஆய்வாளர்களான கொரேசி மற்றும் மக்லாரன் உள்ளிட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டது.

அந்தக் குழு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியது. அதற்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநரையும் சந்தித்தது.

தமது சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

இங்குள்ள பல விடயங்களையும் அவர்களிடம் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். அரசியல் ரீதியாக எதனை எதிர்பார்க்கிறீர்கள்? என்று அந்தக் குழுவினர் கேட்டிருந்தார்கள். அதற்கு, எமக்குச் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வேண்டும். என்பதைக் கூறியிருக்கின்றோம்-என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் மேயர் சிவகீதா உட்பட நால்வருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, நவ. 8

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரன் உட்பட 04 பேரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் உட்பட 03 பெண்களும் ஆண் ஒருவரும் நீதிவான் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டபோதே, நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

திருகோணமலை -மட்டக்களப்புப் பிரதான வீதியிலுள்ள முன்னாள் மேயரின் வீட்டின் ஒருபகுதியில் பாலியல் தொழிலை நடத்திவந்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் மேயரும் அவரது கணவரும் உட்பட 9 பேர், மட் டக்களப்பு பொலிஸாரால் கடந்த 23ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக் கையின்போது கைது செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து, இவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், முன்னாள் மேயரின் கணவர் உட்பட 05 பேர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (தி)

# மகிந்தவின் அலுவலகத்தில் வாடகைக்கு இருக்கும் பீரிஸின் புதிய கட்சி

கொழும்பு, நவ.8

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் உருவாகியுள்ள சிறிலங்கா பொதுஜன முன்னணி, தனது காரியாலயத்தில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து நடாத்திவருகிறது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான எந்தவொரு எதிர்க் கட்சி வந்தாலும், அதற்கு ஆதரவு வழங்குவதற்கு நாம் முன்வருவோம். புதிதாக உருவாகியுள்ள அரசியல் கட்சியும் அரசுக்கு எதிராக இருக்கின்றது. அதற்கு நாம் ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளோம்.

நாம் அந்தக் கட்சிக்கு உதவத் தேவையில்லை. அந்தக்கட்சி எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். நான் இன்னும் அந்தக் காரியாலயத்துக்குச் செல்லவில்லை என்று நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார் மகிந்த ராஜபக்ச. (வ)

# மட்டு. புதைகுழி தொடர்பில் சிறப்புக்குழு நேரில் ஆராயும்

மட்டக்களப்பு, நவ.8

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ் சேனைப் பிரதேசத்தில் முன்னர் இராணுவமுகாம் அமைந்திருந்த தனியார் காணியொன்றில் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவு அறிக்கை ஏறாவூர் பொலிஸாரால் கொழும்பு மூத்த சட்ட வைத்திய நிபுணரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாகப் பொலிஸார் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கையை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

நீதிமன்றின் உத்தரவின் பிரகாரம் மூத்த சட்ட வைத்திய நிபுணர், அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் குறித்த இடத்துக்குச் செல்லும் தினத்தை அறிவிக்க வுள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டு விடயத்தை உறுதிப்படுத்திய பின்னர் நீதிமன்ற அனுமதியைப் பெற்று தோண்டும் நடவடிக்கை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகள் முடிவுறும் வரை குறித்த இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ் சேனை பிரதேசத்தில் முன்னர் இரா ணுவ முகாம் அமைந்திருந்த இடத்தில் கடந்த மாதம் மலசல கூடத்துக்கான குழி தோண்டும் போது மனித எச்சங்கள் எனக் கருதப்படும் பல தடயங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளன.

இதையடுத்து காணி உரிமையாளர் கிராமசேவகர் ஊடாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலை யத்தில் முறையிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து குறித்த இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டதுடன் கட்டுமானப் பணிகளும் நிறுத்தப்பட்டன.

இதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி, மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் பி.சீ.சானக்க பெரேரா ஆகியோர் அந்த இடத்தைப் பார்வையிட்டு மனித எச்சங்கள் காணப்படுவதை அவதானித்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய-47)

# சில பகுதிகளுக்கு இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம், நவ.8

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் யாழ். பிரதேசத்தில் சில இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோயிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித் துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோயிலடி, கம்பர் மலை, பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களில் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)


**வேலைவாய்ப்பு**

Cleaning மற்றும் Garden வேலை

நிறுவனம் :- பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri - Nallur Road, Jaffna.
021 222 8093

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1312
சீட்டிழுப்பு திகதி 2016.11.07
வெற்றி இலக்கங்கள்
07 52 53 59 K
ரூ. 11,110,420/-

**SUPER BALL**
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 573
சீட்டிழுப்பு திகதி 2016.11.07
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
36 49 68 71 J
சுப்பர் ஜக்பொட்
ரூ. 59,082,540/=

**பிற்போடப்பட்டுள்ளது**

12.11.2016 அன்று நடத்துவதற்கு தீர்மானித்திருந்த 30ஆவது INSTITUTE DAY நிகழ்வுகளை தவிர்க்க முடியாத காரணத்தினால் 19.11.2016 நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் என்பதை தாழ்மையாக அனைவருக்கும் அறிவித்துக் கொள்கிறோம்.

PRINCIPAL JCIA DIRECTOR JCIT

(J 5962) (16,17,19)

**நேர்முகத்தேர்வுகள்**

* Receptionist (female)-5
* Admin Officer (female/male)-2
* Personal Assistant (female) -2
* Accountant (male/female)-4
* Graphic Designers (female)-2
* Bill Clerk (male)-2
* Cook (male/female)-5
* Sales Boys -5
* Cleaners -5
* Hospital labours-4
* Roomboys -5
* Drivers-2
* Peon (male/female) -5
* Marketing Excecutive-2

இப்பதவிகளுக்கான நேர்முகத்தேர்வுகள் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.
திகதி: 08.11.2016 (செவ்வாய்) , 12.11.2016 (சனிக்கிழமை)
நேரம்: காலை 10.00-மாலை 3.00

உங்கள் தகைமை எதுவானாலும் பொருத்தமான வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள சுயவிவரக்கோவை, தகைமைச்சான்றிதழ், அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் என்பவற்றுடன் நேரில் வாருங்கள்.

WINSTAR JOB BANK
# 106 தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 076 5450539
web : www.winstarjaffna.com (c/ 23336) (16,17,19)

**காணவில்லை**

(05.11.2016) சனிக்கிழமை மாவெள்ளை நிற 27-41360047 இலக்கமுடைய பசுமாடு ஆனைப்பந்திக்கும் யாழ் நகருக்கும் இடையில் காணவில்லை.

077 4656492 (J 5969) (16,17,19)

**தேவை**

யாழ்ப்பாணத்தில் கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த மேசன், கூலி ஒப்பந்தகாரர்கள், பலகை அடிக்கக்கூடிய (சட்டறிங்வேலை), கூலியாள்கள், தினக்கூலி அடிப்படையில் (மேசன், லேபர்) வேலை செய்பவர்களும் தேவை. (J 5967) (16,17,19)

077 3614638, 077 2132461

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணியில் மூன்று அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. (J 5969) (16,17,19)

077 8558654

அபிவிருத்தி
**இலட்சாதிபதி**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 35
சீட்டிழுப்பு திகதி 2016.11.07
வெற்றி இலக்கங்கள்
13 16 18
இவ்வார இலட்சாதிபதிகள் 36
வழங்கப்பட்ட மொத்த பரிசு 7,631,320/-

**திருமண வெள்ளிவிழா அழைப்பு**



மா.சிவமூர்த்தி (வீடியோ கலாமினி)
திருமதி மஞ்சுளாரஜனி சிவமூர்த்தி

எங்களை சகல சௌபாக்கியங்களுடனும் நிறை மங்கலமாக வாழவைத்துக் கொண்டிருக்கும் இறைவனது இறையருள் வேண்டி எமது இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நாளை (09.11.2016) புதன்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெறும் திருமண வெள்ளிவிழா நிகழ்வில் கலந்து கொண்டு எமது நல்வாழ்வுக்கு ஆசி வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீடியோ கலாமினி
இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்.
அச்சுவேலி - 077 305 3080


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சவூதியில் சாவடைந்த மஸ்கெலியாப் பெண்

நுவரெலியா, நவ.08

ஹற்றன் - மஸ்கெலியா தோட்டத்திலிருந்து சவூதி அரேபியாவுக்கு பணிப் பெண்ணாகச் சென்ற மூன்று பிள்ளைகளின் தாயொருவர் அங்குள்ள தடுப்பு முகாமில் சாவடைந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்டெர்ஸ்பி சூரியகந்த (லேட்புரூக்) தோட்டத்தில் இருந்து 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சென்ற பழனியாண்டி கற்பகவள்ளி என்ற பெண்ணே இவ்வாறு சாவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெண் கடந்த மாதம் 31ஆம் திகதி சவூதி அரேபியா நாட்டின் றியாத் பிரதேசத்தின் ஒலேய்யா பபா என்ற முகாமில் இருந்த வேளையில் உயிரிழந்துள்ளார். இவரின் உயிரிழப்புத் தொடர்பாக சமூக வலைத்தளங்கள் அண்மையில் பலவிதமான செய்திகளை வெளியிட்டிருந்தன.

இதனடிப்படையில் உயிரிழந்தவர் தன்னுடைய சகோதரி என்பதை இங்குள்ள அவரது சகோதரர் அடையாளம் கண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

அதேவேளை, இவரின் உடலத்தை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்படி உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பெண் திருமணம் முடித்தவர். இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். கணவர் பிரிந்திருக்கிறார். குறித்த பெண் இலங்கையிலிருந்து வெளிநாடு சென்றபின்னர் இரண்டு முறை மாத்திரமே சம்பளப் பணத்தை அனுப்பி வைத்துள்ளதாகவும், தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது வீட்டில் தன்னை துன்புறுத்துவதாகவும், அடிமைப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து பணிப்பெண்களாகச் சென்றுள்ள 80இற்கும் மேற்பட்ட பெண்கள் சவூதி அரேபிய தடுப்புமுகாம்களில் சித்திரவதை அனுபவிப்பதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய-43)

# பண மோசடி குற்றச்சாட்டில் ஒருவர் கைது

சாவகச்சேரி, நவ.8

தோல் பொருள்கள் உற்பத்திக் கம்பனி ஒன்றில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஐந்து பேரிடம் பணம் பெற்று மோசடி செய்தார் என்று குற்றங்சாட்டப்படும் சாவகச்சேரி நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த இந்த நபரே ஐந்து பேரிடம் 67 ஆயிரம் ரூபா 21 ஆயிரம் ரூபா 10 ஆயிரம் ரூபா இரண்டு பேரிடம் தலா 9 ஆயிரம் ரூபா எனப் பெற்றுக்கொண்டு வாங்கி வேலை வாங்கிக் கொடுக்காமல் ஏமாற்றினார் என்று கூறப்படுகின்றது.

பணம் கொடுத்தோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி நீதிவானிடம் முற்படுத்தினர். (ற-9)

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2015/2016(வெளிவாரி)
## Bachelor of Business Management (Online) Degree Programme - 2015/2016(External)

### புதியஅனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2015

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருடகால இணையவழி வியாபாரமுகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**அனுமதிக்கான தகைமைகள்:**

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை– 2014 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்
அல்லது

❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு சமமான வேறுதகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபாரமுகாமைத்துவமாணி முதலாம் வருடதேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

❖ பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட 1ம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி **இரண்டாம் வருடகற்கை நெறிக்கு**. உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கியகுறிப்பு** :- இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப் பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொதுஉளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

01. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா1000க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 x 20செ.மீ அளவுடைய தபால் உறையுடன், **உதவிப்பதிவாளர், திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்றமுகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

02. விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/codlஎனும் இணையமுகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் "**இணையவழி மூலமான வியாபாரமுகாமைத்துவமாணி பட்டப்படிப்பு**" எனதெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்பமுடிவுத்திகதி : 30.11.2016. (விண்ணப்பமுடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிகவிவரங்களுக்கு: 021 222 3612, 021 222 3610, 021 222 1106 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**04.11.2016**

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் த.சாந்தினி மாலா
அவர்களின் பாசமிகு தாயார்
**மங்கையர்க்கரசி மார்க்கண்டு**
அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**நலன்புரி கழகம், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



கடந்த 29.10.2016 சிவபதமடைந்த
எமது பாசமிகு தந்தை
அமரர்
**வைத்திலிங்ககுருக்கள் சுந்தரேஸ்வரகுருக்கள்**

அவர்களின் பாஷாண உத்வாசன கிரியைகள் நாளை (09.11.2016) புதன்கிழமை காலை 5.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கண்ணகி அம்மன் கோயிலடி, மந்திகை.**
(C 23327) (14,17,18)
**குடும்பத்தினர்.**
**077 899 8028**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
09 . 03 . 1956



இறப்பு
08 . 11 . 2015

**அருட்சகோதரி மரியறொசாறியோ (அ.கா)**

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் முன்னைநாள் அதிபர்
**அருட்சகோதரி மரியறொசாறியோ (அ.கா)** அவர்களின் முதலாம் ஆண்டை நினைவு கூருவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி பணத்துடன் மட்டக்களப்பில் இருவர் சிக்கினர்

மட்டக்களப்பு, நவ. 8

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் அமைந்துள்ள மது பானசாலை ஒன்றில் போலி பண நோட்டுக்களைக் கொடுத்து, மதுபானம் கொள்வனவு செய்ய முற்பட்ட இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாக அந்த மதுபான சாலையில் போலி பண நோட்டுக் களைத் தந்து மதுபானத்தை கொள்வனவு செய்து தலைமறைவாவது வழமை யாக இடம்பெற்றது. 20 ஆயிரம் ரூபாவரை இழப்பு ஏற்பட்டது. அவற்றை கிழித்து எறிந்துள்ளோம். அதன் பின்னர் இந்த விடயத்தில் நாங்கள் மிகவும் அவதானமாக இருந்தோம். வழமைபோன்று வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் முச்சக்கர வண்டியில் வந்த மூவரில் இரண்டுபேர் அதிலிருந்து இறங்கி வந்து 5 ஆயிரம் ரூபா பண நோட்டை தந்து மதுபானம் கேட்டனர்.

அந்த பண நோட்டு போலியானது என்ற சந்தேகம் எமக்கு வலுக்கவே அதனைப் பரிசோதித்தோம். நாம் பரிசோதிப்பதை அவதானித்த அந்த மோசடிக்காரர்கள் இருவரும் தப்பி ஓட எத்தனித்தனர். அவர்களை நாம் சாதுரியமாக மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தோம். முச்சக்கரவண்டியில் இருந்த மூன்றா மவர் தப்பி ஓடிவிட்டார். பிடிக்கப்பட்ட இருவரும் காத்தான்குடியைச் சேர்ந்த இருபத்தைந்து வயது மதிக்கத் தக்கவர்கள்- என்று மதுபான விற்பனை நிலையத்தைச் சேர்ந்தோர் தெரிவித்தனர். சந்தேகநபர்களிடம் இருந்து விசாரணைகளை முன் னெடுக்கப்பட்டுள் ளது என்று களு வாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-4)

# மண்டிகைக் குளத்தை திருத்துமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 8

சங்கானை மண்டிகைக் குளத் தினுள் தாமரைக் கொடிகள் பரவியுள்ளதால் விவசாயத் தேவைக்கும், மீன்பிடிப்பதற்கும் குளத்தைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படு கின்றது என்று அந்தப் பகுதி விவசாயிகள் மற்றும் மீன்பிடிப் போர் குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

100 ஏக்கர்வயற்காணிகளுக்கு ஏற்ற மழைநீரைச் சேமித்து வைக்கக்கூடிய குளமாக சங்கானை மண்டிகைக்குளம் காணப்படுகின்றது. குளத்தில் தாமரைக் கொடிகள் பரவி எவருமே பாவனை செய்ய முடியாத நிலையில் உள்ளது. மழை காலத்தில் நீரைச் சேர்த்து வைக்கும் இந்தக் குளத்தில் மழை இல்லாத காலங்களில் அந்த நீரை விவசாயத் தேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலையிலேயே விவசாயிகள் உள்ளனர். இந்தக் குளத்தில் விறால் என்ற ஒரு வகை மீனைப் பிடித்து விற்பனை செய்வோம். இதன் மூலமும் வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்வோம். தாமரைக்கொடிகள் முற்றாக இந்தக் குளத்தில் பரவி உள்ளதால் வாழ்வாதாரத்தை மேற் கொள்ள முடியாத நிலை உள்ளது.

இந்தக் குளத்தின் தெற்குப் பக்கத்தின் சிமெந்திலான அணைக்கட்டு பாறிவிழுந்து கடந்த இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அணைக்கட்டு வேலைகள் தற்போது சீரமைக் கப்பட்டு வருகின்றன. ஆனாலும் குளத்தை நம்பியுள்ள விவசாயிகள் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் இதைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள னர். சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடம் தெரிவித்தும் இன்று வரை எந்தவித மான முன்னேற்றகரமான முடிவும் எடுக்கப்பட வில்லை - என்றனர்.

குளம் சீரமைப்புக்கு எனத் திணைக் களத்தால் ஒதுக்கப்பட்ட நிதி போதாமையாக உள்ளது. அந்தப் பகுதி மக்களின் போக்குவரத்தைக் கருத்தில்கொண்டு மண்டிகைக் குளத்தின் அணைக்கட்டு புன ரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று கொண்டிருக்கின்றன. அந்தக் குளத்தில் படர்ந்துள்ள தாமரைக்கொடிகள் அகற்று வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் இதற்கு முன்னு ரிமை அளிக்கப்பட்டு – நிதி ஒதுக்கப்பட்டு – இந்தத் தாமரைக்கொடி கள் குளத்தில் இருந்து அகற்றிக் கொடுக்கப்படும் என்று கம நல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித் தார்.

(ந-10,29)

**காணி விற்பனைக்குண்டு**

சுண்டுக்குளி, A9 வீதியில் அமைந்துள்ள இரண்டு (2) பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

071 359 3263

**வேலையாள்கள் தேவை**

சுன்னாகம் நகரில் அமைந்துள்ள பிரபல்யமான இலத்திரனியல் மற்றும் பான்சி பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவமும் ஆற்றலுமுள்ள வேலையாள்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 868 9375

**தேவை**

பழைய ஓடுகள் தேவைப்படுகின்றன. வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

076 961 9348

**பணி நிலை வெற்றிடம் (ஆள்கள் தேவை)**

தையல் மெசினில் உரபேக் படங்கு தைப்பதற்கு ஆள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

021 222 5986/ 077 248 7852

**உடனடி வேலையாள்கள் தேவை**

- மேசன்மார்கள்
- கூலியாள்கள்
- தச்சுத் தொழிலாளிகள்

024 2052 734, 077 366 7674

வேலைத்தளம்: ஓமந்தை பொலிஸ் நிலையம் பின்புறம்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவன்

ஜெயக்கொடி சுமித்

2016 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளையும் மாவட்ட மட்டத்தில் 109 ஆவது நிலையையும் பெற்று சித்தியடைந்ததையிட்டு

இறையேசுவின் நிறையருளுடன் கூடிய பாராட்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு கல்வி புகட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: அப்பா -ஜெயக்கொடி, அம்மா - சுகந்தி மற்றும் குடும்பத்தினர்.

**தவறிவிட்டது**

எனது SAMSUNG J5 Phone தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

077 233 1318, 021 2051 432, 077 959 5342

**வேலைவாய்ப்பு**

விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தேவை. அடிப்படைச் சம்பளமாக (Sales Representative) 23500/= இத்துடன் அவருக்கு கொடுக்கப்படும் இலக்கை (Target)அடைபவர்களுக்கு மேலதிக சன்மானமும் வழங்கப்படும்.

தும்பிக்கையான் களஞ்சியம்
இல. 117, கண்டி வீதி, கிளிநொச்சி.

021 228 5840, 077 109 8397

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**2017 ஆம் ஆண்டுக்கான**
**மீள்கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், என்ப வற்றினை 01.01.2017 தொடக்கம் 31.12.2017ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 172515.00 | |
| 2 | கருவாட்டுக்கடை - 03 | 750.00 | 7500.00 | 43750.00 | 250.00 |
| 3 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 52710.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 57600.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 152250.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 40530.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 25305.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 09.11.2016 – 21.11.2016 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 22.11.2016 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 22.11.2016 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2016.10.20ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகை ... நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.சுதர்சன்,**
**செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**



புங்குடுதீவு மேற்கு பிட்டியம்பதி
**ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்**
*பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்*

வேண்டுவோருக்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கி அருள்மழை பொழியும் காளிகா பரமேஸ்வரி அம்பாளுக்கும் விநாயகர், முருகன், வைரவர், சண்டேஸ்வரி முதலான தெய்வங்களுக்கும் மங்களம் பொங்கும் துர்முகி வருடம் ஐப்பசி திங்கள் 26ஆம் நாள் 11.11.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 10.30 மணி வரையிலான தனு லக்கின சுப முகூர்த்தத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற குருவருளும் திருவருளும் கைகூடியுள்ளது. அவ்வேளையில் நடைபெறும் கிரியைகளில் அடியார்கள் பங்கு பற்றி சரியைத் தொண்டு செய்து அன்னையின் அருள் பெறுவீராக.

**கிரியா நிகழ்வுகள்**

**ஐப்பசித் திங்கள் 25ஆம் நாள் 10.11.2016 ஆம் திகதி வியாழக்கிழமை**

காலை 7 மணிக்கு மேல் கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் வாஸ்துசாந்தி நடைபெற்று தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு சுத்தி புண்ணிய யாகம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்சனம், ஷண ஹோமம், கும்பயாகசாலா பிரவேசனம், யாக பூசை, கோம வழிபாடு, திரவிய ஹோமம், தீபாராதனை, புஸ்பாஞ்சலி, வேதபாராயணம், திராவிட பாராயணம், விபூதி பிரசாதம் வழங்குதல், தொடர்ந்து அம்பிகை பாலாலயத்தில் பிரவேசம்.

**ஐப்பசித் திங்கள் 26 ஆம் நாள் 11.11.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு**

சுத்திபுண்ணியயாகம்,மகா பூரணாகுதி, திரவிய அபிஷேகம்,பிரதான கும்ப உத்தாபனம், பாலாலய கும்பாபிஷேகம் நடைபெற்று 10 மணிக்கு விசேட பூசையுடன் இனிதாக நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புத் தேவையுள்ள இராணுவத்தினருக்கு ஓய்வூதியம் பெப்ரவரியில்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

ஓய்வுபெற்ற சிறப்புத் தேவையுடைய இராணுவ உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வழங்கப்படும். தற்போது வழங்கப்படுகின்ற சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக சேவை ஓய்வூதியத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய முறையில் சட்டம் வகுக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திற்குள் இந்த யோசனை உள்வாங்கப்பட்டு, ஓய்வூதியத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

12 வருடங்களுக்கு குறைவாகச் சேவையாற்றிய சிறப்புத் தேவையுடைய இராணுவ உறுப்பினர்களுக்கு 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் ஓய்வூதியத்தை வழங்கவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவ உறுப்பினர்களின் பிரச்சினை குறித்து ஜனாதிபதி கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போர் காரணமாகப் போர்க் களத்தில் அவயவங்களை இழந்த நிலையில் 12 வருட இராணுவ சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத நிலையிலேயே ஓய்வுபெற நேரிட்ட தமக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தியே முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் கடந்த 7 நாள்களாகப் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அவயவங்களை இழந்த ஓய்வுபெற்ற படையினரை அழைத்து கலந்துரையாடியிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவர்களின் கோரிக்கைக்கு ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார். எனினும் ஜனாதிபதி தமது பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கத் தவறிவிட்டதாகத் தெரிவித்து தொடர்ந்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த நிலையிலேயே முன்னாள் இராணுவ வீரர்களின் ஓய்வூதியம் தொடர்பில் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். போதனா வைத்தியசாலையில் சிரேஷ்ட மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் **திரு. செ.செல்வச்சந்திரன்** அவர்களின் பாசமிகு துணைவியார்

**திருமதி**
**நிர்மலா செல்வச்சந்திரன்**

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் எமது சங்க அங்கத்தவராகிய திரு. செ. செல்வச்சந்திரன் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது உள்ளம் உருகும் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின் றோம். அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நிறைவுகாண் மருத்துவ தொழில்வல்லுனர்களின் ஒன்றியம்.**
**யாழ். மாவட்டம்.**

(அ/23377) (7.19.20)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நிர்மலா செல்வச்சந்திரன்



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும். 21. ஆசீர் வாதம் ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி நிர்மலா செல்வச்சந்திரன் நேற்று (07.11.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தவலிங்கம் - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - சிவயோகம் தம்பதியரின் அன்புமருமகளும் செல்வச்சந்திரனின் (MLT, Jaffna Teaching Hospital) அன்பு மனைவியும் கௌசிகன். யதுசிகன் (மாணவர்கள் - யா/பரியோவான் கல்லூரி ) ஆகியோரின் அன்புத்தாயும் இரவீந்திரா காலஞ்சென்ற இரவிச்சந்திரன் மற்றும் மணிமாலா. தவரவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானதுக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**21. ஆசிர்வாதம் லேன்.**
**ஆஸ்பத்திரி வீதி.**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**செ. செல்வச்சந்திரன் (கணவர்)**
**( MLT - Jaffna Teaching Hospital )**
**077 113 4172, 077 015 0592**

(ஜே/5964) (7.19.20)

### திருமதி மகேஸ்வரி (பேபி) ஆனந்தரட்ணம்



நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ் நகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆனந்தரட்ணம் நேற்று (07.11.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம்-இராசலட்சுமி தம்பதிகளின் மூத்த மகளும் கந்தரோடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற ஆனந்தரட்ணத்தின் அன்பு மனைவியும் யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி (முன்னாள் அதிபர் யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஸ்ரீஸ்கந்தராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் நாகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் ஹேமாசினி-விதுரன் குமாரவேல் (ஆஸ்திரேலியா), தர்ஷினி-ரமேஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் வி.அபிதன், வி.அம்ரிதா, ர.அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2016) புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.9, விக்ரோறியா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(ஜே.5973) (16.17.19)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### முஸ்லிம்களை...

கூட்டமைப்பின் கீழான இந்த வடக்கு மாகாண சபை, அந்த இயக்கம் இழைத்த தவறுக்கான பிராயச்சித்தமாக முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றத்தில் ஆர்வம் காட்டி இருக்க வேண்டும்.

இவ்வாறு வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

முசலி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 'வன்னி விடியல்' அமைப்பினால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட முப்பெரும் விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துக்கு பல்வேறு வழிகளிலும் தடையாகவும், முட்டுக்கட்டையாகவும் இருக்கும் வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகளை நாங்கள் ஒரு போதும் ஆதரிக்க முடியாது.

முல்லைத்தீவில் முஸ்லிம்கள் மீள்குடியேறுவதற்காக, அவர்கள் வாழ்ந்த காணிகளில் காடுகளைத் துப்புரவாக்கிக் கொண்டிருக்கும் போது, டோசர்களுக்குக் குறுக்கே குப்புறப்படுத்து அதனைத் தடுத்தார்கள். முசலி – சிலாவத்துறைப் பிரதேசத்தில் பல கோடி ரூபா செலவில் பல்லாயிரம் பேருக்குத் தொழில்வாய்ப்பு வழங்கும் கைத்தொழில் பேட்டை ஒன்றை நாம் அமைக்க முயற்சி செய்த போது, அதற்குக் காணி வழங்க அனுமதி மறுத்து அதனை இல்லாமல் செய்தார்கள். யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள அகதிகளுக்கு ஓரங்குலக் காணியேனும் கொடுத்து உதவாது, ஒரு தற்காலிகக் கொட்டிலைத்தானும் அவர்களுக்கு அமைத்துக் கொடுக்காது, தூர நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்கள் மீது குரோத மனப்பான்மை கொண்டு, அவர்களுக்கு எத்தகைய உதவிகளும் வழங்காத இந்த மாகாண சபை, முஸ்லிம் சமூகத்தை அரவணைத்துச் செல்கின்றது என்று எவ்வாறு நாங்கள் கூறுவது? இவ்வாறு கூறுவது சுத்த அபத்தமில்லையா? துரத்தப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்தைப் பற்றியும், அவர்களின் நல்வாழ்வைப் பற்றியும் எத்தகைய சிந்தனையும் கொள்ளாத வடக்கு மாகாண சபையுடன் நாங்கள் ஒத்துப்போக வேண்டுமென்று அவர்கள் எண்ணுவது சரியா?

அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை. நிரந்தரப் பகைவர்களும் இல்லை எனக் கூறுவார்கள். சந்தர்ப்பவாதிகள் பலர் தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக அரசியல்வாதிகளை அவர்களின் ஆதரவாளர்கள் போன்று காட்டி, தாங்கள் நினைத்தவற்றைச் சாதித்து விடுகின்றனர். அங்கே ஒரு காலும், இங்கே ஒரு காலும் வைத்துக் கொண்டும், ஆதரவாளர்கள் போல் நடித்துக் கொண்டும் சிலர் எம்மை குழி தோண்ட நினைக்கின்றனர்.

எனது அரசியல் வாழ்விலே இவ்வாறானவர்கள் பலரை நான் அறிந்து வைத்திருக்கின்றேன். அண்மையில் முசலி, வெள்ளிமலையில் நான் பேசாத ஒன்றைப் பேசியதாகத் திரிபுபடுத்தி அதற்குக் கை, கால் வைத்து என்மீது அபாண்டப் பழிகளைச் சிலர் சுமத்தியுள்ளனர். அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் இவற்றைத் தாங்கும் சக்தி இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் எனக்குத் தினமும் கிடைக்கும் நச்சரிப்புக்களையும், ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் உள்வாங்கிக் கொண்டே எனது பணிகளை முன்னெடுத்து வருகிறேன். ஒருவனின் வெற்றியும், தோல்வியும், பதவியும், அதிகாரமும் இறைவனின் நாட்டமே. இறைவனின் நியதி இருந்தால், அவற்றை எவரும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நம்பிக்கை எங்களிடம் வந்து விட்டால், எந்தக் கவலையும் நமக்கு இல்லை - என்றார். (வ-21,56)

### யாழ்ப்பாணத்தில்...

பாணத்தில் கடந்த மூன்று தினங்களில் மாத்திரம் 9 பேர் கைதாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆவாக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பின்னர், சுன்னாகத்தில், சிவில் உடையிலிருந்த பொலிஸார் மீது வாள் வெட்டு நடைபெற்றது. இந்த வாள்வெட்டை ஆவாக் குழுவே மேற்கொண்டதாக அநாமதேய துண்டுப்பிரசுரம் மூலம் உரிமை கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆவாக் குழு தொடர்பில் தென்பகுதி அரசியல் தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாயவே இதனை உருவாக்கியதாக அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித தெரிவித்திருந்தார். அதனைக் கோத்தபாய மறுத்திருந்தார்.

ஆவாக் குழு விவகாரம் அரசியலில் பேசுபொருளாகியிருந்த நிலையில், திடீரென கடந்த சனிக் கிழமையிலிருந்து இந்தக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பலரைக் கைது செய்யும் நடவடிக்கையை பயங்கரவாத விசாரணைப் பிரிவு முன்னெடுத்திருந்தது. இதற்காக கொழும்பிலிருந்து சிறப்பு அணி யாழ்ப்பாணத்தில் களமிறக்கப்பட்டது. கடந்த சனிக் கிழமை மூன்று பேரும், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை 5 பேரும், நேற்று ஒருவருமாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ந.சர்மிலன் (வயது -27) என்பவரே நேற்று மாலை கைது செய்யப்பட்டார். இவரது கைது தொடர்பில் உறவினர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக அதன் இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"
- பிராங்க் லேர்மிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்).

கார்த்திகை 01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்"

# போதைப் பொருளற்ற சமூகத்தை மாணவர்களே உருவாக்க முடியும்

## மருத்துவர் ரா.கஜேந்திரா கருத்து

யாழ்ப்பாணம், நவ.8
இளைய தலைமுறையினர் மது சாரம் மற்றும் போதைப் பொருள்களைப் பாவிப்பதால் பெரும் நோய்களுக்கு உள்ளாவதுடன், தங்கள் வாழ்க்கையையும் சீரழித்துக் கொள்கின்றனர். எதிர்கால சமூகத்தை மது சாரம் மற்றும் போதைப் பொருள் அற்ற சமூகமாக மாற்றும் வல்லமை மாணவர்கள் கைகளிலேயே உள்ளது.

இவ்வாறு மருத்துவர் ரா.கஜேந்திரா தெரிவித்தார்.

கிளிநொச்சி தருமபுரத்தில் உள்ள சிபிஏ கல்வி நிலையத்தில் அண்மையில் யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ பீட மாணவர்களின் ஏற்பாட்டில் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

அதில் மருத்துவர் கஜேந்திரா உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல்துறை விரிவுரையாளர் வ.குமரதீபனின் வழிகாட்டலின் கீழ் உலக சிறுவர் நலன் காப்பகத்தின் அனுசரணையோடு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் சுமார் 135 மாணவர்களுடன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

போருக்குப் பின்னர் மது மற்றும் போதைப்பொருள்பாவனைமாணவர்கள், இளைஞர்களிடையேயும் அதிகரித்துச் செல்கின்றது அவர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகக் குறித்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. (ற-4,7)

# செம்மணி வீதி - கண்டி வீதியின் சந்திப்பில் திணறும் பயணிகள்

## சுற்றுவட்டம் அமைக்கப்படாததால்



யாழ்ப்பாணம், நவ. 8
செம்மணி வீதியும், கண்டி பிரதான வீதியும் சந்திக்கும் பகுதியில் சீரான சுற்றுவட்டம் அமைக்கப்படாததால் அதிகளவான வீதி விபத்துக்கள் குறித்த பகுதியில் இடம்பெறுகின்றன. இலகுவாக வாகனங்களைச் செம்மணி வீதிக்குத் திருப்பக் கூடியவாறு சுற்றுவட்டம் அமைக்கப்படவில்லை என்று குறித்த வீதியால் பயணிப்பவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏ- 9 பிரதான வீதி என்பதால் அதிகளவான மக்கள் போக்குவரத்துச் செய்கின்றனர். பெரும் வாகனங்கள்கூட அந்த வழியில் பயணிக்கின்றன. வெளிமாவட்ட வாகனங்கள் இந்தப் பகுதியூடாகவே யாழ்ப்பாணத்துக்கு உள்நுழைகின்றன. வீதியில் ஒழுங்கமைப்பு இல்லாததால் வீதியால் பயணிக்கும்பலர்அசௌகரியங்களைஎதிர்நோக்குகின்றனர். விதிகளைமீறுபவர்கள்மீதுபொலிஸார்நடவடிக்கை எடுக்கின்றனர். குறித்த இரு வீதிகளும் சந்திக்கும் இடத்தில் ஒரு சீரமைக்கப்பட்ட சுற்றுவட்டம் இல்லாததன் காரணமாகவே இவ்வாறான இன்னல்களுக்கு மக்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அந்த இடம் சுற்றுவட்ட அமைப்புக்குரிய இடமாகக் காணப்பட்டாலும் சுற்றுவட்டம் அமைக்கப்படவில்லை. நாவற்குழிப்பாலத்தைக் கடந்துவருபவர்கள் அதனைச் சுற்றுவட்டமாகக் கருதாது நேர்வழியில் பயணத்தைத் தொடர்வதாலேயே விபத்து ஏற்படுகிறது. அவ்வாறு நேர்வழியில் பயணத்தைத் தொடர்ந்தால் பொலிஸார் வழக்குப் பதிவு செய்கின்றனர். நீதிமன்றில் அல்லது சிறுகுற்ற அடிப்படையில் தபால்நிலையங்களில் தண்டம் செலுத்தவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. சுற்றுவட்டத்தைத் தாண்டி செம்மணி வீதிக்குத் திரும்பும் இடத்தில் போதிய இடவசதி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் வாகனங்கள் திரும்புவதும் கடினமாகவுள்ளது - என்று பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த வீதிகள் சந்திக்கும் பகுதியில் சுற்று வட்டம் அமைப்பது தொடர்பில் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அத்துடன் அதற்கான கேள்வி அறிவித்தல் கூட கோரப்பட்டுள்ளது. அந்த வகையில் தற்போதைய மழைகாலம் முடிவடைந்தவுடன் குறித்த பகுதியில் சுற்றுவட்டம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும்.- என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர். (ற-4,8)



கரவெட்டிப்பிரதேசசெயலர் பிரிவில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட சுமார் 60 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திணைக்களத்தால் சிமெந்துப் பைக்கற்றுக்கள் நேற்று வழங்கப்பட்டன.(ற-108)

# மருந்து விசிறி பழுக்க வைத்த பழம் விற்றோருக்குத் தண்டம்

தென்மராட்சி, நவ.8
பொதுச் சுகாதார பரிசோதகரின் எச்சரிக்கையை மீறி மருந்து விசிறப்பட்டு பழுக்க வைக்கப்பட்ட மாங்காய்களை விற்பனைக்கு வைத்திருந்த பழ வியாபாரிகள் நால்வருக்கு சாவகச்சேரி நீதி மன்று நேற்றுத் தண்டம் விதித்தது.

மரங்களிலிருந்து மாங்காய்களைப் பிடுங்கி நேரடியாக மருந்து விசிறி பழுக்க வைத்து சந்தைக்கு கொண்டு வரும் மொத்த வியாபாரிகளைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் மருந்து விசிறப்பட்ட மாங்காய்களை விற்பனை செய்கின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்து கொடிகாமம் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் கொடிகாமம் சந்தைக்குச் சென்ற பழவகை வியாபாரிகளுடன் கலந்துரையாடி நேரடியாக மருந்து விசிறப்பட்ட பழங்களை விற்பனை செய்யவேண்டாம் என எச்சரிக்கை செய்தார்.



மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியவில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் அலுவலர்கள் இணைந்து சந்தையில்திடீர்பரிசோதனைகளை நடத்தினர். அதன்போது பத்துப் பேரிடம் நேரடியாக மருந்து விசிறப்பட்ட மாங்காய்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டவேளையில் இனிமேல் இவ்வாறான மாம்பழங்கள் விற்பனை செய்யமாட்டோம் என்று வாக்குறுதியளித்து மன்னிப்புக் கோரியதையடுத்து வியாபாரிகளின் சம்மதத்துடன் சுமார் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாம்பழங்கள் அழிக்கப்பட்டன. மாம்பழங்களை முறைப்படி பழுக்க வைக்கும் முறைகள் பற்றி வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மறுநாள் சனிக்கிழமை காலை சந்தையில் பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் திடீர் பரிசோதனைகளை.மேற்கொண்டபோது நான்கு வியாபாரிகள் நேரடியாக மருந்து விசிறப்பட்ட பிஞ்சு மாம் பழங்களை வைத்திருந்தனர். குறித்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை விசாரித்த நீதிவான் நால்வரையம் எச்சரிக்கை செய்துதலா 4 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். மரங்களிலிருந்து பறித்து நேரடியாக மருந்து விசிறி சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வரும் மாம்பழ மொத்த வியாபாரிகளைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தமாறும் உத்தரவிட்டார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.8
அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் வழங்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## ஆங்கில தின விழா

நெல்லியடி, நவ.8
நெல்லியடி சன்மார்க்க சபைப் பாலர் பாடசாலையின் ஆங்கில தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு நெல்லை திருமண மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
முதன்மைவிருந்தினராக ஓய்வு நிலை ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சதாசிவம் சுந்தரமூர்த்தி கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-35)

## நூலக தின விழா

யாழ்ப்பாணம், நவ. 8
சுன்னாகம் இராமநாதன் கல்லூரி நூலக தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும் என்று நூலக அபிவிருத்திக் குழு அறிவித்தது.
கல்லூரி அதிபர் திருமதி கி.கமலராணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுன்னாகம் பொதுநூலக முதன்மை நூலகர் திருமதி க.ரட்ணேஸ்வரியும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக நூலக இணைப்பாளர் குகதாச சர்மா சிவகுமாரும் கலந்து கொள்வர் என்று அந்தக் குழு தெரிவித்தது. (வ-10)

சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை வழக்கு

# 14 இராணுவத்தினரின் விளக்கமறியல் நீடிப்பு

## சுருக்கமுறையற்ற விசாரணையை ஆரம்பிக்க நீதிவான் மன்று உத்தரவு

யாழ்ப்பாணம் நவ. 8
சிறுப்பிட்டி பகுதியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், சுருக்கமுறையற்ற விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டது யாழ்ப்பாணம் நீதிவான் மன்று. அதுவரை சந்தேகநபர்களான 14 இராணுவத்தினரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இரண்டு இளைஞர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டனர். அவர்களை இராணுவத்தினரே கடத்திக் கொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. குற்றச்சாட்டுத் தொடர்பாக அந்தக் காலப்பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவத்தினர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து யாழ். நீதிவான் மன்றினால் அனைத்து இராணுவச் சிப்பாய்களுக்கும் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் இராணுவச் சிப்பாய்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
கடந்த தவணை 14 இராணுவச் சிப்பாய்களையும் பிணையில் விடுமாறுகோரி அவர்களுடைய சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்திருந்தனர். எனினும் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் சி.சதீஸ்தரன், 14 இராணுவச் சிப்பாய்களையும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.
நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்று உத்தரவிட்டது.
அத்துடன், இந்தக்கொலைவழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,103,106)



போரினால் பாதிக்கபட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்வு செய்யபட்ட பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட 32 குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன. பிரிட்டன் தொண்டு நிறுவனமான எதிர்காலத்துக்கான பாதை அமைப்பினால் இந்த 32 துவிசக்கரவண்டிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (வ)

# 9 மாகாணங்களுக்கும் ஒரே நியமன விதிமுறை

## பொதுச் சேவை ஆணைக்குழு தலைவர்கள் மாநாட்டில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.8
மாகாண சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட நியமனங்களின் போது ஒரே நடைமுறை விதிகளைப் பின்பற்றுவது அவசியம் என்று 9 மாகாணங்களின் பொதுச் சேவை ஆணைக்குழுத் தலைவர்கள் வலியுறுத்தினர்.
இலங்கையின் 9 மாகாணங்களின் பொதுச் சேவை ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மாநாடு நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் விடுதியில் இடம்பெற்றது.
இந்த மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் தமது மாகாணங்களில் உள்ள நடைமுறைகள், பிரமாணக் குறிப்புக்கள், நியமன விதிகள் தொடர்பில் எடுத்தியம்பினர்.
இவ்வாறு தெரிவிக்கப்பட்ட நடைமுறைவிதிகளின்போது, இலங்கையின் 9 மாகாணங்களிலும் ஊழியர் நியமனம் , பதவி ஏற்றம் , உள்ளிட்ட அனைத்தும் ஒரே வகையில் அமைய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.
அவ்வாறான நடைமுறை இன்மையால் பல ஊழியர்கள் மாகாண இட மாற்றத்தின்போது பல பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும், அதேபோல் சகல நடவடிக்கைகளும் 9 மாகாணங்களுக்கும் பொதுவானதாக அமைய முன் நடவடிக்கையாக சில ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் தொடர்பில் தொடர்ந்து ஆராயலாம் எனவும் கூறப்பட்டது.
இந்த மாநாட்டில் வட மாகாண முதன்மைச் செயலாளர், ஆளுநரின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (வ-10)

## மாணவர் நாடாளுமன்ற அமர்வு

யாழ்ப்பாணம், நவ. 8
யாழ். மத்திய கல்லூரியின் மாண வர் நாடாளுமன்ற முதலாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு றொமைன்குக் மண்டபத்தில் நடைபெறும் என்று கல்லூரி அதிபர் அறிவித்தார். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் த.அகிலனும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாசும் கலந்து கொள்வார்கள் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

## சிறப்புத் தேவைகள் கொண்ட மாணவருக்கு வசதிகளில்லை

திருமலை, நவ.8
திருகோணமலை கிண் ணியா வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கிண்ணியா மத்திய கல்லூரியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அடிப் படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.
குறிப்பாக விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விசேட கழிவறை மற்றும் வகுப்பறைக்குள்ளேயே குடிதண்ணீரைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு பெற்றோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்கின்றனர்.
அத்துடன் வகுப்பறையில் இடப்பற்றாக்குறையும் நிலவுகிறது. இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பெற்றோர் தெரிவித்தனர். (த-ய-40)

## சவூதி சென்ற இளைஞரைக் காணவில்லை

மட்டக்களப்பு, நவ.8
தொழில் நிமித்தம் சவூதி அரேபியாவுக்குச் சென்ற மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமற்போயுள்ளதாக இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதரகம் மற்றும் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
காத்தான்குடி-05, மார்க்ட் வீதியைச் சேர்ந்த முஹம்மத் மஹ்றூப் முஹம்மத் ஆஸிக் (வயது- 32) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளதாக அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.
இவர் சவூதி அரேபியாவின் ரியாத் நகரத்தில் உள்ள தனியார் கம்பனி ஒன்றில் பணியாளராகக் கடமை புரிந்து வந்த நிலையில் கடந்த 18.10.2016 அன்று முதல் காணாமற்போயுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ய-46)

# சமாதானத்தைக் குழப்ப சதி செய்கின்றனர் சிலர்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கலையரசன் குற்றச்சாட்டு

எருவில், நவ. 8
வடக்கு மாகாணத்தில் இரு மாணவர்கள் கொலை மற்றும் அம்பாறையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் திடீரென முளைத்த புத்தர் சிலை தொடர்பான சம்பவங்களைப் பார்க்கும் போது சமாதானத்தைக் குழப்புவதற் கான சதியில் சிலர் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் நாவிதன்வெளிப் பிரதேச சபையில் மாண வர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"இந்த ஆட்சியைக் குழப்புவதற்கான வேலைப் பாடுகளைச் சிலர் இன்றும் திரைமறைவில் செய்து கொண்டு வருகின்றார்கள். அண்மையிலே அம்பாறைப் பிரதேசத்தில் புத்தர் சிலை ஒன்று திடீரென மலையில் முளைத்த சம்பவத்தை இனங்களுக்கிடையே மீண்டும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் செயற்பாடாகவே பார்க்கவேண்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் தொடராமல் பார்க்க வேண்டிய பொறுப்பு தற்போது ஆட்சியில் உள்ள அரசையே சாரும் - என்றார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி குமுக்கன் வாய்க்கால் கட்டுமானம் ஆமை வேகத்தில்

## அதனால் பெரும் சிரமம் என பிரதேச மக்கள் குற்றச்சாட்டு





யாழ்ப்பாணம், நவ. 8
அராலி மத்தி குமுக்கன் வாய்க்கால்கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறு கின்றன. அதனால் அருகே உள்ள இரு கிணறுகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. அந்தப் பகுதியில் உள்ள வீடுகளின் வாசல்களுக்குக் கடவைகள் போடப்படாமையால் போக்குவரத்துச் செய்யமுடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அராலி மத்தி குமுக்கன் வாய்க்கால் எந்தவித திட்டமிடல்களும் அற்றநிலையில் 2003ஆம் ஆண்டு வெட்டப்பட்டது. 12 வருடங்கள் கழிந்த நிலையில் கடந்த வருடம் ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 5 இலட்சம் ரூபா நிதியில் குறிப்பிட்டளவு தூரம் வரை வீதியின் வெளிமருங்கில் மாத்திரம் வாய்க்கால் கட்டப்பட்டது. இந்த வருடம் அதே திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபா வாய்க்கால் கட்டுமானப் பணிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் அந்தப் பணி உரிய காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அண்மையில் மீண்டும் சீரமைப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

சிமெந்தால் கட்டப்படாத வாய்க்காலின் அருகேயுள்ள இரு கிணறுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. அந்தக் குடும்பத்தினர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளாகியுள்ளனர். சுகாதாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது. வாய்க்கால் அருகே இருக்கின்ற வீடுகளின் வாயில்களுக்குக் கடவைகள் போடப்படாமையால் போக்குவரத்துச் செய்வதிலும் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

ஒரு வாய்க்கால் வெட்டும் பொழுது மக்களின் சுகாதாரம் உள்ளிட்ட அம்சங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். திட்டமிடலும் சரியான முறையில் அமைந்திருக்க வேண்டும். வாய்க்கால் சிமெந்தால் கட்டப்பட வேண்டும். வீடுகளின் வாயிற்கடவைகளுக்கு மூடிகள் போடப்பட வேண்டும். நீரோட்டம் பார்க்கப்பட வேண்டும் . குமுக்கன் குள வாய்க்கால் கட்டுமானத்தில் இவை எதுவுமே பேணப்பட்டிருக்கவில்லை.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் நடைபெறும் இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்குரிய தீர்வை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- என்றுகமநலசேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-10)

# பூநகரியில் உள்ள 5 குளங்களை ஒன்றாக்கினால் பெரும் நன்மை

## முழங்காவில் விவசாயிகள் சம்மேளன தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 8
கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் அருகருகே உள்ள 5 குளங்களையும் ஒன்றிணைத்து பெரிய குளமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். வன்னியின் மேற்குப் பகுதியின் அபிவிருத்திக்கும் உதவ வேண்டும்.

இவ்வாறு முழங்காவில் பிரதேச விவசாயிகள் சம்மேளனத் தலைவர் பூ.தர்மகுலசிங்கம் கோரிக்கை விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது-
கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சிறிய சிறிய குளங்களாக 5 குளங்கள் மிக அருகருகே அமைந்துள்ளன. இவை அனைத்தினதும் தடுப்புகளையும் இடையில் உள்ள பிரதேசங்களையும் அகற்றுவதன் மூலம் பெரும் குளத்தை அமைக்க முடியும் . குறித்த 5 குளங்களின் கீழும் தற்போது 2 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களே செய்கை பண்ணப்படுகின்றன. இதனை ஒரு குளமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்த மாவட்டம் மட்டுமன்றி அயல் மாவட்டங்களும் நன்மை அடையும்.

குளத்தின் கீழான பிரதேசத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உள்ளபோதிலும் வெறும் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலேயே சிறுபோகம் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய நிலப்பரப்பில் நீர்பற்றாக்குறையால் செய்கை பண்ணப்படுவதில்லை. கோடை காலத்தில் பல கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின் றது. அதேபோல் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் பல கிராமங்களில் எப்போதுமே குடிதண்ணீர் தட்டுப்பாடும் நீடிக்கின்றது.

குறித்த 5 குளங்களையும் ஒரே குளமாக அபிவிருத்தி செய்வதால் மக்கள் குடியிருப்புக்களோ அல்லது பாதைகளோ அழிவடைய வேண்டிய தேவை ஏற்படாது. வனப்பகுதிகள் மட்டுமே உள்ளன. குறித்த அபிவிருத்தியானது ஒரு சிறிய வேலைத் திட்டம் கிடையாது என்பதனால் பெரும் நிதிச் செலவுகள் மத்திய, மாகாண அரசுகளின் அனுமதிகள் என்பன உள்ளிட்ட நடைமுறைகள் உள்ளபோதும் இதனைக் கருத்தில் எடுத்து நிறைவேற்ற வேண்டும். இதனை நிறைவேற்றுகின்ற சந்தர்ப்பத்தில் மன்னார் மாவட்டத்தின் பாலியாறு மூலம் பாய்ந்து மன்னாரில் அழிவை ஏற்படுத்தி கடலுக்குப் பாயும் நீரை இந்தப் பகுதிக்கு திருப்புவதன் மூலம் மன்னாரில் வருடா வருடம் ஏற்படும் அழிவைத் தடுக்கமுடியும். இவ்வாறு அமைக்கப்படும் பெருங்குளத்தில் நிச்சயமாக இந்தப் பகுதியின் பாவனையை விடவும் அதிக நீரைத் தேக்க முடியும் என்பதால் குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு அபிவிருத்தி செய்வதன் மூலம் இப்பகுதியில் வாழும் 10 ஆயிரம் குடும்பங்கள் நேரடியாக நன்மை அடைவர்.

இதற்கான நிதி என்பது பெரும் விடயம் என்பதால் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் பரிந்துரையின் பிரகாரம் பன் னாட்டு உதவியோ அல்லது அரச உதவி மூலமோ இதனை ஏற்படுத்தலாம். இவ்வாறான திட்டத்திற்கு மட்டும். சுமார் 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வரையில் செலவு ஏற்படலாம்-என்றார். (ற)

# மரக்கடத்தல் தொடர்பான வழக்கில் பிணை இல்லை

## கிளிநொச்சி நீதிமன்று திட்டவட்டம்

யாழ்ப்பாணம், நவ.8
மரக் கடத்தல் தொடர்பாக வழக்குகளுக்குப் பிணை வழங்கப்படாது என்று தெரிவித்த கிளிநொச்சி நீதிமன்று நேற்று விசாரணைக்கு வந்திருந்த மரங்கள் தொடர்பான 10 வழக்குகளுடன் தொடர்புடையோரின் விளக்கமறியலை நீடித்தது.

கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுச் சுமார் 10க்கும் மேற்பட்ட மரங்கள் தொடர்பான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மரக்கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ளவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நேற்று பிணைகோரினர். அதன்போது பிணை மறுத்து விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக மரக்கடத்தல்கள் அதிகரித்து காணப்படுகின்றன. இரண்டு நாள்களுக்கு முன்னர் கல்மடு நகர் காட்டில் 4 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் 50 லட்சம் ரூபா பெறுமதியான பாலை மரங்கள் தறிக்கப்பட்டன. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரினால் 9 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் ஒரு வாரத்துக்கு முன்னர் மரக்கடத்தலுக்கு உதவி புரிந்ததாகக் கூறப்படும் இரண்டு பொலி ஸார் கிளிநொச்சி- முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸமா அதிபரின் கட்டளைக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ச வால் பணிநீக்கம் செய்யப்பட்டனர். (ற-4,6)



திருகோணமலையில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக நகரின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. சில வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்தது. மாலை வேளை பெய்த கடும் மழை காரணமாக திருகோணமலையின் தாழ்நிலப் பகுதிகள் மழைநீரில் மூழ்கியுள்ளன. (த-40)

# போட்டிப் பரீட்சை சனியன்று

யாழ்ப்பாணம், நவ. 8
வடமாகாணக்கல்வி வலயங்களில் நிலவும் பாடரீதியான ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வடமாகாண அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கமைவாக ஆசிரிய ஆலோசகர் தெரிவுகள் போட்டிப் பரீட்சை அடிப்படையில் நடைபெறவுள்ளன. போட்டிப் பரீட்சை யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடத்தப்படும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்குப் பின்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் மாகாணத் திணைக்களம் தெரிவித்தது. (ற-4)

# விபத்தில் காயமடைந்தவரை ஏற்றத் தயங்கிய ஓட்டோக்கள்

## யாழ். பரமேஸ்வராச் சந்தியில்

யாழ்ப்பாணம், நவ.8
யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியிலுள்ள ஓட்டோ தரிப்பிடத்துக்கு முன்பாக விபத்து நடந்தது. அதில் ஒருவர் தலையில் காயமடைந்தார். விபத்தில் சிக் கியவரை வைத்தியசாலைக்குக்கொண்டு செல்ல தரிப்பிடத்தில் நின்ற ஒட்டோ சாரதிகள் முன்வரவில்லை. வீதியால் பயணித்த ஓட்டோ ஒன்றை மறித்து காயமடைந்தவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.



பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள தனியார் வைத்திய சாலைகளுக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 1.30 அளவில் விபத்து நடந்தது. அதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் நெற்றியில் பலத்த காயமடைந்தார்.

அவரை ஒரு தனியார் வைத்தியசாலை முன்பாக அமர்த்தினர். அவரை அரச வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்வதற்கு அங்கு அருகில் இருந்த ஓட்டோ தரிப்பிடத்தில் பல ஓட்டோக்கள் தரித்து நின்றபோதும் எவரும் முன்வரவில்லை.

வீதியால் சென்ற ஓட்டோக்களின் உதவி கோரப்பட்டது. வீதி வழியாக வந்த ஓட்டோ சாரதி ஒருவர் முன் வந்து காயமடைந்தவரை போதனா வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலையில் மென்பானம் விற்றோர் மீது வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ.8
விற்பனை விலையை விடவும் இரு மடங்கு அதிக விலையில் மென்பானங்களை விற்பனை செய்த சினிமா திரையரங்குக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபை யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சினிமா அரங்குக்கு திரைப்படங்களைப் பார்வையிடவருவோருக்கு 70 ரூபா விலை பொறிக்கப்பட்ட மென்பானம் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. இது நீண்டகாலமாக நடைபெற்று வந்த நிலையில், கடந்த வாரம் இது குறித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-103)

# சேதனப் பசளை பாவனையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.8
யாழ்.மாவட்டத்தில் சேதனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலும், சேதனச் செய்கை முறை யிலான நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித் தனர்.

சேதனப் பசளைப் பயன்பாடு குறைந்து தற்போது இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. விவசாய நிலங்கள் இதனால் பாதிப்படைவதோடு, அவற்றில் இருந்து பெறப்படும் உணவு வகைகளும் தரமற்றவையாகக் காணப்படுகின்றன.

> சேதனப் பசளைப் பயன்பாடு குறைந்து தற்போது இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. விவசாய நிலங்கள் இதனால் பாதிப்படைவதோடு, அவற்றில் இருந்து பெறப்படும் உணவு வகைகளும் தரமற்றவையாகக் காணப்படுகின்றன.

சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு தெரிவு செய்த விவசாயிகளுக்கு சேதனப் பசளை வழங்குவதற்கு மாகாண விவசாய அமைச்சால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 3 லட்சத்து 83 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

விவசாய போதனாசிரியர் பிரிவுகளின் ஊடாக வேலணைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பயனாளிகளுக்கு அரை ஏக்கர் வீதம் 10பேருக்கு ஒவ்வொருவருக்கும் 250 கிலோ கிராமும், அம்பன் பிரிவில் 21 பயனாளிகளுக்கு 5.25 கியூப்பும், கரவெட்டிப் பிரிவில் 14 பயனாளிகளுக்கு 3.25 கியூப்பும், சாவகச்சேரி பிரிவில் 14 பயனாளிகளுக்கு 3.50 கியூப்பும், தொல்புரம் பிரிவில் 22 பயனாளிகளுக்கு 5.5 கியூப்பும், புத்தூர் பிரிவில் 21 பயானிகளுக்கு 5.25 கியூப்பும், நல்லூர் பிரிவில் 10 பயனாளிகளுக்கு 2.50 கியூப்பும், சண்டிலிப்பாய் பிரிவில் 22 பயனாளிகளுக்கு 5.5 கியூப்புமாக உக்கிய மாட்டெரு 100 வீத மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. சேதன செய்கை முறையிலான நெற் செய்கையை மேம்படுத்துவதற்கும் மாகாண விவசாய அமைச்சு குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

சாவகச்சேரி, கைதடி, கரவெட்டி, புத்தூர், உரும்பிராய், தொல்புரம், சண்டிலிப்பாய், வேலணை ஆகிய விவசாய போதானாசிரியர் பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 118 விவசாயிகளுக்கு 354 புசல் மொட்டைக்கறுப்பன் விதை நெல் 50 வீத மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயிக்கும் ஒவ்வொரு கியூப் எருவும் 50 வீத மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

இதனோடு இணைந்த வகையில் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதற்கென உயிர்க்கரி தயாரிப்பதற்கென 20 உயிர்க்கரி உபகரணங்கள், 5 பேர் கொண்ட விவசாய குழுக்களிடையே இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் போது தற்போது 118 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நெற் செய்கை வெற்றியளித்துள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.
(ற-10)



# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதார தொழிலாளர் போராட்டம்

## யாழ்.மாநகர சபையின் முன்பாக

யாழ்ப்பாணம், நவ.8
யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2009ஆம் ஆண்டு முதல் சுகாதாரத் தொழிலாளர்களாகக் கடமையாற்றும் 127 பேர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி பணிப்புறக் கணிப்பு ஒன்றை நடத்தினர்.

பணிப் புறக்கணிப்புப் போராட்டம் மாநகர சபை அலுவலகத்துக்கு முன்பாக நேற்று நடத்தப்பட்டது.

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் றொபின்சன் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் குறித்து தெரிவித்ததாவது:

யாழ். மாநகர சபையில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தற்காலிக தொழிலாளர்களாக 127 பேர் கடமை யாற்றுகின்றனர். அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக பல தடவைகள் மாநகர சபைக்கும், மாகாண சபைக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் ஒருமாத காலத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறியிருந்தார்கள். நீண்ட காலமாகியும் இது வரைக்கும் நியமனம் கிடைக்கவில்லை.

மூன்று வருடங்களுக்கு ஒருதடவை வெற்றிடங்களை முழுமை செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. தற்காலிகமாக கடமையாற்றுகின்ற 127 தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரைக்கும் எங்களுடைய பணி நேரமான காலை 6 தொடக்கம் பிற்பகல் 2 மணி வரைக்கும் போராட்டம் நடைபெறும். எங்கள் போராட்டம் இன்றும் தொடரும் - என்றார்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், அதிகாரிகளே, அரசியல்வாதிகளே எமது நிரந்தர நியமனத்தை மறுக்காதே, உரிமை பெற்றுத் தருவோம் என்றவர்களே எமக்கு நிரந்தர நியமனத்தைப்பெற்றுத்தாருங்கள் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தங்கியிருந்தார்கள்.

தொழிலாளர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தால் மாநகரப் பகுதியில் கழிவகற்றும் பணிகள் யாவும் நேற்று முடங்கின.
(ற-4,7,17)

# சரத்குமாரவுக்கு பிணை

கொழும்பு, நவ. 8
முன்னாள் பிரதிய மைச்சர் சரத்குமார குணரத்ன, நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று 50,000 ரூபா ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

2002 ஆம் ஆண்டில் நீர்கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்து கொண்டிருந்த இருவர் காரில் மோதி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சரத்குமார குணரத்ன மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, சரத்குமார குணரத்னவுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் 24ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

இதையடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர், இன்று நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
(கு)

# கால்நடைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிட்டால் தண்டம்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.8
இரவு வேளைகளில் வீதிகளில் உறங்கும் கால்நடைகளை அவற்றின் உரிமையாளர்கள் கட்டுப்பாடுத்தாவிடில் பிரதேச சபையால் தண்டம் விதிக்கப்படும்.

இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட ஏ-34, ஏ-35 வீதிகளில் இரவு வேளைகளில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த வியாழக்கிழமை இரவு ஒட்டுசுட்டானில் இருந்து முள்ளியவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளில் வீதியில் படுத்திருந்த கால்நடையுடன் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார். இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடும் கால்நடைகளை உரிய முறையில் பட்டிகளில் அடைந்து பாராமரிக்கும்படி கால்நடை உரிமையாளர்களுக்கு நாளைய தினம் பிரதேச சபையால் ஒரு அறிவித்தல்வழங்க இருக்கின்றோம். அதன் பின்னரும் இரவு வேளைகளில் வீதிகளில் காணப்படும் கால்நடைகள் பிரதேச சபையால் பிடித்து அடைக்கப்படும். அதற்குரிய அபராதத்தை செலுத்துவதினாலே கால்நடை உரிமையாளர் தன்னுடைய கால்நடையை மீட்டுச் செல்லமுடியும் - என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.(ற-7)

# மாத்தறையில் நேற்று சிக்கிய பெரிய முதலை

கொழும்பு, நவ. 8
மாத்தறை - வெல்கொட பிரசேத்தில் பெரிய முதலையொன்று வனவிலங்கு அதிகாரிகளால் நேற்று திங்கட்கிழமை பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 18 அடியுடைய இந்த முதலை, இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட முதலைகளில் மிகப் பெரிய முதலை என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூன்று பாதங்களைக் கொண்டுள்ள இந்த முதலை, பிறப்பில் இருந்தே அவ்வாறான நிலைமையைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நில்வள கங்கையின் நீர்மட்டம் அதிகரித்ததையடுத்தே கங்கையிலிருந்து இந்த முதலை கிராமத்துக்குள் பிரவேசித்துள்ளது.

மாத்தறை பொலிஸ் அதிகாரிகள், மிரஸ்ஸ வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் கலமெடிய வனவிலங்கு அதிகாரிகள் போன்றவர்களின் உதவியுடன் இந்த முதலை நில்வள கங்கையில் விடப்பட்டது.
(கு)

# கல்முனை குடும்பஸ்தர் மொரட்டுவையில் சடலமாக மீட்பு

எருவில், நவ. 8
மொரட்டுவையில் காணாமற் போயிருந்த கல்முனையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அங்குள்ள கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று மொரட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை வன்னியார் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை விவேகானந்தன் (வயது - 50) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் கொழும்பு மொரட்டுவவில் உள்ள நிறுவனம் ஒன்றில் அவர் பணிபுரிகிறார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு தனது மனைவியுடன் தொலைபேசியில் பேசியுள்ளார். மறுநாள் காலை கொழும்பு மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் இருந்து காணாமற் போனவரது உறவினர்களுடன் பொலிஸார் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர்.

காணாமற் போனவர் பற்றிய தகவல்களை பெறவேண்டி இருப்பதால் கொழும்புக்கு வருமாறு அவரது மனைவியை அழைத்திருக்கின்றார்கள். அழைப்பு கிடைத்ததும் அவரது மனைவி அன்று இரவே மொரட்டுவவுக்கு சென்றிருக்கின்றார். அதன்போதே சம்பவம் தெரியவந்தது. அவரைத் தேடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. நேற்று அவர் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரைப் பண்படுத்துவதே எம் முன்னுள்ள முக்கிய சவால்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.8

இன்றைய சமூகத்தை, இளையோரை, மாணவர்களை எவ்வாறு பண்பட்ட சமுதாயமாக உருவாக்குவது என்பது பற்றியே நாம் தீவிரமாகச் சிந்திக்கின்றோம். மேடைகளில் ஏறி நின்று வீர முழக்கம் செய்வதோ, ஆளையாள் திட்டித் தீர்ப்பதோ இந்தக் காலகட்டத்துக்கு அவசியமற்றது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வடமராட்சி குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை கிறிஸ்து நற்தூது பணியக முத்தமிழ் விழா நேற்றுமுன்தினம் கிறிஸ்து நற்தூது பணியக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் முதன்மை அதிதியாக வடக்கு முதலமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னைய காலத்தில் திருச்சபைகளும் மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் எமது மாணவர்களின் கல்வி, அதனோடிணைந்த சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி சிந்தித்திருக்காவிட்டால் நாமும் கல்வி கேள்விகளில் மிகவும் பின்தங்கிய ஒரு சமுதாய கட்டமைப்பின் கீழ் தள்ளப்பட்டிருப்போமோ என்ற ஐயம் தோன்ற வாய்ப்புள்ளது. எம்மவர்கள் தாம் பெற்ற கல்வியை தமது உடன்பிறப்புக்களுக்கும் நண்பர்களுக்கும் சமூகத்துக்கும் வழங்குவதற்கும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கும் பயன்படுத்தியமையின் விளைவே வடமாகாணத்தில் 85 வீதத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியறிவைப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

உங்களைப் பொறுத்த வரையில் இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தி நடத்திக் கொண்டு போவது ஒரு முக்கியமான விடயம் என்று நம்புகின்றேன். முன்னெடுப்புக்கள் பல வழிகளில் கொண்டு செல்லப்படலாம். இன்று மாணவர்கள் வாசிப்புப் பழக்கங்களை முற்றாகத் துறந்துவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஒவ்வொரு வீட்டிலும் நூற்றுக்கணக்கான பெறுமதிமிக்க பயன் தரக்கூடிய புத்தகங்கள் நிரம்பியிருந்தன. மாணவ மாணவியர் தமது ஓய்வு நேரங்களில் கற்றல் அல்லது வாசிப்பு வேலைகளிலேயே கூடுதலாக ஈடுபட்டார்கள்.

போர் நடவடிக்கைகள், அதனோடிணைந்த தாக்கங்கள் எமது இளைய சமூகத்தில் கடுந் தாக்கங்களை ஏற்படுத்தியது. கல்வி கேள்வியறிவுகளிலும் அவர்கள் பின்னிற்க வேண்டிய ஒரு நிலையும் ஏற்பட்டதென்றே தெரிகின்றது. பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். பாடசாலைப் புத்தகங்களுடன் கண்விழித்துக் கற்க வேண்டிய நேரத்தில் துப்பாக்கிகளுடன் எல்லைப்புறக் கிராமங்களில் கண்விழித்து எம்மைக் காவல் செய்த எம் இளைஞர்கள் இன்று அங்கவீனர்களாக, அல்லற்படுபவர்களாக, நினைவுகூரப்பட வேண்டியவர்களாக, ஆதரவற்ற நிலையில் வாழ்ந்து வருவது ஒரு துர்ப்பாக்கிய நிலையே. இன்று நிலமைகள் அவ்வாறு இல்லை. புத்தகங்கள் இருக்க வேண்டிய வீடுகளில் செல்போன்கள் அடுக்கப்படுகின்றன. கற்றலுக்குச் செலவழிக்க வேண்டிய நேரத்துணுக்குகள் முகப்புத்தகங்களில் செலவீடு செய்யப்படுகின்றன. வயது வந்தவர்கள் கூட சம்பாசிப்பதற்குக் கூச்சப்படுகின்ற பல விடயங்கள் இன்று இணைய வலைப்பின்னல்களில் வர்ணப்படங்களுடன் கூடிய செயன்முறைவிளக்கங்களுடன் அமைந்திருப்பது சமூகத்தை வேண்டும் என்றே அடுத்துக் கெடுப்பதற்கான ஒரு முன்முயற்சியாகவே தென்படுகின்றது.

பாலியற் கல்வி என்பது பாடப்புத்தகங்களில் சேர்க்கப்படக்கூடிய ஒரு விடயமாக ஆராயப்படும் வேளையில் அவற்றை ஆபாசங்களாக மாற்றி மாணவர்களின் இச்சைகளைத் தூண்டுவதற்கும் அதன் வழி அவர்களை துர் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கும் இந்த இலத்திரனியல் சாதனங்கள் காட்டுகின்ற கரிசனைகள் எம்மை மன வேதனை அடையச் செய்கின்றன.

வட பகுதியில் அரங்கேற்றப்படுகின்ற வாள்வெட்டு கலாசாரம், கொலை, களவு, பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவற்றுக்கு மூல காரணங்கள் இவ்வாறான நவீன சாதனங்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. இந்தத் துர்ப்பழக்க வழக்கங்களை அரங்கேற்றுவது எமது இளையோரே என்று எண்ணும்போது தவறு எங்கள் மீது அதாவது பெற்றோர்கள் மீதுதான் இருப்பதாகத் தெரிகின்றது. எமது கவனக் குறைவும் ஒரு முக்கிய காரணமாக அமையலாம்.

பாடசாலை செல்லும் எமது இளைஞர், யுவதிகள் என்ன செய்கின்றார்கள், எங்கு செல்கின்றார்கள், எவருடன் சேர்கின்றார்கள் போன்ற விடயங்கள் இனியாவது கண்காணிக்கப்பட வேண்டும். அவர்களின் பாடப் புத்தகங்களும் குறிப்புக் கொப்பிகளும் புத்தகப்பைகளும் தினமும் பார்வையிடப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளைகளின் ஒழுக்கங்கள், கற்றல் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றபோது வீடு முன்னேறும். வீடுகள் முன்னேற நாடு முன்னேறும்.

அவசர பணக்காரர்களாக மாற வேண்டும் என்பதற்காக கஞ்சா கடத்தல், கள்ள மண் ஏற்றி விற்றல், அங்கீகாரமற்ற களவுத் தொழில்களை மேற்கொள்ளல் போன்றவற்றில் எமது இளைஞர்கள் ஈடுபடுகின்றார்கள். இவற்றைப் பெற்றாராகிய நாமே தடுக்க முற்பட வேண்டும். பிள்ளைகளுக்கு நாமே களவை, கெட்ட பழக்க வழக்கங்களை வலிந்து பழக்குபவர்களாக அமையக் கூடாது.

செம்மொழியாம் தமிழ் மொழியின் கலை வடிவங்கள், தமிழர்களின் தொன்மை, அவர்களின் கலாசார விழுமியங்கள், தமிழர்களின் இலக்கியப் படைப்புக்கள், அவற்றின் உரை நடைகள், உயர்ந்த இலக்கியச் சுவைகள் ஆகியவற்றை எடுத்துக் கூறத்தக்கது முத்தமிழ் விழா. இந்த முத்தமிழ் விழாவில் மாணவர்கள் தமது மொழியாற்றலையும், எண்ணக்கருவூலங்களையும், சிந்தனைச் சிதறல்களையும் வெளிப்படுத்துவதற்கும் வளர்த்துக் கொள்வதற்கும் ஏதுவாக கடுகு என்ற பெயரைத் தாங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது -என்றார். (4)

---

## கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.8

கசிப்பு உற்பத்தி செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து 4 லீற்றர் கசிப்பும், உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியங்குளத்தில் உள்ள வீடொன்று சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் போதை தடுப்புப் பிரிவு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அதன்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைக்காகவும், நீதிமன்ற நடவடிக்கைக்காகவும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-7)

---

## முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மேலும் ஆயிரம் வீடுகள்

யாழ்ப்பாணம், நவ.8

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இரண்டாம் கட்டமாக ஆயிரம் வீடுகள் மீள்குடியேற்ற அமைச்சால் அனுமதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

நடப்பாட்டின் ஆரம்பத்தில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரம் வீடுகள் அனுமதிக்கப்பட்டன. அவற்றின் நிர்மாணங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தின் வீட்டுத் தேவை குறித்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய மேலும் ஆயிரம் வீடுகள் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளன.

அவை பிரதேச செயலாளர் பிரிவுகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 300 வீடுகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு 250 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 200 வீடுகளும், மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குத் தலா 100 வீடுகளும், வெலிஓயாவுக்கு 50 வீடுகளும் பகிரப்பட்டுள்ளன.

பருவ மழை ஆரம்பமாகியுள்ள நிலையில், இரண்டாம் கட்டமாக அனுமதிக்கப்பட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தியடையாது போனால் அதனை அடுத்த ஆண்டுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

---



## கட்டுப்பாடை இழந்த வாகனம் பாய்ந்தது வல்லை ஆற்றுக்குள்

### இருவர் காயம்; நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.8

கட்டுப்பாட்டை இழந்த படி ரக வாகனம் வல்லை ஆற்றுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். அவர்கள் அச்சுவேலி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று அதிகாலை 5.40 மணியளவில் விபத்து நடந்துள்ளது. வாகன சக்கரத்தில் காற்று வெளியேறியதால் விபத்து ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் வாகனம் விழுந்துள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த செ.விதுசன் (வயது -20), கிளிநொச்சியைச் சேர்ந்த த.போதிராஜ் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ற-4,422)

---

## மட்டுவில் மற்றும் நுணாவிலில் இளைஞர்கள் குழு அட்டகாசம்

தென்மராட்சி, நவ.8

தென்மராட்சி, மட்டுவில் மற்றும் நுணாவிலில் நேற்றுமுன்தினம் மாலை 10 மோட்டார் சைக்கிள்களில் 20 பேர் கொண்ட குழு வாள், கத்தி, கோடரி என்பவற்றுடன் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடமாடினர் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நுணாவில் மத்தியில் உள்ள வீடொன்றுக்கு முன்பாகக் குறித்த குழு அட்டகாசம் புரிந்தபோது ஊர் மக்களும், இளைஞர்களும் திரண்டதால் குறித்த குழு தப்பியோடியது என்றும், பின்னர் மட்டுவில் பற்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் வீதியில் இறங்கி அட்டகாசம் புரிந்தபோது பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் வருவதைக் கண்டதும் குறித்த குழு மோட்டார் சைக்கிள்களில் ஏறித் தப்பியோடியது என்றும், அதன்போது கோடரி, வாள் என்பற்றைத் தவற விட்டுச் சென்றனர் என்றும் தெரிவித்த பிரதேச மக்கள் அவற்றைப் பொலிஸார் கைப்பற்றிச் சென்றனர் என்றும் கூறினர்.

கடந்த தீபாவளி தினத்தன்று கைதடி மற்றும் மட்டுவில் பகுதி இளைஞர் குழுக்களிடையே மோதல் இடம்பெற்றது என்றும் அதன் தொடர்ச்சியாகவே நேற்றுமுன்தினம் குறித்த குழு அட்டகாசம் புரிந்தது என்றும் பிரதேச மக்கள் கூறினர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசமைப்பின் தாமதம் அமைதியைக் குலைக்கும்

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட புதிய அரசமைப்பு, அடுத்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார். 2016இற்குள் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு தீர்வு ஒன்று காணப்பட்டு விடும் என்ற எதிர்பார்ப்பு பலமாக இருந்து வந்தது. இப்போது அது வெறும் கானல் நீர் என்பது தெரிகிறது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் கூட்டு எதிரணி பலம்பெற்று வரும் நிலையில், அடுத்த ஆண்டில் கூட புதிய அரசமைப்பை இந்தக் கூட்டு அரசால் அவ்வளவு இலகுவாக நிறைவேற்றிவிட முடியுமா என்ற கேள்வி பலமாகவே எழுகிறது. ஏனெனில் இந்த மாதத்தில் அரசமைப்பு குறித்த இடைக்கால அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளன. இதன் மீதான எதிர்வினைகளைப் பொறுத்தே அடுத்த ஆண்டு அது நிறைவேற்றப்படுமா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.

அந்த இடைக்கால அறிக்கைகள் எப்படியாக இருந்த போதும், அதனை எதிர்த்து சிங்கள மக்களிடம் பரப்புரை செய்வதற்கு மகிந்த தரப்பு தயாராகவே இருக்கும். இப்போதைக்கு அரசுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய மிகப் பலமான அவர்களுடைய ஆயுதம் புதிய அரமைப்பு மட்டுமே.

புதிய அரசமைப்பு மூலம் தமிழர்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும் இலங்கை நாடு பிரித்துக்கொடுக்கப்படுகிறது என்கிற நஞ்சை அவர்கள் சிங்கள மக்கள் மனங்களில் நிச்சயம் விதைப்பார்கள். புதிய அரசமைப்பைக் காட்டிக் காட்டியே இனவாதத்தை கிளர்ச்சியுறச் செய்வார்கள். தேர்தலில் அதன் அமோக அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் இது நிச்சயம் நிகழும்.

அத்தகைய ஒரு சூழலில், இந்த அரசு தனது முயற்சியில் இருந்து பின்வாங்கி, வாக்கு வங்கியின் பின்னால் பதுங்குவதைத் தவிர வேறு எதுவும் செய்யாது என்று எதிர்பார்க்கலாம். இல்லையேல் மகிந்த தரப்பினதும், கடும்போக்காளர்களினதும் எதிர்ப்புகளுக்குப் பணிந்து புதிய அரசமைப்பையும் நீர்த்துப்போன ஒன்றாகவே ஆக்க முயலும். அப்படிப்பட்ட சூழல் ஏற்பட்டால், தமிழர்களும் ஏனைய சிறுபான்மையினரும் அதனை முற்று முழுதாகப் புறக்கணித்து எதிர்ப்பர். ஆக மொத்தத்தில் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கான சவால் மிகப் பெரியது.

இலங்கையின் வரலாறு முழுவதும் இதுவேதான் நடந்து வருகிறது. ஒரு தரப்பு வழங்குவதும், மறு தரப்பு அதனை எதிர்த்துக் குழப்புவதுமாகவேதான் காலம் கடந்திருக்கிறது. ஆனால் மைத்திரிபால சிறிசேனவை அரச தலைவராக இலங்கையின் சிறுபான்மையினர் தெரிவு செய்தபோது அவரிடமிருந்து அவர்கள் எதிர்பார்த்தது இதுவல்ல.

வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஓரணியில் இணைந்தமையும், இரண்டாவது பதவிக் காலத்திற்கு ஆசைப்படாத ஓர் அரச தலைவராக மைத்திரிபால தன்னைக் காட்டிக்கொண்டமையும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பிரகாசமான வாய்ப்பாகத் தமிழர்களைப் பார்க்க வைத்தது. இந்தத் தடவை எப்படியாவது தீர்வு சாத்தியமாகலாம் என்ற நம்பிக்கையை - சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் தீர்வைத் தாமாகத் தரமாட்டார்கள் என்கிற விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தீர்க்க தரிசனத்திற்குப் புறம்பாக - வளர்த்துக்கொண்டார்கள்.

இரண்டாவது பதவிக் காலத்திற்கு ஆசைப்படாதவராக மைத்திரிபால சிறிசேன இருக்கும்பட்சத்தில், அவர் ஓர் உன்னத தலைவராக (ஸ்டேட்மேன்) அனைவருக்கும் நீதியானவராக இருப்பார் என்று தமிழர்கள் எதிர்பார்த்தார்கள். அதனடிப்படையில் வாக்குகளுக்காக விலை போகாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் துணிவு அவருக்கு இருக்கும் என்று எதிர்பார்த்ததும் உண்மை.

ஆனால், தற்போதைய நிலமைகளைப் பார்க்கையில் அந்த நம்பிக்கைகள் மீது சந்தேகங்கள் எழுகின்றன. கட்சிக்குள் இருக்கும் அரசியல் போட்டிக்குள் மைத்திரியும் அமுங்கிப் போய்விடுவார் என்கிற அச்சம் எழுகிறது.

அதுமட்டுமல்லாமல், புதிய அரசமைப்பு ஊடாகத் தீர்வு வருகிறது என்கிற எதிர்பார்ப்பில்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது தாமதமாவதையும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம் போன்றவற்றில் ஏற்படுகின்ற தாமதத்தையும் தமிழர்கள் சகித்துக்கொண்டார்கள். புதிய அரசமைப்பும் அதனூடாகத் தீர்வும் தள்ளிப்போகுமாக இருந்தால், தமிழர்கள் தமது சகிப்புத் தன்மையை இழந்து மீண்டும் போராட்டங்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே நேர்மையான - நீதியான - புதிய அரசமைப்பின் வருகையை விரைவுபடுத்துவதற்கு அரச தலைவர் தனது முழுமையான அர்ப்பணிப்பை வழங்குவதே இப்போதைய தேவை.

# வரவு - செலவுத்திட்டம் அரசுக்கு ஒரு சோதனை



சேரலாதன்

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பாக மக்களிடம் பெரும் எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது. அன்றாட பாவனைப் பொருள்களின் விலைகள் உச்சத்தைத் தொட்டு நிற்கின்ற நிலையில், வரவு - செலவுத்திட்டத்தின் மூலமாகத் தமக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்குமாவென மக்கள் எதிர்பார்ப்பது நியாயமானதுதான்.

கடந்தகால அரசுகள் போரைக் காரணம் காட்டியே, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காலத்தை இழுத்தடித்து வந்தன. தற்போது போர் ஓய்ந்து ஏழு ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் மக்களின் வாழ்க்கையில் இன்னமும் மலர்ச்சி ஏற்படவில்லை. முன்னைய அரசு எவ்வித கட்டுப்பாடுகளுமின்றிப் பெற்ற கடன்கள், நாட்டின் தேசிய வருமானத்தை விழுங்கி வருவதாக அரசு தரப்பினர் திரும்பத் திரும்பக்கூறி வருகின்றமை, மக்களிடம் இனியும் எடுபடுமா என்பது சந்தேகமே.

### முக்கிய இருதுறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் போதுமானதல்ல

அடுத்த ஆண்டுக்கான மொத்தச் செலவினமாக, ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 900 கோடி ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது குறைவானதாகவே காணப்படுகின்றது. ஆனால் கல்விக்கும், சுகாதாரத்துக்கும் நிதிக்குறைப்பு செய்யப்பட்டுள்ளமை மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது. ஏனென்றால் இவை இரண்டும் நாட்டு மக்களின் மிக முக்கியமான தேவைகள். கல்விக்கான நிதியில் குறைப்புச் செய்யப்பட்டுள்ளமை பெரும் பாதிப்பையே ஏற்படுத்திவிடப் போகின்றது.

அதேபோன்று நாட்டின் மிகவும் முக்கிய துறையான சுகாதாரத் துறைக்கும் நிதிக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளமை மக்களைப் பாதிக்கக் கூடிய விடயமாகும். புதிய புதிய நோய்கள் உருவாகி மக்களைப் பாதித்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில், அவற்றுக்குச் சிகிச்சையளிப்பதற்கு பெருந்தொகையான நிதி தேவைப்படுகின்றது. இந்த நிதியில் குறைப்புச் செய்யப்படுமாயின் சுகாதாரத் துறையும் ஒரு நொண்டி வாத்தாகவே மாறி விடும். பாதுகாப்புத்துறைக்கு சுமார் 28 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு என்பது, போர் எதுவும் இடம்பெறாத நிலையில் அதிகமென்றே கூறவேண்டும். போர் இடம்பெற்றபோது வகைதொகையின்றி ஆள்கள் படைகளில் இணைக்கப்பட்டனர். இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடாது பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தினுள் அரசு தள்ளப்பட்டுள்ளமை பெரும் நிதி விரயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினங்களில்பெரிய ளவிலான அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாணசபைக்கும் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது. ஆனால் மாகாணசபையின் செயற்பாடுகளைப் பொறுத்தே ஒதுக்கப்பட்ட நிதியின் பலாபலன்களை மக்கள் அனுபவிக்க முடியும். நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி செலவழிக்கப்படாமல் திரும்பி விடும் நிலையிலுள்ளது.

ஒவ்வொரு துறைக்கும் நிதியை ஒதுக்குவதுடன், அரசின் கடமை முடிந்து விடுவதில்லை. ஒதுக்கப்பட்ட நிதி, ஒழுக்காகவும் நேர்மையாகவும் செலவழிக்கப்படுகின்றதா என்பதையும் அரசு நுணுக்கமாகக் கண்காணிக்க வேண்டும். ஏனென்றால் பல சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடுகள் விரயமாவதாகவே தெரியவருகின்றது. தற்போது செலவினம் தொடர்பான மதிப்பீடுகளே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஈடுசெய்வதற்கான வருமான மூலங்களை வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போதே தெரிந்து கொள்ள முடியும்.

### மக்களுக்கு வெறுப்பேற்ற தருணம்பார்த்திருக்கும்மகிந்த

ஆனால் பொதுமக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் விதமாக அரசு நடந்து கொள்ளுமானால், மகிந்த தரப்புக்கு அது வாய்ப்பாகவே அமைந்துவிடும். மகிந்த ராஜபக்ச, நாடு முழுவதும் சூறாவளிப் பயணமொன்றை மேற்கொண்டு, தமது புதிய அமைப்புத் தொடர்பான பரப்புரைகளில் ஈடுபடவுள்ளார். அரசையும் அதில் அங்கம் வகிப்பவர்களையும் கண்டிப்பதே அவரது பிரதான நோக்கமாக இருக்கப் போகின்றது. ஜனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகள் அவருக்கும் பிரதமருக்கும் இடையில் இடம்பெற்று வரும் பனிப்போர், நல்லாட்சி அரசில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு ஆகியவற்றுடன் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களையும் அவர் மக்கள் முன்பாக முன்வைப்பாரென எதிர்பார்க்கலாம். மக்கள் நொந்து போயுள்ள நிலையில் அவரது பசப்பு வார்த்தைகளும் ஏடுபடவே செய்யும்.

ஆகவே நல்லாட்சி அரசு நல்லதைச் செய்வதற்கு இனியும் தயங்கி நிற்கக் கூடாது. அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் மக்களின் பொருளாதாரச் சுமைகளை நீக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். செலவினங்களை ஈடு செய்வதற்காக மக்களின் தலைகளில் இந்த அரசு சுமைகளைச் சுமத்திவிடுமாயின் அது இந்த அரசின் வீழ்ச்சிக்கே வழிவகுத்துவிடும்.

அரசின் அண்மைக்கால நடவடிக்கைகள் திருப்திகரமாக அமையவில்லை என்பதே பெரும்பாலான மக்களின் கருத்தாக உள்ளது. ஏனென்றால் அரசில் உள்ளவர்கள் வாயில் வந்ததையெல்லாம் உளறிக் கொண்டிருக்கின்றனர். சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் வைரிகளாகவே ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர். ஜனாதிபதிகூட தாம் சார்ந்த கட்சியை முனிலைப்படுத்துவதையே விரும்புகின்றார்.

இந்த நிலையில், அரசின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற ஒன்றாகவே அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் அமையப்போகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம்–
சந்துன் ஜீவந்த (மவ்பிம)
தமிழில் - வீ.எஸ்.ரீ

# கருடனுக்கு ஏற்பட்ட கதி மகிந்தவுக்கும் ஏற்படக்கூடுமா?

“புதிய கட்சியொன்றை உருவாக்குவதற்கு முன்னர் கருடனுக்கு நேர்ந்த கதி என்னவென்று சிந்தித்துப் பாருங்கள்” என அண்மையில் அமைச்சர் சஜித் பிரேமதாச கருத்து வெளியிட்டிருந்தார். மகிந்தவினது இரத்தினபுரிக் கூட்டத்துக்குப் பின்னரே, சஜித் மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசிய மகிந்த, நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வற்புறுத்துவதால், நான் புதிய கட்சியொன்றை உருவாக்க முடிவு செய்துள்ளேன் எனத் தெரிவித்திருந்தார்.

மகிந்தவினது இந்தக்கருத்து வெளிவந்ததையடுத்து சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேன தரப்பினர், சுதந்திரக்கட்சி இந்தவிதம் பிளவுபடுமானால் அது ஐ.தே.கட்சியின் இலகு வெற்றிக்கே வழிவகுக்கும் எனத் தெரிவித்து வருகின்றனர். மகிந்த தனியான கட்சி ஆரம்பித்தால், அது ஐ.தே.கட்சிக்கே சாதகமான வாய்ப்பாக அமையுமென்ற அவர்களது கருத்து சரியாக இருக்குமானால், புதிய கட்சியயான்றை ஆரம்பிக்குமாறு மகிந்தவை சஜித் ஊக்குவித்திருக்க வேண்டும்.





**புதிய கட்சி ஆரம்பிப்பதைக் கைவிடுமாறு சொல்லாமல் சொல்லும் சஜித்**

ஆனால், சஜித்தோ முன்னர் கருடனுக்கு நேர்ந்த நாசம் போன்று மகிந்தவினது புதிய கட்சிக்கும் வரவேற்புக் கிட்டாது போகக் கூடும் என்ற விதத்திலேயே கருத்து வெளியிட்டுள்ளார். ஆதலால் புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதைக் கைவிடுமாறு சஜித் சொல்லாமல் சொல்கிறார் எனக்கருத இயலும். அப்படியானால் ஐ.தே.கட்சிக்காரரான சஜித் பிரேமதாச, சுதந்திரக்கட்சி பிளவுபடுவதை விரும்பாதிருப்பதேன்? சுதந்திரக்கட்சி பிளவுபடுவதால், ஐ.தே.கட்சிக்கு அது வாய்ப்பாய் அமையும் என்ற நிலையில், சஜித் இந்த விதம் சங்கேத மொழியில் கருத்து வெளியிட்டிருப்பதேன்?

சுதந்திரக்கட்சி பிளவுபட்டால், அதனால் ஐ.தே.கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகரிக்குமானால், சஜித் இந்தவிதம் சங்கேதமொழியில் கருடன் கதை கூறியிருக்க மாட்டார். எனவே இதற்குள் ஏதோ இரகசியமொன்று புதைந்துள்ளது. இதனாலேயே சஜித் இந்தவிதம் சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கு கருடன் கதை குறித்து ஞாபகமூட்டியுள்ளார்.

மகிந்த புதிய கட்சியொன்றை உருவாக்குவதால், ஐ.தே. கட்சிக்காரர்கள் ஏன் அச்சப்படவேண்டும்? அதற்கான காரணம் இதுதான். சுதந்திரக்கட்சியின் மைத்திரிபால சிறிசேன தரப்பினர் கூறுவது போன்று, சுதந்திரக்கட்சி பிளவுபடுமானால் ஐ.தே.கட்சிக்கான ஆதரவு அதன் மூலம் அதிகரிக்கப்போவதில்லை. ஆனால் சுதந்திரக் கட்சி பிளவுபடாது தற்போதையது போன்று இரு அணிகளாகத் தொடர்ந்து செயற்படுமானால், அதனால் ஐ.தே.கட்சியின் வெற்றிவாய்ப்பு உறுதி செய்யப்படும். சுதந்திரக் கட்சியைப் பிளவுபடாது தற்போதைய நிலையிலேயே தொடர்ந்தும் செயற்பட வைப்பிக்க சஜித் பிரேமதாச முயற்சி மேற்கொள்வதற்கான காரணம் இதுவே.

நாட்டின் கிராமப்புற சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களில் 95 சதவீதமானோர் மகிந்தவின் விசுவாசிகளாகவே உள்ளனர், மகிந்த புதிய கட்சியொன்றை ஆரம்பித்தால், இந்த 95 சதவீத சுதந்திரக்கட்சி விசுவாசிகளும் மகிந்தவின் பின்னாலேயே அணிதிரள்வர். அவர்களுடன், தற்போது நல்லாட்சி அரசின் போக்குக் குறித்துக் குழப்பமடைந்துள்ள மைத்திரிபால தரப்பு ஆதரவாளர்களும் இணைந்து கொள்வர். அத்தகைய மக்கள் அலை நல்லாட்சி அரசுக்கு எதிரான அணியொன்றாக உருவாகும். அத்தகைய அணி ரணிலின் பிரதமர் பதவிக்கும், ஐ.தே.கட்சி அரசுக்கும் பெரும் சவாலொன்றாக உருவெடுக்கும். மாறாக, மகிந்த புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதைக் கைவிடுவாரானால், ஐ.தே.கட்சி அரசால் நிர்வாகத்தை ஒருவிதத்தில் சமாளித்து முன்னெடுக்கமுடியும்.

**மைத்திரிபால தரப்பால் ஐ.தே.கட்சிக்கோ, ரணிலின் பிரதமர் பதவிக்கோ ஆபத்து இல்லை**

சுதந்திரக்கட்சியின் மைத்திரிபால தரப்பால் ஐ.தே. கட்சிக்கோ, ரணிலின் பிரதமர் பதவிக்கோ, அச்சுறுத்தல் எதுவும் இல்லையென்பதால், மைத்திரிபால தரப்பு மக்கள் மத்தியில் பலமடைவதை ஐ.தே.க விரும்புகிறது. சஜித் பிரேமதாசவின் மேற்குறிப்பிட்ட பொடிவைத்த கதையின் இரகசியம் இதுவே.

மகிந்த புதிய கட்சியை ஆரம்பிக்காதுவிட்டால், சுதந்திரக்கட்சியின் விசுவாசிகளில் பெரும்பாலோர் விரக்தி காரணமாக தேர்தலில் வாக்களிப்பதினின்றும் ஒதுங்கிக் கொள்வர். அந்த நிலையில் ஐ.தே.கட்சியின் வெற்றிவாய்ப்பு உறுதி செய்யப்படும். கடந்த காலத்தேர்தல்களின்போது, விரக்தி காரணமாக ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்களில் பெரும்பாலோர் தேர்தலைப் புறக்கணித்ததாலேயே மகிந்தவால் மேலதிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்ட முடிந்தது.

அந்த வகையில் சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களது விரக்தி நிலையைப் போக்க வேண்டுமானால், மகிந்த இந்த வேளையில், புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். இதனாலேயே புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க வேண்டாமென சஜித் பிரேமதாச தரப்பினர் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

கருடனுக்கு என்ன நடந்ததெனச் சிந்தித்துப் பார்க்குமாறு சஜித் கூறியதன் பின்னணி குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். கருடன் சின்னத்தில், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை லலித் அத்துலத் முதலியும், காமினி திசநாயகாவும் இணைந்து உருவாக்கினர். பிரேமதாசவுடன் முரண்பட்டு ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறி, புதிய முன்னணியை உருவாக்கிய காமினி திஸநாயக, கடைசியில் ஐ.தே.கட்சிக்குத் திரும்பி வந்து, கட்சியின் அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டார். இதைத்தான் கருடனுக்கு ஏற்பட்ட கதி குறித்துச் சிந்திக்குமாறு சஜித் சங்கேத மொழியில் தெரிவித்தாரோ தெரியவில்லை. அதேபோன்ற விதத்தில், புதிய கட்சியயான்றை ஆரம்பித்து தேர்தலில் போட்டியிட்டு பெருவெற்றி பெற்று, மீண்டும் சுதந்திரக்கட்சியில் இணைந்து, மைத்திரிபால சிறிசேனவைத் தோற்கடித்து சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பு மகிந்தவுக்குக் கிட்டக்கூடுமா? சஜித் கூறிய சங்கேத மொழிக் கதையை நினைவு மீட்டிப் பார்க்கும்போது, அந்தவிதம் இடம்பெற வாய்ப்பில்லை எனத் துணிந்து கூற இயலாதுள்ளது.

## யாழ். மாநகரசபை நிர்வாகம் பொறுப்புணர்ந்து செயற்படுமா?

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஏறக்குறைய சகல பகுதிகளிலும் தற்போதைய காலகட்டத்தில் கட்டாக்காலி நாய்களால் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் நிலவுவதை அவதானிக்கமுடிகிறது. குறிப்பாக கடைத் தொகுதிகள் அமைந்துள்ள யாழ்.நகரின் மத்திய பகுதியில் பெரும்பாலும் மாலையில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதன் பின்னர், குறித்த கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் கணிசமான பொதுமக்கள் அச்சத்து டனேயே வீதியில் பயணிக்க வேண்டியுள்ளது. வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் வெளியில் வீசும் மீதியான உணவுப் பொருள்களைப் பங்குபோட நீயோ நானோ எனப் போட்டிபோடும் இந்தக் கட்டாக்காலி நாய்கள் சில சமயங்களில் வீதியால் பயணிக்கும் பாதசாரிகளையும் கடித்துக் குதறிவிடுகின்றன. அண்மையில் எனது நண்பநொருவர் இந்த விதம் கட்டாக்காலி நாயொன்றினால் கடியுண்டு தற்போது குறித்த கட்டாக்காலி நாய்க்கு விலங்கு விசர்நோய் இருக்கக் கூடுமோ என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி(ARV)ஏற்றிக் கொண்டுள்ளார்.

அந்த வகையில் கட்டாக்காலி நாய்களுக்கு விலங்கு நோய் பீடித்து, குறித்த அந்த நாயினால் கடிபடும் பொது மகனொருவர் உரிய விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளத் தவறுவாரானால், குறித்ததொரு கால இடைவெளியில் அந்த நபர் விலங்கு விசர் நோயினால் பீடிக்கப்பட்டு விட்டால், மரணத்தைச் சந்திக்க நேருமேயொழிய அந்த நோய்த் தாக்கத்துக்கு எந்தவித சிகிச்சையாலும் பயன் கிட்டப்போவதில்லை. அத்தகைய பயங்ரமானதொரு நோயே அதுவாகும்.

அந்த வகையில், யாழ். நகரின் 11 சுகாதார பரிசேதகர்கள் பிரிவுகளுக்கு உட்பட்ட வீடுகளில் வளர்க்கப்படும் வளர்ப்பு நாய்களுக்கு, யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினரது ஏற்பாட்டில் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் கீழ் நகரத்தின் பல பகுதிகளிலும் வைத்து ஒரு ஒழுங்கில் இவ்வாரத்தில் தடுப்பூசி ஏற்றப்படுவது வரவேற்கத்தக்கது; பாராட்டுக்குரியது. அதேவேளை ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகருக்குள் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப் படுத்திப் பொது மக்களது பாதுகாப்புக்கு மாநகரசபை நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இத்தால் வேண்டிக் கொள்கின்றேன்.

த.கலைச்செல்வன் வண்ணார்பண்ணை

## தமிழர்களே உங்களுக்குள் பிளவுகள் இனியும் தேவைதானா?

இலங்கைத் தமிழர்கள் பிளவுபட்டு நிற்கும் வரை அவர்களால் தமது இழந்த உரிமைகள் எவற்றையும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது.

கொடிய போர் ஒன்றுக்கு முகம் கொடுத்து அழிவுகளைச் சந்தித்த பின்னரும் நாம் எம்மைத் திருத்திக் கொள்ளாமல் இருக்கின்றோம் என்றால், எமது பலவீனம் எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இன்று அரசியலில் சிண்டு முடிகின்ற வேலைகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர். சில ஊடகங்கள்கூட இதில் முனைப்புடன் ஈடுபடுகின்றன. இவற்றையெல்லாம் நம்புவதற்கு ஆள்கள் இல்லாமலும் இல்லை. ஆனால் இத்தகைய பிளவுகள் முழு இனத்தையுமே பாதித்துவிடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உலகில் பிழை விடாதவர்கள் எவருமில்லை. அதைப்போன்று தாம் விடுகின்ற பிழைகளை நியாயப் படுத்துபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் இத்தகையவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதுதான் மிக மோசமான செயலாகும்.

ஒற்றுமையே பலம் என்பதை இலங்கைத் தமிழர்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அற்பத்தனமான விடயங்களையெல்லாம் பெரிது படுத்தி அதில் குளிர்காய நினைப்பது ஓர் இனத்துக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாகும்.

இனிமேலாவது எம்மவர்கள் இதைப் புரிந்து செயற்பட வேண்டும். இல்லையேல் முழு இனமும் பாதிக்கப்பட்டுவிடும்.

மா- காந்தன் ஊரெழு

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் உயிரிழப்புக்கள் மத்தியில் உங்களால் எவ்வாறு தூங்க முடிகிறது?

## அசாத்திடம் கேட்டார் பத்திரிகையாளர்



டமஸ்கஸ், நவ.8
சிரியாவில் தினம்தினம் நடக்கும் போர்களால் பல அப்பாவிச் சிறுவர்கள் உயிரிழந்துகொண்டிருக்கிறார்கள். இத்தகைய ஓர் அசாதாரண சூழ்நிலையில் உங்களால் எவ்வாறு தூங்க முடிகிறது என்று சிரிய ஜனாதிபதி அசாத்திடம் பன்னாட்டு ஊடகமான சன்டே ரைம்ஸின் செய்தியாளர் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார்.
குறித்த ஊடகத்துக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே இவ்வாறான கேள்விகளை அசாத் எதிர்கொண்டார். குறித்த கேள்விக்கு சிரிப்பைத் தனது முதல் பதிவாக வழங்கிய அசாத், இவை ஆயுததாரிகளின் தவறுகள். சிரியாவில் நடப்பது போர். அறப்பணி அல்ல. இந்தக் கேள்விக்கான அர்த்தம் எனக்கு புரிகிறது. நான் தினமும் உறங்குகிறேன், வேலை செய்கிறேன், உணவு உண்கிறேன், எனது அன்றாட உடற்பயிற்சியிலும் ஈடுபடுகிறேன். போரில் அப்பாவிகள் காயமடைவதும் இறப்பதும் வழக்கமான ஒன்று. அலெப்போவில் உள்ள ஆயுததாரிகள் பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். நிலமையைக் கட்டுக்குள் கொண்டு வர எம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என அசாத் தெரிவித்தார் என சன்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டது. (ம-எ)



# ஈராக்கில் இரட்டைத் தாக்குதல் 25 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

பக்தாத், நவ. 8
ஈராக்கில் நோயாளிகள் காவு வண்டியை வைத்து மேற்கொள்ளப்பட்ட இரு தற்கொலைத் தாக்குதல்களில் 25 பேர் உயிரிழந்தனர்.
நோயாளிகள் காவு வண்டிகள் இரண்டு கடத்தப்பட்டு வெடி பொருள் நிரப்பப்பட்டு குறித்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. புனித பயணம் மேற்கொண்ட ஷியாப்பிரிவினரைக் குறிவைத்து ரிக்ரிட் மற்றும் சமாரா நகர்களிலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 25 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 100 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

# அதிர்ந்தது அமெரிக்கா



வொஷிங்டன், நவ. 8
அமெரிக்காவில் மத்திய ஒக்லகாமா பகுதியில் நேற்று முன்தினம் நில அதிர்வு ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 5 என பதிவான இந்த அதிர்வு கட்டடங்களைச் சேதமடையச் செய்தது.
குறித்த பகுதியில் கடந்த வாரத்தில் மாத்திரம் சிறிய அதிர்வுகளாக 19 அதிர்வுகள் பதியப்பட்டன. ஆனாலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற அதிர்வு பலமானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. (ம-எ)

# இந்தியாவில் துயரம்

# தொழுநோயால் உயிரிழந்த மனைவியை 60 கிலோ மீற்றருக்கு காவிச் சென்ற நபர்



தொழுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த தனது மனைவியின் சடலத்தை 60 கிலோ மீற்றர் தூரத்துக்கு தள்ளுவண்டியில் வைத்து முதியவர் ஒருவர் காவிச் சென்ற பரிதாப நிலைமை இந்தியாவில் நடந்துள்ளது.
தெலுங்கானா மாநிலத்தின் மேடக் மாவட்டத்திலுள்ள குக்கிராமத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீராமுலு. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இவர் ஹைதராபாத் நகரில் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தார். ஸ்ரீராமுலுவின் மனைவி கவிதாவும் தொழுநோயாளி. அவரும் பிச்சை எடுப்பதையே தொழிலாக வைத்திருந்தார். கடந்த வெள்ளிக்கிழமை அவர் உயிரிழந்தார். அவரது உடலை தனது சொந்த ஊரில் அடக்கம் செய்ய விரும்பிய ஸ்ரீராமுலு உதவிகேட்டு நோயாளர் காவு வண்டிகளை அணுகியபோது கேட்கப்பட்ட வாடகைத் தொகையைக் கொடுக்க இயலாத காரணத்தால் ஒரு தள்ளுவண்டியில் மனைவியின் சடலத்தை வைத்து கிட்டத்தட்ட 60 கிலோ மீற்றர் தனது ஊரை வந்தடைந்தார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இணையத்தளங்களிலும் இந்த விடயம் விரைவாகப் பரவி வருகிறது. (ம-எ)

# ஹிலாரி குற்... வெளியான...

## அமெரிக்கத் தேர்தல் இ... திரில் நிலை உச்சக்கட்ட...



வொஷிங்டன், நவ. 8
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள மின்னஞ்சல் சர்ச்சையில் ஹிலாரி கிளிங்டன் குற்றம் இல்லாதவர் என அமெரிக்க புலனாய்வுத்துறை நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பு ஹிலாரிக்கான வாய்ப்புக்களை மேலும் அதிகரித்ததுடன் டொனால்ட் ட்ரம்ப்புக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இதனால் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று நடத்தப்படுகிறது. அமெரிக்காவின் இரு பெரும் கட்சிகளில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப்பும், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் பிரச்சாரங்கள் அனல் பறந்து முடிவுக்கு வந்துள்ளன. அமெரிக்காவில் தற்போது ஆட்சி அமைத்துள்ள கட்சியான ஜனநாயக் கட்சியின் வேட்பாளர் என்ற காரணத்தாலும், அமெரிக்காவின் அயலுறவுத் துறை அமைச்சராக ஏற்கனவே பதவி வகித்த காரணத்தாலும் ஹிலாரிக்கு அதிகளவான ஆதரவு ஆரம்பத்தில் இருந்தது. ஆனால், அவர் அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த காலப்பகுதியில் அரச தேவைகளுக்காக தனது தனிப்பட்ட மின்னஞ்சலை பயன்படுத்தியமையால் அவர் மீது தற்போது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அரச தேவைகளுக்காக தனது தனிப்பட்ட மின்னஞ்சலைப் பயன்படுத்தியமையை ஹிலாரி ஏற்றுக்கொண்டாலும் ஊழல் ஒன்றும் செய்யவில்லை என ஹிலாரி தெரிவித்தார். இதனையடுத்து நீதியான தேர்தலை உறுதிப்படுத்தும் நோக்கில், குறித்த விடயம் தொடர்பாக ஹிலாரி விசாரிக்கப்படவுள்ளார் என்று அமெரிக்க புலனாய்வுத் துறை அறிவித்தது. இதனால் ஹிலாரி திடீர் சரிவுகண்டார். ட்ரம்புக்கான வாய்ப்புக்கள் படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருந்த நிலையில், ஹிலாரி குற்றமற்றவர் என அமெரிக்க புலனாய்வுத் துறை நேற்றுமுன்தினம்



# கப்பல் உடைப்பு தொழிற்சாலையில் தீ உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆனது

பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானின் கடானி துறைமுகத்தில் காலாவதியான கப்பல்களை உடைக்கும் தொழிற்சாலை அமைந்துள்ளது. கடந்த புதன்கிழமை இங்கே பெரும் தீ விபத்து ஏற்பட்டது. விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 25 ஆக அதிகரித்தது.
ஓர் எண்ணெய்க் கப்பலின் கொள்கலனை இயந்திரத்தால் வெட்டி எடுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது எரிபொருள் சிலின்டர் வெடித்துத் தீ பிடித்தது. தீயில் சிக்கி சம்பவ இடத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டிருந்தது. மருத்துவமனையில் மேலும் 15 பேர் உயிரிழந்ததால் சாவு எண் ணிக்கை 25 ஆக அதிகரித்தது. (ம-எ)

# டில்லி... காற்றி...

புதுடில்லி...
இந்தியா...
வரையில்...
தலை அ...
வாழ்க்கை...
உலக அ...
பட்டியலி...
அந்த நக...
கள்ஏற்க...
முடிந்த...
நிலைமை...
எதிர்வரு...
வுக்கு கா...
சொல்ல...
படுத்த டி...
சரமாகக்...
பாடசாலை...
வழங்கப்...
கள் மூடப்...
முடக்கப்...
கரிப்புக்...
வுள்ளன...
மிடப்பட்...
டில்லியில்...
அப்பகுதி...
யாக்கியு...
களை செ...
மோதுகி...
செய்தி வெ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ற்றமற்றவர்
# னது தீர்ப்பு

## ன்று
## ம்





தீர்ப்பு வெளி யிட்டது.
புலனாய்வுத் துறையின் முடிவுக்கு ஹிலாரியும் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியின் தலைமைகளும் தமது வரவேற்றைப் தெரிவித்தனர். ஆனால் விடயம் முழுமையாக விசாரிக்கப்படவில்லை என டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்தார்.

(ம-எ)

# பத்திரிகைகளுக்கு அஞ்சலி செலுத்தி துருக்கி மக்கள் விநோத ஆர்ப்பாட்டம்




அங்காரா, நவ. 8
துருக்கியில் ஊடகங்கள் பல முடக்கப்பட்டதை கண்டித்து கடந்தவாரம் பொதுமக்கள் பலர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். முடக்கப்பட்ட பத்திரிகை நிறுவனங்கள் இறுதியாக பிரசுரித்த பிரதிகளுக்கு அஞ்சலி செலுத்தி தமது ஆதங்கத்தை அவர்கள் வெளிப்படுத்தினர்.

துருக்கியின் தற்போதைய ஜனாதிபதியான எர்டகனுக்கு எதிராக கடந்த ஜூலை இராணுவப்புரட்சி நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இளைஞர்கள், பொதுமக்கள் திரண்டு இராணுவத்தின் சதியை முறியடித்தனர். இதனையடுத்து புரட்சிக்கு வித்திட்ட, உடந்தையாக இருந்த பலர் கைது செய்யப்பட்டனர். 10 ஆயிரத்தக்கும் அதிகமானவர்களுக்கு அண்மையில் சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சில ஊடகங்களும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றன. துருக்கிக்கு எதிராக அமெரிக்காவில் இருந்து சூழ்ச்சி செய்யும் கிலின் என்பவருடன் தொடர்பு வைத்துள்ளன என குற்றம் சுமத்தி அவ்வாறு சந்தேகிக்கப்பட்ட ஊடகங்களையும் அரசு முடக்கியது. ஆனால் ஊடகங்களை முடக்கியமையைக் கண்டித்து துருக்கி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த செய்தி நிறுவனங்கள் இறுதியாக அச்சடித்த பிரதிகளுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

(ம-எ)




கொசோவோ நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது சொந்த முயற்சியில் லம்போகினி காரைத் தயாரித்து பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தார். டிரிட்டொன் செல்மனி என்ற குறித்த இளைஞர் பழைய கார்களின் பாகங்களைப் பயன்படுத்தியே குறித்த காரைத் தயாரித்தார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# மோசமான நாடாக ஏமன்

உலகின் மோசமான நாடாக பட்டியலிடப்பட்டது ஏமன்.
லண்டனைதளமாகக்கொண்டு இயங்கி வரும் லடுகம் என்ற ஆய்வு நிறுவனம் உலகின் மோசமான நாடுகளைப் பட்டியலிட்டது. ஆட்சி, சுகாதாரம், பாதுகாப்பு, தனிமனித சுதந்திரம், இயற்கை வளங்கள், பொருளாதாரம் ஆகியனவற்றை வைத்து மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆய்வில் உலகின் மோசமான நாடாக ஏமன் தெரிவிக்கப்பட்டது. இரண்டு முதல் ஐந்து வரையிலான இடங்களை முறையே ஆப் பானிஸ்தான், மத்திய ஆபிரிக்க குடியரசு, சூடான், கொங்கோ ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

(ம-எ)

# யில் அசாதாரண நிலை
# றின் மாசடைவே காரணம்

லி, நவ. 8
பாவின் தலைநகர் டில்லியில் இது இல்லாத அளவுக்கு காற்று மாசடைந் அடுத்து பொதுமக்களின் இயல்பு கை பாதிப்படைந்துள்ளது.
அளவில் காற்று மாசடைந்த நாடுகள் லில் டில்லிக்கு முக்கிய இடமுண்டு. நகரில் காற்று மாசடைதல் பிரச்சினை கனவே இருந்த நிலையில், நடைபெற்று த தீபாவளிக் கொண்டாட்டங்கள் யை இன்னும் மோசமாக்கியுள்ளன. ரும் வாகனங்களைத் தெரியாத அள காற்றில் புகை கலந்துள்ளது எனச் லப்படுகிறது. நிலைமையைக் கட்டுப் டில்லி அரசு நேற்றுமுன்தினம் அவ க்கூடி சில முடிவுகளை எடுத்துள்ளது. லைகளுக்கு சில தினங்கள் விடுமுறை கப்பட்டதுடன், அனல் மின் நிலையங் டப்பட்டன. நகரின் பல கட்டுமானங்கள் ப்பட்டன. பிர தான வீதிகள் பெரிய சுத்திக் கருவிகள் மூலம் சுத்திகரிக்கப்பட ன. செயற்கை மழை பொழிய திட்ட ட்டுள்ளது.
யில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை நதி மக்களின் சுகாதாரத்தை கேள்வி புள்ளது. காற்றுச் சுத்திகரிப்பு முகமூடி கொள்வனவு செய்ய மக்கள் அலை கின்றனர் என இந்திய ஊடகங்கள் வெளியிட்டன.

(ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகர கிறிஸ்தவ ஆளுநர் பசுகி ஜகாஜா இஸ்லாத்துக்கு எதிராகவும் குரானுக்கு எதிராகவும் விமர்சனம் விடுத்த அடுத்து குறித்த நகரில் கடந்த சனிக்கிழமை இஸ்லாமியர்களால் பல்லாயிரக் கணக்கானோரின் பங்குபற்றலுடன் மிகப்பெரும் போராட்ட நடத்தப்பட்டது.

(ம-எ)

# நவம்பர் மாத ராசி பலன்



## கும்பம்

உள்ளத்தில் அழுதாலும், உதட்டால் சிரிக்கும் கும்பராசிக்காரர்களே, உங்கள் ராசி நாதன் சனிபகவான் பத்தாவது வீட்டிலே கேந்திரபலம் பெற்று அமர்ந்திருப்பதால் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அதை சமாளிக்கசுவடிய மனோபலம் உங்களுக்கு கிடைக்கும். எதிர்ப்புக்களையும் தாண்டி நீங்கள் முன்னேறுவீர்கள். கடின உழைப்பாலும் இலக்குகளை எட்டிப்பிடிப்பீர்கள். செலவுகள் அடுக்கடுக்காக வந்தாலும் அதற்கு தகுந்தால்போல வருமானமும் வந்து கொண்டே தான் இருக்கும். வெளிமாவட்டத்தில் இருப்பவர்கள், வெளிநாட்டிலிருப்பவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லக் சுவடிய வாய்ப்பும் உண்டாகும். உங்களின் பிரபல யோகாதிபதியாகிய சுக்கிரன் சாதகமான வீடுகளில் சென்று கொண்டிருப்பதனால், பழைய சிக்கல்கள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறன் அதிகரிக்கும். வீட்டை விரிவுப்படுத்தி கட்டுவதற்கு பண உதவி கிடைக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் இருந்து வந்த கருத்து மோதல்களெல்லாம் விலகும். நண்பர்கள் வீட்டு வைபவங்களை முன்னின்று நடத்துவீர்கள். புதனும் சாதகமாக சென்று கொண்டிருப்பதனால், மகனுக்கு வேலை கிடைக்கும், மகளுக்கு திருமணம் முடிய வாய்ப்பிருக்கிறது. ஏழாவது வீட்டில் ராகு நின்றுக் கொண்டிருப்பதனால் மனைவிக்கு உடல்நிலை பாதிக்கும். மனைவிக்கு வேலைச் சுமையும் இருந்து கொண்டேயிருக்கும். உங்களுடைய ராசிக்குள்ளேயே கேது நின்றுக்கொண்டிருப்பதனாலும் எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். செவ்வாய் 12 இல் மறைந்திருப்பதால் மற்றவர்களிடம் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம். பணம் வாங்கித் தருவதிலும் குறுக்கே நிற்க வேண்டாம். பிணைக்கு கையொப்பம் இட வேண்டாம். சொத்து வாங்குவது, விற்பது எதுவாக இருந்தாலும் எச்சரிக்கையாக இருங்கள்.

**பெண்களுக்கு**

கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். உணவுக் கட்டுப்பாடு தேவை உடல் பருமனாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் சுவுடுதல் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளை போராடி வசூலிக்க வேண்டி வரும். பங்குதாரர்களுடன் சின்னச் சின்ன கருத்து மோதல்கள் வரும். உத்யோகத்திலே புது சலுகைகளும் கிடைக்கும். அதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் பேசுவார்கள். கலைஞர்கள் சின்னச் சின்ன வாய்ப்புகளாக இருந்தாலும், மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள். சின்னச் சின்ன ஆசைகள் நிறைவேறும் மாதம் இது.

## மீனம்

அருகிலிருப்பவர்களின் குறை, நிறைகளை சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தும் மீனராசிக் காரர்களே! உங்களுடைய ராசிநாதன் உங்களுடைய ராசியை பார்த்துக் கொண்டேயிருப்பதனால் சுறுசுறுப்பாவீர்கள், தடைகளெல்லாம் விலகும், தொட்டதெல்லாம் துலங்கும், பணவரவும் திருப்திகரமாக இருக்கும். கல்யாண முயற்சிகளும் பலிதமாகும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். பெரிய பதவிகளுக்கு தேர்தெடுக்கப்படுவீர்கள். புகழ், கௌரவம் ஒரு படி உயரும். ராகு பகவான் 6 ஆவது வீட்டில் நின்றுக் கொண்டிருப்பதனால் பழைய கடனில் ஒருபகுதியைபைசல்செய்யவழிகிடைக்கும். வெளிநாட்டிலிருப்பவர்களால் சில உதவிகளும் கிடைக்கும். சுக்கிரன் சாதகமான வீடுகளில் சென்றுக் கொண்டிருப்பதனால், புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு, தைரியம் சுவுடும். தன்னிச்சையாக பெரிய முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள். செவ்வாய் சாதகமாக இருப்பதால், எல்லோரையும் சமாளிக்கக்சுவுடிய சக்தி கிடைக்கும். சிலருக்கு புகழ் பெற்ற நிறுவனங்களில் சென்று வேலை சேரக்சுவுடிய அமைப்பு உண்டு. சகோதரங்களும் அரவணைப்பாக இருப்பார்கள். வீடு வாங்குவது விற்பது நல்ல விதத்திலே முடிவடையும். புதுத் தொழில் தொடங்குவீர்கள். கேது 12 ஆவது வீட்டில் நிற்பதனால் ஆன்மிகப் பயணம் சென்று வருவீர்கள். முடிந்து வைத்திருந்த காணிக்கையை செலுத்தி பிரார்த்தனையை முடிப்பீர்கள்.

**பெண்களுக்கு**

திருமணம் சுவுடி வரும். அயல்நாட்டு வேலை எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு அங்கு செல்லக்சுவுடிய அமைப்பும் உண்டாகும். வியாபாரத்திலே சில மாற்றங்களை கொண்டு வருவீர்கள். நல்ல அனுபவமிக்க வேலையாள்களைக் கொண்டு வருவீர்கள். உத்தியோகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். பெரிய பொறுப்பு, பதவியில் அமர்வீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்து கிடைக்காமல் போன பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் இப்போது எதிர்பார்க்கலாம். கலைஞர்கள் உங்களுடைய படைப்புகளுக்கு விருதுகள் பரிந்துரை செய்யப்படும். சாதித்துக் காட்டும் மாதம் இது.

**நாளை** ஐப்பசி-24
புதன்கிழமை -09.11.2016
திதி: நவமி மு.ப. 07.47
நட்சத்திரம்: சதயம் பி.இ.12.01
ராகுகாலம்:12.05-01.35 வரை
சுபநேரம்: 04.35-06.05 வரை

# உலகின் பார்வை முழுவதும் இப்போது அமெரிக்கா பக்கம்

உலக அரசியலில் முக்கியமான தருணம் நடைபெறவுள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தெரிவு உலக அரசியல் அரங்கில் பிரதான விடயமாகும். ஆனால் இம்முறைத் தெரிவுமட்டும் வழமைக்குமாறாக பல மடங்கு சுவாரஸ்யமுள்ளதாக மாறியுள்ளது. ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஹிலாரிக்கு அரசியல் புதிதல்ல. ஆனால் குடியரசு கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்புக்கு அவ்வாறில்லை. ட்ரம்ப் அடிப்படையில் சிறந்த வர்த்தகர். உலக நாடுகள் பலவற்றில் அவரது வியாபாரங்கள் நடைபெறுகின்றன. அத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் அமெரிக்க மக்கள் மத்தியில் அவர் பிரபலமடைந்திருந்தார். ட்ரம், மூன்று தலைமுறையாக செல்வந்தர்களாக வாழ்ந்த குடும்பம். ஆயினும் அவரது நகர்வுகள் பல மிக நுட்பமான முறையில் இருந்தன. 2011 ஆம் ஆண்டு ஒபாமா அமெரிக்காவில் பிறக்கவில்லை என்ற பரபரப்பு தகவலை வழங்கி, பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தார். அவர் ஆதாரமாக முன்வைத்த கருத்துக்களை முறியடிக்க ஒபாமா தனது பிறப்பு சான்றிதழை ஆவணப்படுத்தினார். உலகின் பல தரப்பிலும் இருந்து ட்ரம்ப் விமர்சிக்கப்பட்டதுடன், அமெரிக்க அரசியலில் தடம் பதிக்க ஆரம்பித்தார்.

இந்த நிலையில் அமெரிக்க தேர்தல் களத்தில் பெண்களின் அபிமானம் பிரதானபங்கு வகித்துள்ளது. சினிமா, தொலைக்காட்சி பிரபலங்களின் வகிபங்கும் வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது. உலக தொழில் துறைகளில் மொடலிங், சினிமா அதியன அதிக இலாபம் ஈட்டும் தறைகளாகும். ட்ரம்பின் மனைவி முன்னாள் மொடல் அவார். சில அமெரிக்க ஊடகங்கள் ட்ரம்பின் மனைவியின் இளைமைக்கால ஒளிப்படங்களை வெளியிட்டன. இந்த வெளியீடு ஒரு பகுதியினருக்கு முகச் சுளிப்பையும், இன்னொரு பகுதியினருக்கு அதங்கத்தையும் ஏற்படுத்தியது. குறிப்பாக மேல் தட்டு மக்களிடையே கோபத்தை தூண்டியது. உடல் அழகு பேணுவதும், அவற்றை ஆவணப் படுத்தவதும் பெருமைக்குரிய விடயமாக கருதும் சூழலில் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் மெலியனா ட்ரம்புக்கு பாராட்டுக்களைக் குவித்தன.

இன்னொரு பகுதியில் ஹிலாரி சினிமா பிரபல்யங்களுடன் தனது பரப்புரைக் கூட்டங்களை நடத்தினார். பொது மக்களைக் கவரவும், தனது கருத்துக்களை ஆணித்தரமாகப் பகிரவும் அவர்களைப் பயன்படுத்தினார். அரசியலைத் தீர்மானிக்கும் பிரதான துறையாக சினிமா, ஊடகம் காணப்படுகின்றது. மக்களின் மனதில் ஆழப்பதியும் செயற்பாடுகளை இவை மேற்கொள்கின்றன. பன்னாட்டு ஊடகங்களில் சில நடுநிலையாகவும், சில பக்கச் சார்பாகவும் செயற்படுவதை செய்திகளைப் பிரசுரித்த விதத்தில் காணக்கூடியதாக இருந்தது.

வழமைக்கு மாறாக அதிக பரபரப்பை இம்முறைத் தேர்தல் ஏற்படுத்தி இருப்பது தான் உண்மை. ஹிலாரி வெற்றி பெற்றால் உலக அரங்கில் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படப் போவது இல்லை என்பது நிபுணர்கள் கருத்து. ஆனால் ஆயுததாரிகளுக்கு எதிரான போர்கள் தொடர்வதுடன், அமெரிக்க - ரஷ்ய நாடுகளிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை மேலும் வீரியமடைந்து 3 ஆம் உலகப் போரைத் தூண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.




ஆனால், ட்ரம்ப் வெற்றி பெற்றால் உலக அளவில் பெரிய மாற்றங்கள் நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாற்றங்கள் கட்டாயம் ஏற்படும். ஆனால், அவற்றில் நன்மை தீமைகளைக் கூற முடியாது என நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

உலகளாவிய கொள்கையை ட்ரம்ப் வெளிப்டையாக எதிர்க்கிறார். ஆனால் ஹிலாரி ஆதரிக்கிறார். வர்த்தகராக ட்ரம் பல திட்டங்களை முன்வைத்துள்ளார். ஆனால் ஹிலாரி முன்னாள் ஜனாதிபதியின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கதாகும். நேரடி விவாதத்தில் வேலைவாய்ப்பு வரிகள் தொடர்பான திட்டத்தை ஹிலாரி விவரித்து சொல்லும்போது, இடைமறித்த ட்ரம்ப், 30 வருடங்களாக இந்தப் பிரச்சினைகள் உமக்குத் தெரியவில்லையா, தற்போது ஜனாதிபதியானால் மட்டும் இதனை நிறைவேற்றப் போகிறீரா என கேள்வி எழுப்பினார். அதற்கு அவர் பொருத்தமான பதிலைக் கூறாமல் ஆட்சி மாற்றங்களைச் சாடினார். ஆனால் ட்ரம்ப், ஒபாமாவும் அவ்வாறுதானா என்று கேட்டபோது , ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட திட்டங்கள் இருக்கும் என மிக நூதனமான முறையில் தப்பித்தார்.

பல வருடங்களாக அரசியல் பின்னணியுடன் எந்த மாற்றுத் திட்டங்களை அறிவிக்காமல் ஹிலாரியும், முழுமையாக மாற்றத்தையும், புதிய திட்டங்களையும் முன்வைத்து புதிய அரசியல் பிரவேச வாயிலில் ட்ரம்பும் உள்ளனர். தேர்தல் முடிவுக்காக, பன்னாட்டு ஊடகங்கள், நாடுகள், ஆயுதக் குழுக்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு என்பன கதிரை நுனியில் இருந்து காத்துக்கொண்டுள்ளனர் - அமெரிக்கர்களின் தெரிவுக்காக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பணத்தினை ஈட்டித்தரும் கொடித்தோடை (பசன் புறூட்)

ந.லோகதயாளன்

உள்ளூர்க் குடிபானங்களை ஊக்குவிக்கும் நோக்கில் இன்றுவரை சேதனப் பசளைகளை மட்டுமே உபயோகித்து கொடித்தோடைப் பயிர்ச் செய்கை நெடுங்கேணிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தப் பயிர்ச் செய்கையில் நீண்டகால அனுபவம் மிக்கவரும், சேதனப் பசளைகளை மட்டுமே பயன்படுத்தித் திருப்திகரமான விவசாயச் செய்கையை மேற்கொண்டவருமான நெடுங்கேணி-ஒலுமடுவைச் சேர்ந்த சுப்பையா சந்திரன் (வயது-43) எனும் விவசாயி மாகாண விவசாயத் திணைக்களத்தின் புலைமைப்பரிசிலில் தேர்வாகி அண்மையில் தாய்லாந்து சென்று வந்தார். இது தொடர்பில் அவர் எமது நாளிதழுக்குத் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு வருமாறு-

வெளிநாட்டுக் குடிபானங்களையும் தென்னிலங்கையிலிருந்து வரும் பல்தேசியக் கம்பனிகளின் குடிபானங்களையும் அதிக விலையில் வாங்கிப் பகட்டுக்காக அருந்துகின்றோம். இவற்றை அருந்துவதால், உடனடித் தேவை வேண்டுமானால் நிறைவு செய்யப்படலாம். ஆனால், மிகவிரைவில் உடலில் ஏற்படும் மாற்றங்களும் அதன் பக்கவிளைவுகளும் ஆபத்தானவை. உதாரணமாக, இந்த மென்பானங்களை அதிகளவில் அருந்தும் ஆண்களின் வயிறு விரைவில் பெருத்துவிடுகிறது.

அதனை விட நீரிழிவு உள்ளிட்ட நோய்களும் ஏற்படும். இவற்றால் ஏற்படும் ஆபத்துக்களை விளக்குவதற்கு தற்போது சமூக வலைத்தளங்களில் பரவும் படங்களைப் பார்க்கும்போது அச்சமாகவே உள்ளது. இதனாலேயே உள்ளூர்ப் பானங்களை அதிகரிக்கும் முனைப்பில் ஈடுபட்டுள்ளோம்.

எம்மத்தியில் உடனடிப் பானங்களாகப் பயன்படுத்தக்கூடிய பழவகைகள் பல உண்டு. எலுமிச்சை, தோடம்பழம் போன்றனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவற்றைப் போன்றே கொடித்தோடைச் சாறும் உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கிறது. இந்தப் பழச்சாறுகள் பக்கவிளைவுகள் அற்றவை.

கொடித்தோடையைப் போர்க்காலத்தில் இருந்தே பயிரிட்டேன். ஆனால், இம்மரங்கள் அனைத்தும் போர் காரணமாக அழிவடைந்தன. தற்போது மீளக் குடியமர்ந்த பின்பு 2011ஆம் ஆண்டு முதல் இந்தச் செய்கையை மேற்கொள்வதற்காக நான் உட்பட எமது கிராமத்தில் பலர் முயன்றோம். இறுதியில் 2014 இறுதிப் பகுதியில் ஒரு நிறுவனத்தின் அனுசரணையில் இதனை ஆரம்பித்தோம். தற்போது நெடுங்கேணியில் மட்டும் 50பேர் இச் செய்கையை மேற்கொண்டு வருகின்றோம்.

குறித்த பயிர்ச் செய்கைக்காக அரை ஏக்கர் நிலத்தில் சுமார் 200 செடிகளை மட்டுமே நட முடியும். ஏனெனில், ஒவ்வொரு செடிகளுக்கு இடையிலும் 14 அடி நீளமும் 8 அடி அகலமும் இடைவெளி இருக்க வேண்டும். அதேபோல் செடியை நடும் குழி 2 அடி நீளமும் 2 அடி அகலமும் உள்ளதாக இருக்க வேண்டும். 3 அடி ஆழமாக அகழப்பட்டுக் குழியை முழுமையாகச் சேதனப் பசளையால் நிரவ வேண்டும். இவ்வாறு நிரவி நடப்படும் செடிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு எந்த விதமான பசளைகளும் தேவையில்லை.

இந்தச் செடிகளுக்காக 40 தூண்கள் மூலம் பந்தல் அமைத்து அவற்றைப் படர விடுவதன் மூலம் போதிய வளர்ச்சியை அவை அடையும். பயிர் நாட்டிய காலத்திலிருந்து 6 மாதங்களில் பழங்களை அறுவடை செய்ய முடியும். இந்தச் செடிகளுக்கு முழுமையான-தரமான பராமரிப்புக்காக அரை ஏக்கருக்கு சகல செலவுகளுக்கும் 90 ஆயிரம் ரூபா போதுமானது.



இந்தப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு 7ஆம் மாதம் முதல் அறுவடையை ஈட்ட முடியும். இந்த அறுவடையைத் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கு ஈட்டிக்கொள்ளலாம். இவ்வாறு அறுவடை செய்யப்படும் பழங்களைச் சந்தைப்படுத்துவதில் கூட எந்தவிதமான நெருக்கடிகளும் இல்லை. வியாபாரிகள் எம்மை நாடிவந்து பழங்களைக் கொள்வனவு செய்கின்றனர். பெரிய பழங்கள் ஒரு கிலோ 160 ரூபாவுக்கும், சிறிய பழங்கள் 60 ரூபாவுக்கும் கொள்வனவு செய்கின்றனர்.

அரை ஏக்கரில் இதனைப் பயிரிட்ட ஒரு விவசாயியால், ஆண்டு ஒன்றுக்குப் பெரிய பழங்கள் 600 தொடக்கம் 800 கிலோ வரையிலும் சிறிய பழங்கள் ஆயிரம் முதல் 1300 கிலோ வரையிலும் ஈட்டிக்கொள்ள முடியும். இதனால் போதிய வருமானம் கிடைப்பதுடன் உள்ளூர்ப் பழரச பானத்தையும் அதிகரிக்க முடியும். இதேவேளை, பயிர்ச் செய்கையின் இரண்டாவது ஆண்டிலிருந்து கொடிகளைப் பராமரிப்பதற்கும் நீர் பாய்ச்சுவது மற்றும் பராமரிப்புக்கும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 60 ஆயிரம் ரூபா செலவு ஏற்படும். அந்தக் காலப்பகுதியில் அறுவடையும் கிடைக்கப் பெறுவதனால், நிதி நெருக்கடி ஏற்படாது.

இயற்கை முறையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையில் அதிக நோய்த் தாக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. சிலவேளைகளில் மட்டும் இலை உருட்டி அல்லது புழுத் தாக்கம் ஏற்படும். அப்போது, எந்தவிதமான இரசாயன மருந்துகளையும் பயன்படுத்தாது வேப்பஞ்சாறு, வேப்பெண்ணெய், மஞ்சள் போன்ற பதார்த்தங்களின் கரைசலே பயன்படுத்துகின்றோம். இவை அதிக விலைச் செலவும் அற்றவை. இருப்பினும், இவற்றிலுள்ள நெருக்கடிகளாக இந்தப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு ஒரு மாதத்துக்குள் அமைக்க வேண்டிய பெரிய பந்தலுக்காக 40 கப்புகளும் பல குறுக்கு மரங்களும் பெற்றுக்கொள்ள வேண்டும். அவை எமது பகுதியில் போதியளவு உள்ள போதிலும், அவற்றைத் தறிப்பதற்கு எமக்கு அனுமதி இல்லை. அதிக விலை கொடுத்து இவற்றைப் பெறும் நிலையில் உள்ளோம்.

இந்தத் திட்டத்தை ஊக்குவித்த யு.எஸ். நிறுவனம்- 200 பழக்கன்றுகள், 14 சிமெந்துத் தூண்கள், 20 கிலோ கட்டுக் கம்பி என்பனவற்றை இலவசமாக வழங்கியது. ஏனைய மரங்களை நாம் பணம் கொடுத்தே பெற்றுக்கொண்டோம். தற்போது நெடுங்கேணிப் பகுதியில் அநேக விவசாயிகள் சேதனப் பசளையின் மூலமே மரக்கறிகள், பப்பாசிப் பழங்கள் மற்றும் கொடித் தோடைச் செய்கையில் ஈடுபடுகின்ற னர்-என்றார்.

அரை ஏக்கரில் இதனைப் பயிரிட்ட ஒரு விவசாயியால், ஆண்டு ஒன்றுக்குப் பெரிய பழங்கள் 600 தொடக்கம் 800 கிலோ வரையிலும் சிறிய பழங்கள் ஆயிரம் முதல் 1300 கிலோ வரையிலும் ஈட்டிக்கொள்ள முடியும். இதனால் போதிய வருமானம் கிடைப்பதுடன், உள்ளூர்ப் பழரச பானத்தையும் அதிகரிக்க முடியும். இதேவேளை, பயிர்ச் செய்கையின் இரண்டாவது ஆண்டிலிருந்து கொடிகளைப் பராமரிப்பதற்கும் நீர் பாய்ச்சுவது மற்றும் பராமரிப்புக்கும் ஆண்டு ஒன்றுக் குச் சுமார் 60 ஆயிரம் ரூபா செலவு ஏற்படும். அந்தக் காலப்பகுதியில் அறுவடையும் கிடைக்கப் பெறுவதனால், நிதி நெருக்கடி ஏற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம்

## தீட்டுவோம் வாங்க....





சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

# நம் உடலை அறிவோம்!



- பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வது.
- ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்.
- மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.
- மனித மூளையில் 6 கிராம் அளவுக்கு தாமிரம் உள்ளது.
- ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீற்றர்.
- நமது குருதி ஒரு நாளில் 30 கோடி கி.மீ பயணம் செய்கிறது.
- நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது.
- நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.
- மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம்.
- ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் குருதியின் அளவு 5 லிட்டர்.
- கைரேகையைப்போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
- சாவுக்குப் பிறகும் கூட நகத்துக்கு ஒன்றுமே ஆகாது.



# வரலாற்றில் இன்றைய தினம்

1602 - ஒக்ஸ்போட் பல்கலைக்கழக போட்லியன் நூலகம் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.

1895 - மின்சாரத்துடன் பரிசோதனைகளை மேற்கொண்டவேளை வைஹெல்ம் றொன்ரெனால் X-கதிர் கண்டறியப்பட்டது.

1939 - மியூனிச்சில் அடொல்ப் ஹிட்லர் மீதான படுகொலை முயற்சியிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

1960 - 20ஆம் நூற்றாண்டின் இறுக்கமான போட்டியில் ஜோன் எப்.கெனடி, றிச்சார்ட் நிக்ஸனைத் தோற்கடித்து அமெரிக்காவின் 35ஆவது ஜனாதிபதியானார்.

2000 - இனப்பிரச்சினைக்குத் தீர்வு போர் மூலமா? பேச்சு மூலமா? என அரசிடம் ரணில் கேள்வி.

2002 - சதாம் ஹூசைன் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்; இல்லையேல் பெரிய விளைவை எதிர்கொள்ள நேரிடும் என்ற ஐ.நா.பாதுகாப்புச் சபையின் 1441 ஆவது தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2004 - யாழ். பஸ் நிலையச் சூட்டுச் சம்பவம்: சிப்பாய்களுக்கு எதிரான வழக்கை வவுனியாவுக்கு மாற்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு.

2006 - கோப்பாயில் கடத்தப்பட்டவர் திருநெல்வேலியில் சடலமாக மீட்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏமாந்தது குள்ளநரி

ஒருநாள் அதிகாலை நரியொன்று பசியுடன் பண்ணையொன்றின் அருகில் வந்தது. அங்குள்ள கோழிகளில் ஒன்றை பிடித்துத் தின்று பசியாற விரும்பியது. வேலியின் இடையே சிரமப்பட்டு உள்ளே புகுந்து சென்றது. அங்கு விளைந்திருந்த பயிர்களின் நடுவில் சுருண்டு படுத்துக் கொண்டது.

சற்றுத் தொலைவில் களத்து மேட்டில் மேய்ந்து கொண்டிருந்த பெட்டைக் கோழிகள் நரியைப் பார்த்து விட்டன. உடனே பயந்து கத்தியபடியே அப்பால் ஓடின. குப்பை மேட்டில் ஒரு சேவல் வெயிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது.

சேவலைத் தின்றால் சுவையாயிருக்கும் என்று எண்ணிய நரி, பயிர்களின் இடையே மெல்ல மெல்ல நகர்ந்து சேவலை நெருங்கிச் சென்றது. திடீரென்று விழித்த சேவல், நரியிடம் சிக்காமல் பறந்து அப்பால் போனது.

"சேவலே! ஏன் என்னைக் கண்டு அஞ்சுகிறாய்? உன் குரலைக் கேட்டு மகிழ, நான் எவ்வளவு தொலைவிலிருந்து வருகிறேன் தெரியுமா?" என்று அன்பாகக் கேட்டது நரி.

"நரியாரே, என்னை ஏமாற்றப் பார்க்கிறீரே!" என்று சொன்னது சேவல்.

"உறுதியாகச் சொல்கிறேன். என்னால் உனக்குத் துன்பம் நேர்ந்தால், என் காலை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருக்கின்றேன். எனக்காக, ஒரே ஒருமுறை கூவு; கேட்க ஆவலாயிருக்கிறேன்!" என்று கேட்டது நரி.

சேவலுக்கு நம்பிக்கை வரவில்லை.

ஒரு கண்ணைத் திறந்த படியே நரியைப் பார்த்து ஒருமுறை கூவியது.

"ஆஹா, நன்றாயிருக்கிறது. ஆனால், நீ குரலை அடக்கிக் கொண்டு கூவுகிறாய். நீ உரத்த குரலில் கூவினால் அல்லவா நீண்ட தொலைவுக்குக் கேட்கும்," என்றது நரி.

நரியின் வஞ்சகப் புகழ்ச்சியில் மயங்கிய சேவல், தன் வலிமை கொண்ட மட்டும் முயன்று, 'கொக்கரக்கோ' என்று உரத்த குரலில் நீளமாகக் கூவியது.

அப்போது அதன் இரண்டு கண்களும் மூடிக் கொண்டன. அதைத் தானே நரி எதிர்பார்த்தது. உடனே, அது சேவலின் மேல் பாய்ந்து கழுத்தை பிடித்துக் கொண்டது. நல்ல இரை கிடைத்த மகிழ்ச்சியில் அது ஓடத் துவங்கியது.

அதைப் பார்த்த மற்றக் கோழிகள் பயந்து பெருங் கூச்சலிட்டன. கூச்சலைக் கேட்ட பண்ணையார், ஓடி வந்து சேவலுடன் ஓடும் நரியைக் கண்டார். சத்தமிட்டபடியே அதைத் தொடர்ந்து ஓடினார். அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஏனைய பணியாளர்களும் பின் தொடர்ந்து ஓடினர். நரியைத் திட்டிக் கொண்டே துரத்தினர்.

'எப்படியாவது தான் நரியிடமிருந்து தப்பிக்க வேண்டும்' என்று திட்டமிட்டது சேவல்.

"நரியாரே! என்ன இப்படியெல்லாம் உம்மைத் திட்டுகிறார்களே? அவர்களை ஒன்றும் சொல்லாமல் போவது உமக்குப் பெருமை இல்லை; எனக்கே வெட்கமாயிருக்கிறது!" என்றது சேவல்.

இதைக் கேட்டு கோபம் கொண்ட நரி, "போங்கடா! எவ்வளவு தொலைவு வந்தாலும் உங்களால் என்னைப் பிடிக்கவே முடியாது" என்றது.

எல்லாரையும் ஏமாற்றும் நரி, இந்த முறை தானே ஏமாந்தது. அது பேசத் துவங்கியதும், சேவல் தன் சிறகுகளை அடித்துக் கொண்டு தப்பியது. அருகில் இருந்த மரத்தின் மேல் பறந்து சென்று அமர்ந்து கொண்டது. ஏமாந்த நரி மரத்தடியில் நின்று தன்னிடமிருந்து தப்பித்த சேவலைக் கோபத்தோடு பார்த்தது.

சேவல் கேலியுடன் நரியைப் பார்த்து, "நரியாரே! உமக்குப் பசியில்லாவிட்டால் சற்று நேரம் இரும். உமக்குப் பிடித்த கூவலை மீண்டும் ஒருமுறை கேட்டுப் போகலாம்," என்றது சேவல்.

வேலையாள்களும், நாய்களும் தன்னை நெருங்குவதைக் கண்ட நரி, உயிர் பிழைத்தால் போதுமென்று காட்டை நோக்கி தலைதெறிக்க ஓடியது.

# 3 நிமிட காட்சிக்காக 32 நாள்கள் காத்திருந்த இயக்குநர்

சமீபத்தில் வெளியாகி வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கும் "புலி முருகன்" படத்தின் படப்பிடிப்பு இடத்தில் நடைபெற்ற சுவாரஸ்யங்களை தொகுத்தால் பெரிய புத்தகமே எழுதலாம் எனக் கூறியுள்ளார் படத்தின் இயக்குநர் வைசாக். அதில் அவர் சொன்ன ஒரு விடயம் தான் பிரமிப்பின் உச்சமாக இருக்கிறது.

குறிப்பாக மோகன்லாலை அடுத்து, ரசிகர்களை ஈர்க்கும் பிரதான அம்சமான இன்னொரு கதாபாத்திரமான புலியை வைத்து அவர் படமாக்கிய அனுபவத்தைக் கேட்டால், அவர் எந்த அளவுக்கு பொறுமையின் சிகரம் என்பது புரியும்.

படத்தில் புலி இடம்பெறும் மொத்த காட்சிகளின் நேரம் வெறும் மூன்று நிமிடம் மட்டும் தானாம். அதைத்தான் படம் முழுவதும் ஆங்காங்கே பிரித்து பிரித்து பயன்படுத்தினாராம் இயக்குநர் வைசாக்.



ஆனால், இந்த மூன்று நிமிட காட்சிகளை புலியிடம் இருந்து இயல்பாகப் பெறுவதற்காக அவர் 32 நாள்கள் காத்திருக்க வேண்டி இருந்ததாம். ஒவ்வொரு நாளும் கமராவை இயங்கும் நிலையில் வைத்துவிட்டு, புலியின் முன்பாக வைசாக்கும் பீட்டர் ஹெயினும் காத்துக்கிடப்பார்களாம்.

ஆனால் பழகிய புலி என்பதாலோ அது இவர்கள் எதிர்பார்த்த ஆக்ரோஷ உணர்ச்சிகளை வெளிப்படுத்தவே இல்லையாம். கடைசியாக 32ஆம் நாள் எதேச்சையாக அந்த நிகழ்வு நடந்ததாம். இயக்குநர் வைசாக் அணிந்திருந்த தொப்பியின் நிறம் புலியை கோபப்படுத்தும் விதமாக இருக்க, ஆக்ரோஷமாக தனது கோபத்தை வெளிப்படுத்தியபடி பாய்ந்து வந்ததாம். அதைச் சரியாக பயன்படுத்திக் கொண்டாராம் வைசாக். அதில் கிடைத்த மூன்று நிமிட காட்சிகள் தான் மொத்தப் படத்துக்கே பயன்பட்டதாம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: விஜயா



**மேடம்:** அக்கம்பக்கத்தினரின் அன்புக்குரியவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** பிறரது அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். வெளியூர் பயணத்தில், திடீர் மாறுதல் உண்டாகும்.

**மிதுனம்:** பேச்சை குறைத்தால், வீணான சிரமத்தை தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். லாபம் மிதமான அளவில் இருக்கும். பெற்றோரின் ஆறுதல் வார்த்தை தைரியம் வளர்க்கும்.

**கடகம்:** நண்பரின் பேச்சு மனதை உற்சாகப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு கூடும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.

**சிங்கம்:** மனதில் தைரியம் மேலோங்கும். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் அபிவிருத்தியாகும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண் களால் குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சி கூடும்.

**கன்னி:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில், உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு நகை, பணம் பாதுகாப்பில் கவனம் தேவை.

**துலாம்:** கடந்த கால உழைப்புக்கான பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். உடல் நலனில் அக்கறை தேவை.

**விருச்சிகம்:** நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடம்பர பொருள் வாங்குவர்.

**தனுசு:** உறவினர் பேச்சு கோபத்தை உருவாக்கலாம். தொழிலில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், குடும்ப ஒற்றுமையைக் காப்பது அவசியம்.

**மகரம்:** வெகுநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** முக்கிய பொறுப்புக்களை அடுத்தவரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் அடக்குமுறைக்கு ஆளாகலாம்.

**மீனம்:** உங்கள் பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். வருமானம் உயரும். மாணவர்கள் போட்டியில் ஈடுபட்டு பாராட்டும் பரிசும் பெறுவர்.

வீட்டில கொசுத்தொல்லை தூங்க முடியலைடா கோமுட்டி தலையா...



சிம்பிள் அண்ணே... TOLET போர்டு போடுங்கண்ணே காலி வீடு எண்டு நினைச்சு ஒரு கொசுவும் வராது...!

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | 9 | | | 7 | | |
| 7 | 4 | | 1 | | | | | |
| | | | | 3 | | | | 4 |
| 2 | 3 | | | | 9 | | 7 | |
| | | 5 | | 7 | | 3 | | |
| | 1 | | 4 | | | | 5 | 2 |
| 1 | | | | 9 | | | | |
| | | | | | 1 | | 4 | 3 |
| | | 8 | | | 6 | | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 7 | 9 | 2 | 6 | 4 | 1 | 5 |
| 5 | 4 | 1 | 8 | 3 | 7 | 9 | 2 | 6 |
| 2 | 6 | 9 | 4 | 5 | 1 | 8 | 7 | 3 |
| 6 | 2 | 5 | 1 | 4 | 8 | 7 | 3 | 9 |
| 4 | 9 | 3 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 |
| 1 | 7 | 8 | 6 | 9 | 3 | 2 | 5 | 4 |
| 7 | 1 | 6 | 3 | 8 | 4 | 5 | 9 | 2 |
| 9 | 5 | 4 | 7 | 6 | 2 | 3 | 8 | 1 |
| 3 | 8 | 2 | 5 | 1 | 9 | 6 | 4 | 7 |

சீன பட்டாசுகளை எப்படி கண்டுப்பிடிக்கிறது...?



குருவி வெடியில குருவிக்கு மூக்கு சப்பையா இருந்தா அது சீன பட்டாசு...

மாமியாருக்கும் சாமியாருக்கும் என்ன வித்தியாசம்...!
மாமியரால ஒரு பொண்ணுக்குத் தொல்லை...
சாமியாரால எல்லா பொண்ணுக்கும் தொல்லை....

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்...



"நெட் கார்டு தீர்ந்து போனபிறகு"!

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களுக்கான சிகையலங்காரம்




### நீளவடிவான கொண்டை

1, 2, 3 தலை முடியை கூட்டி, முன்பக்கத்தில் பம் வைத்துப் படத்தில் காட்டியவாறு சுற்றிக் கொள்ளவும்.

4, 5, 6, 7 நன்கு சுற்றப்பட்ட தலைமுடியை உட்புறமாக அமைவிடப்படுத்தி கிளிப் செய்து கொள்க.

8 இறுதியாக அலங்காரமான ஹேயார் பின் மூலம் கிளிப் செய்து அலங்காரத்தை நிறைவு செய்க.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 800 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 400 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 700 | – | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 700 | 600 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 800 | – | 500 |
| சீலா | 300 | 300 | 300 | – | 500 | 400 | 350 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 300 | 300 | – | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 450 | 300 | 300 |
| திரளி | 300 | 200 | 100 | – | 300 | 200 | 200 |
| நகரை | 250 | 200 | 100 | – | 400 | – | 250 |
| சூடை | 150 | 100 | 100 | – | 300 | 150 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | – | 400 | – | 130 |
| மதனம் | 150 | 200 | – | – | 400 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 80 | 100 | – |
| பாலை | 400 | 150 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 200 | – |







ஆண்கள் மற்றும் பெண்களின் முகத்தில் உள்ள முடிகளை நீக்குவதற்கான சாதனம் அறிமுகமாகியுள்ளது. மின்சாரத்தில் செயற்படும் இவை வலிகள் இன்றி முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க பயன்படும். ஆண்களுக்கு. பெண்களுக்கு என பிரத்தியேகமாகக் கிடைக்கின்றன. இவை 480 ரூபாவில் இருந்து விற்பனை

இது புதுசு



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 50 | 40 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 70 | 60–100 | 80 | 50–60 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 40 | 50 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 170 | 130 | 160 | 100 | 80–100 | 160 | – | 60 |
| பாகல் | 180 | 160 | 160 | 120 | 120–140 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 60 | 100 | 60 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 85 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 90 | 120 | 100 | 140 | 80 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 70 | 80 | 80 | 60–70 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 40–50 | 80 | – | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 80 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 70 | 50 | 60 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 60–70 | 80 | – | 50 |
| வெண்டி | 100 | 80 | 80 | 80 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 140 | 160–180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 600 | 450 | 550–600 | 600 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 100 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 60 | 40 | 40 | 80 | – | 100 |

## மரக்கறி ஜாம்

### தேவையான பொருள்கள்

உருளைக்கிழங்கு – 4
தக்காளி – 4
கரட் – 4
பீட்ரூட் – 4
சர்க்கரை – 3 கப்
சிட்ரிக் அமிலம் – ஒரு தேக்கரண்டி

### செய்முறை

காய்கறிகளை நன்கு கழுவி சுத்தம் செய்து தோல் சீவி தேங்காய்த் துருவல் போல் துருவிக் கொள்ளவும்.

தக்காளியை பொடிப்பொடியாக அரிந்து கொள்ளவும்.

எல்லாக் காய்கறிகளையும் கொஞ்சம் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து வேக வைக்கவும்.

பிறகு மிக்ஸியில் போட்டு அரைத்த பிறகு சர்க்கரை, சிட்ரிக் அமிலம் சேர்த்து அடுப்பில் வைத்து அல்வா பதத்திற்கு வரும் வரை கிளறவும். மரக்கறி ஜாம் தயார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களை விசாரிக்கும் குழு நியமனத்தில் சர்ச்சை

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு, சபையின் தீர்மானத்தின் பிரகாரம் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் மூவர் குழு நியமிக்கப்பட்டது. இரண்டு நீதிபதிகள் மற்றும் முன்னாள் மாவட்டச் செயலர் ஒருவர் இந்தக் குழுவில் உள்ளனர்.

இல. 63, நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகத்திலேயே மேற்படி விசாரணைக் குழுவின் அலுவலகம் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது.

இந்தக்குழுவுக்கு செயலாளராக வடக்கு மாகாண முதன்மைச் செயலர் அலுவலகத்தில் பிரதி முதன்மைச் செயலாளராகக் கடமையாற்றும் திருமதி குணசீலன் காஞ்சனா நியமிக்கப்பட்டார்.

இந்தக் குழுவுக்கான சம்பளம் உள்ளிட்ட நிதிச் செலவுகளுக்கான அனுமதியை ஆளுநரிடம் கோரப்பட்டது. அமைச்சர்களுக்கான குற்றச்சாட்டு என்ற வகையில் முதலமைச்சருக்கு எதிராகவும் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரம் குழுவுக்கு உண்டு என்பதனால், இந்தக் குழுவை முதலமைச்சர் நியமிக்கும் சட்ட வலுவுண்டா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார் ஆளுநர் றெஜினொல்ட் குரே. இதனால் அதற்கான அனுமதியை அவர் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5,101)

# புதிய சட்டத்தால் நிலைமை மேலும் மோசமடையும்

## அபாய எச்சரிக்கை விடுக்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

சட்டம் அவர்களுக்கு மேலும் அதிகாரமளிப்பதாக அமையும் என்றும் பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரச படைக் கட்டமைப்புக்களில் உண்மையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது என்றால், முதலில் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சுலக்சன் மற்றும் கஜன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை மூடி மறைக்கப் பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் இதற்குச் சிறந்த உதாரணம்.

பொதுமக்கள் பொலிஸாரின் கொடுமைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்ததால் அந்தச் சம்பவத்தை மூடி மறைக்கப் பொலிஸாரால் முடியாது போய் விட்டது.

பொலிஸில் இடம்பெறும் மோசமான சித்திரவதைகள் மற்றும் படுகொலைகள் விடயத்தில் இலங்கை அரச தரப்பினரால் உறுதியான வாக்குறுதியை வழங்க முடியாது.

பொலிஸாரின் சட்ட விரோதக் கைதுகள், சித்திரவதைகள் மற்றும் சட்ட விரோதப் படுகொலைகள் ஆகிய சம்பவங்கள் வழமையான நிகழ்வுகளாகியுள்ளமை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய பொலிஸாரைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். (த-5)

# ஆட்சிக் கவிழ்ப்புக்கு சில ஊடகங்கள் சதி

## அது முடியாத காரியம் என்கிறார் பிரதமர் ரணில்

விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி இந்து ரன்வில பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய தேசிய அரசு ஆட்சிபீடம் ஏறிய போதிலும், எமது கட்சிக்குத் தனித்து அதிகாரம் இருக்கவில்லை. இதனாலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் தேசிய அரசை உருவாக்கினோம்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டோம். கடந்த காலங்களில் ஜே.ஆர்.ஜயவர்தன நாடாளுமன்றில் ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தை தக்க வைத்திருந்த நிலைமை இன்று நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளிடத்தில் இருக்கின்றது.

இதனாலேயே சில ஊடகங்கள் குழம்பிப் போயுள்ளன. நாட்டின் இரு பிரதான கட்சிகளும் இணைந்துள்ளதால் தங்களுக்குப் பிரச்சினைகள் எழும் என்று கருதுவதாலேயே இந்த ஊடகங்கள் குழம்பிப் போயுள்ளன.

இதனால் இந்த அரசைக் கவிழ்க்க ஊடகங்கள் எவ்வளவுதான் முயன்றாலும், ஐந்து வருட ஆட்சிக் காலத்துக்கு முன்னதாக அரசை எவராலும் கவிழ்க்க முடியாது என்றார். (த-5)

# வீடுகளைப் பார்வையிட்ட பாக். தூதுவர்

கொடுக்கப்பட்ட வீடுகளை, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களுக்குப் பாகிஸ்தான் அரசின் நிதி உதவியில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் 230 வீடுகள் அமைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவு, மன்னார் மாவட்டத்தின் நரிக்காடு ஆகிய கிராமங்களில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

வடக்குக்கான பயணத்தின்போது, தூதுவர் சயிட் சகீல் ஹுசைன் இந்த வீடுகளைப் பார்வையிட்டுள்ளார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவருடன் இணைந்து, அமைச்சர் ரிசாத் பதியுதீனும் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# கொலையுண்ட மாணவர்களுக்கு நேற்று பல்கலையில் அஞ்சலி

பீடாதிபதிகள் இதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அங்கு அஞ்சலி உரையாற்றிய பீடாதிபதி, தி.வேல்நம்பி,

மண்ணிலே போடப்பட்ட விதையொன்று முளையாக வருவதற்கு முன்னரே வெளிவராமல் போய் விடுகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. சில நேரங்களில் முளை இலையாக வருவதற்கு முன்னர் அல்லது இலை கிளைகளாக வருவதற்கு முன்னர் தங்களுடைய காலத்தை முடித்து விடுகின்ற சந்தர்ப்பங்களையும் பார்த்திருக்கின்றோம். வளர்ந்து கிளைகளைப் பரப்பி பூத்துக் காய்த்து எப்பொழுது இவை கனிகளாகவரும். அவற்றின் பயனை எப்பொழுது பெற்றுக்கொள்ள முடியும் என இருந்தவேளையில் இந்தத் துர்ச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த இரண்டு மாணவர்களினதும் குடும்பங்களைப் பொறுத்த வரையில் தமது குடும்பத்தில் பல்கலைகழகத்துக்கு வருகின்ற முதல் மாணவர்களாக இருந்திருக்கின்றார்கள். ஆகவே மாணவர் களினதும் அவர்களினது குடும்பதினரதும் எதிர்பார்ப்புக்கள், கனவுகள் எல்லாவற்றையும் உலுக்கும் வகையில் இக்கொடூரம் நிகழ்ந்துள்ளது.

குறித்த மாணவர்களில் ஒருவர் அரசியல்துறையையும் மற்றையவர் ஊடகத்துறையையும் சார்ந்தவர்கள். இந்த இரண்டு துறைகளுமே சமூகத்தில் பெரும் பங்காற்றக்கூடியன. அல்லது சமுதாயக் கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியன. ஆகவே இந்தத் துறைகளிலிருந்துவெளிவந்து பலவிடயங்களைச் செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன் கல்வியைத் தொடர்ந்த போதும், அவை அனைத்தும் சிதைந்து விட்டன - என்றார்.

அங்கு உரையாற்றிய கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், பெற்றோர்கள் மாணவர்களைப் பல்லாயிரம் கனவுகளுடன் பல் கலைக்கழகத்துக்கு அனுப்பி வை கின்றனர். ஆனால் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் குடும் பத்தினருக்கு அனைத்துமே சிதை கப்பட்டுவிட்டன. எங்களால் அந் குடும்பங்களுக்கு எவ்வாறு ஆறுத சொல்வதென்று தெரியாத நிலை காணப்படுகின்றது. அவர்களி ஆத்மாசாந்தியடைய இறை னைப் பிரார்த்திக்கின்றோம் - எ றார். (த-4-8-1

# படகுகள் அணைக்கும் 4 துறைகள் படை வசம்

## இதனால் வாழ்வாதாரம் பாதிப்பு என வலி.வடக்கு மக்கள் முறைப்பாடு

அந்தத் துறைகளை விடுவித்துத்தருமாறு யாழ். மாவட்டச் செயலரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சில மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள அந்தத் துறைகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

வலி.வடக்கில் 454 ஏக்கர் நிலப்பரப்பு கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக் குடியமர்வதற்கு 300 குடும்பங்கள் இதுவரை பதிவுகளை மேற்கொண்டுள்ளன. காணிகள் விடுவிக்கப்பட்டாலும் தமது வாழ்வாதாரத்துக்குரிய மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குப் படகு அணைக்கும் துறைகள் விடுவிக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

கப்பல்துறை, ஊறணி, நடுத்துறை, பழல்தலடி ஆகிய படகு அணைக்கும் துறைகள் விடுவிக்கப்பட்டாலே தமது மீள் குடியமர்வு நடவடிக்கை பூர்த்தியடையும் எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர். தற்போது விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து சுமார் 30 மீற்றர் தூரங்களிலேயே இந்தத் துறைகள் அமைந்திருக்கின்றதாகத் தெரிவிக்கும் மக்கள் அவற்றை உடனடியாக விடுவித்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (த-5)

# கண்ணிவெடி அகற்ற பிரிட்டன் ரூ.22 கோடி

## யாழில் கூறினார் அந்நாட்டு அமைச்சர்

பிரிட்டன் அமைச்சர் பார்னொஸ் தெரிவித்தார்.

பிரிட்டன் அரசின் நிதி உதவியில், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் வடக்கில் கண்ணி வெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த பிரிட்டனின் அமைச்சர் பார்னொஸ் முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டார்.

இதன்போது அடுத்த மூன்று வருடங்களுக்கு 1.2 மில்லி யன் பவுண்ஸ் நிதி உதவி வழங்கி, கண்ணிவெடி அகற்றலை மேற்கொள்ளப் பிரிட்டன் ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய மாநாட்டின்போது, கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுக்கு 6.6 மில்லியன் பவுண்ஸ் நிதி உதவி வழங்குவதாகப் பிரிட்டன் தெரிவித்திருந்தது. இதன் ஒரு கட்டமாகவே மேற்படி 1.2 மில்லியன் பவுண்ஸ் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று

டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் பரப்புரைகள் அனல் பறந்து முடிவுக்கு வந்துள்ளன. ஆரம்பத்தில் மிகவும் ஆதிக்கம் செலுத்திய ஹிலாரி, மின்னஞ்சல் குற்றச்சாட்டில் பின்னடைவைச் சந்தி ருந்தார். தற்போது அவர் குற்ற றவர் என அமெரிக்கப் புல வுத்துறை தெரிவித்தமைய ஹிலாரிக்கான வாய்ப்பு மீண் அதிகரித்துள்ளது எனக் கருதப கின்றது. (விரிவு பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### புதிய மாற்றங்களை தந்துள்ளது யூ ரியூப்

உலகின் முன்னணி காணொளி பகிர்வுத் தளமாகச் செயற்பட்டு வருகின்ற யூ ரியூப் ஆனது தளத்துக்கான காணொளி பகிர்வு உரிமையாளர்களை பாதுகாக்கும் வகையிலே பல புதிய விடயங்களை உருவாக்கி வருவதாக தெரியவருகிறது.

இதனன்பிரகாரம் யூ ரியூப் தளத்தில் தரவேற்றம் செய்யப்படும் காணொளிகள் தொடர்பில் அதனை பார்வையிடுகின்ற பயனர்களால் பதிவிடப்படும் கருத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

பிரதானமாக எமக்குத் தேவையில்லை என்று கருதிக்கொள்கின்ற வார்த்தைப் பிரயோகங்களை பதிவிட்டு மேற்கொள்ளப்படும் கருத்துக்களை முற்றாக நீக்காது தேவைக்கு ஏற்றால்போல மறைத்து மீண்டும் பார்வையிட முடியுமென தகவல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தொடர்ச்சியாக கடுமையான வார்த்தை பிரயோகங்களை பதிவிடும் பயனர்கள் தளத்திலிருந்து நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தடை செய்யலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

## சிறந்த மென்பொருள் சாதனமாக சிங்கி-பை (Singify)

### தரம் வாய்ந்த மென்பொருளுக்கான தேசிய விருது வழங்கும் விழாவில் தங்கம் வென்றது

**"ஈழத்தமிழரின் மென்பொருள் சாதனை"**

தென் இந்திய - பின் இசை பயனுகரியாக விளங்கும் சிங்கி-பை (Singify) South Asian Karagoke Mobile App கடந்த மாதம் 14 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற தரம் வாய்ந்த மென்பொருளுக்கான தேசிய விருது வழங்கும் விழாவில் ஊடகம் மற்றும் பொழுது போக்குப் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன் தங்க அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

300 இற்கும் மேற்பட்ட மென்பொருள் சாதன உற்பத்தி நிபுணர்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டி நிகழ்வானது பத்தொன்பது பிரிவுகளில் இடம் பெற்றுள்ளது.

இந்த அங்கீகாரத்தை நிகழ்வில் கலந்துகொண்ட சிங்கி-பை நிறுவுநரும் முகாமைத்துவ பணிப்பாளருமான யாதவன் திருநாவுக்கரசு, இணை நிறுவுநரும் இணை நிறைவேற்றுப் பணிப்பாளருமான சாள்ஸ் பொஸ்கோ மற்றும் கூகுள் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதியும் சிங்கி - பையின் முதன்மை தொழில் நுட்ப அலுவலருமான அழகரசன் மகாலிங்கம் ஆகியோர் இணைந்து பெற்றுக் கொண்டனர். நிகழ்வில் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அனைத்து வகையான சிமாட் தொலைபேசிகளிலும் இலகுவாக தரவிறக்கம் செய்து பயன்படுத்தக்கூடிய இந்த சிங்கி - பை மென்பொருள் சிறந்த பொழுது போக்கு அம்சமாக உள்ளது. அத்துடன் மனவலுவை மட்டுமல்லாது உடல்வலுவையும் சீராக வைத்திருக்கவும்; பாடலைப் பாடவும் அதனை பதிவு செய்து மீண்டும் மீண்டும் ரசிப்பதற்கும் பயன்படுகிறது.இதற்கு மேலதிகமாக, சமூக வலைத் தளங்கள் மூலமாகவும் எம்மோடு இணைந்துள்ளவர்களில் பிடித்தமானோருக்கு பரிமாறிக் கொள்ளவும் இலகுவானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விழாவில் வெற்றியீட்டி விருதுகளைப் பெற்றுக் கொண்ட அனைவரும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் நான்கு நாள்களுக்கு தைவான் தலைநகர் தைபியில் இடம்பெறவுள்ள 16ஆவது ஆசிய பசுபிக் தொழில் நுட்ப விருது வழங்கும் விழாவில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.







## சமூக சேவையாளர்களுக்கான தேசாபிமானி கௌரவ விருதினை வழங்கியது ஈ-சிற்றி






ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் முதல்வர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு ஆங்கில டிப்ளோமா பாடநெறிகளைப் பூர்த்தி செய்த இருநூறு மாணவர்களுக்கான ஆங்கில டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வின் சிறப்பம்சமாக ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரி மற்றும் சமூக மறுவாழ்வுக்கான அமைப்பு என்பன இணைந்து சமூகத்தில் கல்வி, கலை, கலாசாரம், சமயம் மற்றும் சமூகசேவை போன்ற பணிகளுக்கு உன்னத சேவையாற்றுவோருக்கான தேசாபிமானி என்ற கௌரவ விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், செல்வராசா சந்திரகுமார், சுதேச மருத்துவர் அழகேந்திரம் ஜெயக்குமார், லயன் பெண்மணி தவானந்தி சந்திரகாந்தன், ஆ.ரு.ஆ.தாஹீர், யோகதாசன் யூட் நிமலன், சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர் ஆகியோருக்கே இந்த கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

## சிறந்த பொருளாதாரக் கொள்கை

### முதலீடுகளை மேற்கொள்ள துருக்கி தீர்மானம்

இலங்கையிலே தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவருகின்ற பொருளாதாரக் கொள்கையானது அதிகளவான துருக்கிய முதலீட்டாளர்களைக் கவர்ந்துள்ளதாக இலங்கைக்கான துருக்கியின் தூதுவர் டன்கா ஒஸகாடர் தெரிவித்தார்.

துருக்கி, இலங்கை இடையேயான வர்த்தக ரீதியிலான கருத்துநிலைப் பகிர்வு கூட்ட நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய பிராந்திய நாடுகளிடையே இலங்கை போர்க்காலத்தின் பின்பாக அதிகளவான வெளிநாட்டு முதலீடுகளின் உள்வருகையை அனுமதித்துள்ளது. பொருளாதார கொள்கை வகுப்பை அதற்கேற்ப திட்டமிட்டு இராஜதந்திர ரீதியிலே நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி அதிகளவான அபிவிருத்தி எனும் தொனிப்பொருளின் கீழான கடன்தொகைகளை சுவீகரித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஹூவாவி வர்த்தக நாமத்தின் புதிய காட்சியறை கொழும்பில்

ஹூவாவி நிறுவனம் இலங்கையில் மேற்கொண்டு வருகின்ற தங்களுடைய வர்த்தக நாமத்தின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் புதிய செயல்வடிவமாக தங்களது புதிய அனுபவ காட்சியறையொன்றை கொழும்பில் ஆரம்பித்து வைத்துள்ளது.

கொழும்பு,லிபேர்ட்டி பிளாஸா வர்த்தக மையத்தின் கீழ்த் தளத்தில் இந்த காட்சியறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வர்த்தக நாமத்தின் புதிய காட்சியறையிலே வாடிக்கையாளர்கள் தாங்கள் விரும்பிய ஹூவாவி திறன் பேசிகள், ரப்லெற் சாதனங்கள் மற்றும் ஏனைய சாதனங்களை நேரடியாக பார்வையிட்டு அவை தொடர்பான விளக்கங்களை பெறக்கூடியதாக வுள்ளது. அத்துடன் கொள்வனவின் முன்பதான கருத்தாடல் தளங்களை மேற்கொள்வதற்கான கருமபீடங்களையும் இது கொண்டமைந்துள்ளது.

இலங்கையின் ஹூவாவி சாதனங்களுக்கான உள்நாட்டுத் முதன்மை அதிகாரியான கென்றி லியு, இலங்கையின் ஹூவாவி சாதனங்களுக்கான பொது முகாமையாளரான கல்ப பெரேரா மற்றும் சிங்கர் லங்கா பி.எல்.சி நிறு வனத்தின் தொழிற்பாடுகளுக்கான பணிப்பாளர் சந்தன சமரசிங்க ஆகியோரால் இந்தக் காட்சியறையை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநிலை...

வச் சிப்பாய்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டது. இராணுவச் சேவையில் 12 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாததைக் கார ணம் காட்டி தமக்கான ஓய்வூதி யத்தை வழங்க மறுத்து வருவதாகத் தெரிவிக்கும், போரின்போது அவயவங்களை இழந்த இராணுவத்தினர் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தாங்கள் செய்த தியாகத்தைக் கருத்திற்கொண்டு தமக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த இரண்டாம் திகதி ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டிருந்த ஓய்வுபெற்ற இராணு வச் சிப்பாய்களை அழைத்து ஜனாதிபதி நேரில் கலந்துரையாடினார். அவர்களின் கோரிக் கையை தீர்த்து வைப்பதாக உறுதியளித்தார். இராணுவத்தில் 12 வருடகாலச் சேவையைப் பூர்த்தி செய்யாத நிலையில் போரின் போது அவயவங்களை இழந்த படையினருக்கு 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் ஓய்வூ தியம் பெற்றுக் கொடுக்கவுள்ள தாகப் பாது காப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்தது. இந்த அறிவிப்பை ஏற்க மறுத்த ஓய்வு பெற்ற படைச் சிப்பாய்கள் நேற்றும் தமது போராட் டத்தை முன்னெடுத்ததுடன், ஜனா திபதி செய லகத்தை நோக்கிப் பேரணியொன்றை நடத் தினர். இந்தப் பேரணியை லோட்டஸ் சுற்றுவட் டத்தில் தடுத்து நிறுத்திய பொலிஸார், ஜனாதி பதி செயலகம் வரை யிலான பாதையையும் மூடியிருந்தனர். இந்தப் போராட்டத்துக்கு நீதி மன்றத்தில் பொலிஸார் தடை உத்தரவு கோரிய போதும், நீதிமன்றம் தடை உத்தரவை வழங்க மறுத்திருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப் பாய்கள், பொலிஸாரின் தடையையும் தாண்டி ஜனாதிபதி செயலகத்தை நோக்கிச் சென்ற னர். சிறப்பு அதிரடிப்படையினர், கலகம்அடக் கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் பதற்றமான நிலை ஏற்பட்டது. இராணுவத்தி னர் அதனையும் மீறி செல்ல முற்பட்டபோது, பொலிஸார் கண் ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தினர். இதனால் அந்தப் பகுதி யில் அமைதியின்மை ஏற்பட்டது. பொலிஸார் தாக்குதல் நடத்திய போதும், இராணு வத்தி னர் அங்கிருந்து அகல வில்லை. இறுதியில் ஜனாதிபதியின் செயலர் அவர்களுடன் பேச்சு நடத்தினார். (த-5)

**கூரை ஓடுகள் விற்பனைக்குண்டு**

புதிய கூரை ஓடுகள் விற்பனைக்குண்டு.

**077 414 7463**

### பெயர் மாற்றம்

'ஜெயபவனம்' உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த நவரட்ணம் ஜெயலதா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை நவரட்ணம் ஜெசிக்கா எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

நவரட்ணம் ஜெசிக்கா

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை நல்லையா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை நல்லையா நேற்று (07.11.2016) திங்கட் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - கனகம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், சுகுமாரன், சுபத்திரா, இந்திரகுமார், பாலகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தீபானி, டஷிதரன், வினோதினி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, கனகசுந்தரம் மற்றும் ஞானாம்பிகை, யோகாம்பிகை, யோகேஸ்வரி, சிவபாதசுந்தரம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திவ்யா, நிரோஷன், காண்டீபன், சுகன்யா, சதீஷன், சுதர்ஷன், அபிமன்யூ, சவுமியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2016) செவ்வாய்க் கிழமை 21/1, 3ஆம் ஒழுங்கை, பலாலிவீதி (அன்னசத்திர ஒழுங்கை), கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தர்மடம், யாழ்ப்பாணம். (J/5961) (11,18,21) தகவல்: **பிள்ளைகள்.**

## அறிவித்தல்

**வலி.தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.**
**வட்டாரம் :- 09**
**ஆதன இலக்கம் :- 159, 161/2 (புதிய பதிவு)**
**பிப்பிலி றோட்.**

வட்டாரம் 09, பிப்பிலி றோட், ஆதன இலக்கம் 159, 161/2 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை 'சூதியம்பற்றை' என்னும் பெயருள்ள விஸ்தீரணம், நிலப்பரப்பு 13, குளி 02 கொண்ட இவ்வாதனமானது யாழ்ப்பாணம், நவாலியைச் சேர்ந்த நடேசன் மகேந்திரன் மனைவி செல்வரதி, கணபதிப்பிள்ளை நடேசன் கைம்பெண் ஞானம்மா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், நவாலி வடக்கு, புலவர் வீதியைச் சேர்ந்த தெட்சணாமூர்த்தி யோகேஸ்வரன் என்பவருக்குக் குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.க.சபாரத்தினம் முகதாவில் நிறைவேறிய 2052ஆம் இலக்க 2005.07.12 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.T.பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 0058ஆம் இலக்க 2014.04.17 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது 'சூதியம்பற்றை' நிலப்பரப்பு 13 குளி 2 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாகப் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் தெட்சணாமூர்த்தி யோகேஸ்வரன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினைப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**கு.சற்குணராசா, செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் முன்னாள் பணியாளரும்
செயற்கை அவயவப் பிரிவின் முகாமையாளருமான
**திரு. எல்.எம். ஜோன்சன்** அவர்களின் மாமியார்

### திருமதி புஸ்பராணி நடராசா

அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்கு கொண்டு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும்**
**யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா (ஆசைப்பிள்ளை) விசுவலிங்கம்

### (நயினாதீவு)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கலைவாணி மில் வீதி கொக்குவில் கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட திருமதி நாகம்மா விசுவலிங்கம் 07.11.2016 திங்கட் கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரியும் காலஞ்சென்றவர் களான நாகமுத்தன் - சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகமுத்தன் விசுவலிங்கம் (சைவப்புலவர், பிரசித்த நொத்தாரிஸ், சமாதான நீதிவான், இளைப்பாறிய அதிபர்) அவர்களின் பாசமிகுமனைவியும் இராசநாயகம் (ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்), தனி நாயகம்(ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்), சியாமளா தேவி (ஓய்வுநிலைஆசிரியர்), முத்து லட்சுமி(ஆசிரியை - கனடா), இரத்தினதேவி(ஓய்வு நிலை ஆசிரியர்), உமாதேவி(ஆசிரியை - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகாலெட்சுமி, சத்தியபாமா, தியாகமணி(கணக்காளர் - தலவாக்கல), திவாகரன் (ஆசிரியர் - கனடா), குலசிங்கம்(கிராம அலுவலர், வேலணை), நிபரஞ்சன்(கனடா) ஆகியோ ரின் பாசமிகு மாமியாரும் பவதாரணி ராஜ்குமார், வானதி ஜனார்த்தனன், வாமதி சிறீகரன், வேணுஷா.சாம்பவி இராகுலன், ஜயனன், நிவேதிதா கமலவேந்தன், ராம்காந், துஷிக்காந், அபிராமி, சுகந்தன், லக்ஷிகா.அமுதீசன், அர்ச்சனா, அட்சரன், அயிலவன், திவ்வியா, திவ்வியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஹரிப்பிரித்தா, ரித்தீஷ், லயஸ்ருதி, சம்ஸ்ருதி, அபிஷாலினி, குமரன் ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன், அன்னபூரணம், கந்தசாமி மற்றும் சரஸ்வதி(கனடா), இளயதம்பி(அம்பாள் இரும்பகம்), இலட்சுமி(ஓய்வுநிலை ஆசிரியர்), இராசலிங்கம்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கனகராசா மற்றும் தில்லைநாயகி, பரராசசேகரம்(ஓய்வு நிலை உத்தியோகத்தர்), பத்மநிதி(கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று(08.11.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலைவாணி மில் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.** (J/5965), (14,17) **தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்பு : 077 107 1762**

## Palmyrah Development Board

## Invitation of Bid

### Proposed Production center for Palmyrah Development Board at Kaithady, Jaffna

1. The chairman of the palmyrah development Board, invites sealed bids from eligible and qualified bidders for proposed production centre for palmyrah development board at kaithady as described and estimated to cost Rs.5.0 million (Five million) excluding vat. **The construction period is 90 days**
2. Bidding will be conducted through Regional Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall have not been blacklisted and shall be registered in the field of building construction for **Grade C7** or above with the Construction Industry Development Authority (CIDA) valid until date of the bids. Further the registration should be valid at the date of award
4. Interested bidders may obtain further information from The Chairman, Palmyrah Deyelopment Board and inspect the Bidding Documents at the same address on any working day from **9,00hrs to 16.00hrs.** Contact phone number -0212222034
5. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 08.11.2016 until 17.11.2016 from 9.00hrs to 15.00hrs** upon payment of a non refundable fee of rupees Two thousand and Five hundred only (**Rs 2500/=**)
6. Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna on before 10.00hrs on 18.11.2016.** Bids will be opened soon after closing at the Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 90 days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
   - In the form included in section 09 of the bidding document
   - In favor of the chairman, Palmyrah Development Board
   - For an amount of **Rs.100,000.00**
   - **Valid up to 05.02.2017**

**Dr.R.Sivashankar**
**Chairman,**
**Palmyrah Development Board.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## கண்ணீர் அஞ்சலி



துரை வீதி, தாவடி வடக்கை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது அலுவலக
உத்தியோகத்தரும் கிராம சேவையாளருமான J/183
E.V. பிரபாகரன் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி அருளம்மா வைத்திலிங்கம்
அவர்கள் கடந்த 05.11.2016 சனிக்கிழமை காலமானார். அவரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின்
குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
நலன்புரிசங்கம், உடுவில்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 . 12 . 1942



ஆண்டவன் அடியில் 31 . 10 . 2014

அமரர் சபாபதி சுந்தரமூர்த்தி
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)
திதி: நவமி

வஞ்சனை இல்லா உள்ளம்
யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசந் தந்த தெய்வமே
பாசக் கயிறு வீசிப் பறித்துச் சென்றதேனோ?
ஊருக்கொரு பெரு விருட்சம் உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்ததுவோ? கணப்பொழுதில்
எம்மைக் கலங்க வைத்த மாயமென்ன?
விழி கசிந்து இங்கே வேதனையில் தவிக்கின்றோமே
எங்கள் தெய்வமே எமைவிட்டு ஏன் பிரிந்தீர்
காலன் அழைத்தானோ?
யாவும்கனவாகிப் போனதுவே...

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 323 3630

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19 07 1942



விண்ணில் 22 10 2015

அமரர் திருமதி.
சாந்தகுணதேவி கணபதிப்பிள்ளை

பத்துமாதம் சுமந்து, பாசத்துடன் வளர்த்தெடுத்து
பாரினிலே சீருடன் வாழ வழிகாட்டி விட்டு
இப்புவிதனில் விட்டோடி ஆண்டொன்று ஆனதோ....

குடும்பத்தின் குலவிளக்காய், பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்ட எம் தெய்வமே
உம் நினைவோடு வாழ்கின்றோம் வாடுகின்றோம்

காவியமாய் வாழ்ந்தீர்கள் உம்மை காலம் எல்லாம்
நினைத்திருப்போம் தேனினிய உங்கள் குணம்
தேடியே உருகுகின்றோம்

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
நித்தம் வருந்துகின்றோம் உம் திருமுகம் காணாமல்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் குடும்பத்தினர்

"தேவி வாசம், உடுப்பிட்டி"
0112361087


## 118 கிலோ....

சென்றுள்ளனர் எனக் கிளிநொச்சி தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் கடற்கரைப் பிரதேசத்திலேயே நேற்று திங்கட்கிழமை அதிகாலை 118 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சுண்டிக்குளம் கடற்கரையில் படகொன்றில் இருந்து சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் இறக்கப்படுவதை அவதானித்த மீனவர்கள், குறித்த இடத்துக்கு விரைந்து சென்றபோது பொதிகளை இறக்கிய படகு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டது. இறக்கப்பட்ட பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கடற்கரையில் காத்திருந்த நபாகளும் தலைமறைவாகினர்.

இது குறித்து மீன்வர்களால் தருமபுரம் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதிகாலை 5.30 மணிக்குத் தாமபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம். சத்துரங்க தலைமையிலான ஒரு பொலிஸ் குழு சுண்டிக்குளம் கடற்கரைக்கு உடனடியாக விரைந்தது. இதன்போது கஞ்சாப் பொதிகள் மாத்திரமே கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் காணப்பட்டன. சந்தேக நபர்கள் எவரும் அங்கிருக்கவில்லை. 94 கிலோ எடை கொண்ட கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன என்று கூறப்பட் டது.

இதேவேளை, சுண்டிக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பொருள்களைக் கொண்டு சென்ற இருவர் சுண்டிக்குளம் கடற்படையினரால் அவதானிக்கப்பட்டனர். கடற்படையினர் குறித்த நபர்களிடம் விசாரணைக்காகச் சென்றபோது அவர்கள் அந்த பொருள்களைப் போட்டுவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர். அந்த பொருள்களை மீட்ட கடற்படையிணர் சோதனைகளை மேற்கொண்ட போது அதில் 24 கிலோ கிராம் கேரள்க் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது. குறித்த கஞ்சா கிளிநொச்சி சிறப்பு அதிரப் படையினர் ஊடாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டது.

நேற்று அதிகாலை ஒட்டுமொத்தமாக 118 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபாகளைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (த-21-6-35)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் கி.லக்ஸ்மன்
அவர்களின் பாசமிகு தந்தையார்
கிறிஸ்தோப்பர் கிளிவோட் வில்லியம்ராஜா
அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரி கழகம், வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## First Year Remembrance of Late

In Earth 11 . 12 . 1976



In Heaven 20 . 11 . 2015

Mr.Rasanayagam Sriharan

Those Special memories of you
Will always bring tear from my eyes.
If only I could have you back For just a little while...
The Fact that you're no longer here
Will always cause me pain
But you're forever in my heart Until we meet again.

Yours Loving Wife
Jeevani - Sriharan

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லையா
தியாகராஜா
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

தோற்றம்
18.04.1928

மறைவு
30.10.2006

அன்புடனும், பாசத்துடனும்
எமை வளர்த்த உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சுப்பிரமணியம்
யோகேஸ்வரன்
(நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துநர்)

தோற்றம்
1948.07.05

மறைவு
2015.10.21

திதி:- 2016.11.08

அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆண்டொன்று மறைந்து விட்டது.
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
என்னை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்?
காலனவன் உங்களிடம் குழவி வடிவில் வந்தானே
நாள்கள் பலவாயின. மாதங்கள் சிலவாயின.
வருட மொன்றானது கண்ணீர் காயவில்லை
ஆண்டு ஒன்று ஆனதுவோ உங்கள்
முகம் கண்டு மனம் இன்னும் ஆறவில்லை.
அன்பும் பாசமும் பண்பும் நிறைந்த உங்கள்
திருமுகம் காணாமல் நினைவுகள் ஆறவில்லை.
காலங்கள் ஆண்டுகள் என்ன ஆயிரம் போனாலும்
உங்கள் நினைவுகளை மறக்க முடியவில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

"ராஜா வீதி"
பண்ணாகம், சுழிபுரம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி - யோ. சுதந்திரமலர்


## ஆவா...

பழிவாங்கல்களுக்கு அந்தக் குழுவின் பெயரைப் பயன்படுத்துகிறார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றுத் தெரிவித்தது.

வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் வைத்துக் கட்சி ஆதரவாளரான ஒருவர்கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் முன்னணி நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஆவா குழுவின் நபர் கடந்த பல மாதங்களாகச் சிறையில் இருக்கின்றார் . அவருடன் சேர்ந்து பலர் இன்னும் சிறைகளில் இருக்கிறார்கள். மீண்டும் ஆவா ஆவா என்று கதைக்கிறார்கள். அப்படியொரு குழு இருப்பதாக யாருக்கும் தெரியாது. எங்களைப் பொறுத்தளவில் ஆவா குழு ஒன்றை உருவாக்கி அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு அந்தக் குழுவைப் பயன்படுத்துகிறார்களா என்ற சந்தேகமும் உள்ளது. எங்கள் கட்சியின் செயற்பாட்டாளரைக் கைது செய்து அதனை நியாயப்படுத்துவதற்காக இப்படியான குழுவோடு தொடர்புபடுத்துகிறார் களா? ஏற்கனவே எங்களுடைய கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவரைக் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்துள்ளார்கள். எழுக தமிழ் நிகழ்வுக்கு முன்னின்று செயற்பட்ட எங்களுடைய செயற்பாட்டாளர் இப்போது கைது செய்யப்பட்டு ஆவா குழு என்ற மாயையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார். ஆவா குழுவைப் பயங்கரவாதக் குழு எனப் பிரகடனப்படுத்தியுள்ளார்களா என்பது எங்களுக்குத் தெரியாது.

பயங்கரவாதப் பிரிவினர் இவரைக் கைது செய்தமைக்கான காரணம் இன்னும் எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. அவர் எங்கு இருக்கின்றார் என்றுகூட எங்களுக்குத் தகவல் வழங்கவில்லை. கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டவர் இன்று வரை எந்த ஒரு நீதிமன்றத்திலும் முற்படுத்தப்படவில்லை. இது ஏன் என்ற வினாக்கள் எழுகின்றன. அவருக்கு வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்பு இருந்தால் சாதாரண முறையில் கைது செய்திருக்கலாம். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து அதன் கீழ் விசாரிப்பது தொடர்பாக எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அரசியல் ரீதியான கைதாகவே நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். கட்சிப் பணிகள் தொடர்பாக அவர் வெளிப்படையாகவே ஈடுபட்டிருந்தார். இவருக்கும் ஆவா குழுவுக்குமான விடயம் ஒரு சோடிக்கப்பட்ட நாடகம்–என்று கூறினர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ. கஜேந்திரன், மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தந்த பிரிட்டனின் அமைச்சர் பார்னொஸ் அம்மை யாரிடம் எடுத்துரைத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட பிரிட்டன் அமைச்சர் நேற்று வடக்கு முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் வரவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைபெறுகின்றதா.என்பது தொடர்பில் ஆராய்வதற்காக பிரிட்டன் அமைச்சர் இங்கு வந்திருந்தார். நான் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்போதே பல கடிதங்களை எழுதியிருந்தேன். அந்தக் கடிதங்களில் கூறிய விடயங்கள் தற்போது நடைமுறையில் நடைபெறுவதை எடுத்துக் காட்டியிருந்தேன்.

பன்னாட்டு ஈடுபாட்டுடன் இந்தப் போர்க்குற்ற விசாரணை நடைபெறாவிட்டால் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் என்று கூறியிருந்தேன். பன்னாட்டு நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களை அரசு கொண்டுவருவதாகத் தெரியவில்லை. பன்னாட்டு உள்ளீடுகள் வராவிட்டால் எங்களுக்கு நீதி கிடைக்காது என்பது நிச்சயம்.

இதனைவிடப் போர்க்குற்றச் சட்டமானது எமது நாட்டுச் சட்டத்துக்குள் கொண்டுவரப்படல் வேண்டும். அதாவது பல நாடுகளில் இருக்கும் சட்டமாக அது இருந்தாலும், எமது நாட்டில் போர்க்குற்றம் இழைக்கப்படும்போது அது சட்டமாக இருக்கவில்லை. எனவே எங்களுடைய நாட்டுச் சட்டத்துக்குள் போர்க்குற்றச் சட்டம் உள்வாங்கப்படவேண்டிய அவசியம் உள்ளது.

இது குறித்து அரசு தரப்பு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அவருக்கு வலியுறுத்தி இருந்தேன். விதவைகளின் எண்ணிக்கை, அவர்களுடைய பாதுகாப்பு, அவர்களுக்கான செயற்றிட்டங்களை மேற்கொள்ளவேண்டிய அவசியம் என்பன பற்றியும் எடுத்துக் கூறினேன். அந்தச் செயற்றிட்டங்களை எம்மிடம் தந்தால் அதற்கான நிதியுதவிகளை வழங்குவதாக அமைச்சர் கூறினார்.

போர் முடிந்து 8 வருடங்களாகும் நிலையில் தொடர்ந்தும் ஒரு இலட்சத்துக்கு அதிகமான இராணுவம் வடக்கில் இருப்பது எந்தளவு எமக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

எனினும் சமாதானம் நோக்கிச் செல்லும்போது ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். அதற்கு விட்டுக்கொடுப்பதற்கு நாங்கள் முன்வந்தால் கூடப் பலவிதங்களில் எங்களை அடிமைப்படுத்தும் விதத்தில் தான் சில சில நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கின்றனர். தெற்கில் எடுக்கப்படும் முடிவுகள், எங்கள் தனித்துவத்தையும் உரிமைகளையும் புறக்கணிப்பதாக இருப்பதையும் நான் எடுத்து கூறினேன்-என்றார். (த-4-106)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு மறியல்

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிய வாகனச்சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார் . கொடிகாமம் பொலிஸாரால் மிருசுவில் வாசிக்கு எதிராக கடந்த சனிக்கிழமை நீதிவான் முன் னிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசா ரித்த நீதிவான் வாகனச் சாரதியை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)


### மரண அறிவித்தல்



**திருமதி புஸ்பராணி நடராஜா**

தோற்றம் 04.12.1949 — மறைவு 07.11.2016

சங்கானையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி நடராஜா நேற்று (07.11.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், நாகரஞ்சினி, ஜெயக்குமாரி, நந்தகுமார், சுகந்தன், சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும், ஜோன்சன், வண்சவதி, சுமதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.11.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (J/5946) (11,18,21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்



**திருமதி காந்தம்மா அருளம்பலம்**

துணைவி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்தம்மா அருளம்பலம் 06.11.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலத்தின் (லூம்பா - C.T.B. உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும், ஶ்ரீசிவகுமார் (C.T.B), கமலராணி (UK), காலஞ்சென்ற அருளானந்தம் (முருகன் பேக்கரி உரிமையாளர் சங்கரத்தை) மற்றும் ஶ்ரீஸ்கந்தராஜா (UK), முருகானந்தம் (UK) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், ராதா, விஜி, யசோதரன், திலகேஸ்வரி அஜந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,தர்சிகா (UK), தயாளி, ஶ்ரீ ஜெனா, ஜனனி, யது (UK), அகிலன், கபிலன், யசி, கோபி, சரண்யா, கார்த்திகன், யசிதா, மகீஷ், மனாஷ், ஜனானி (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி, 2ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (J/5938) (11,18,21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஶ்ரீசிவகுமார் - 0094 7790 37511,
கமலராணி - 0044 7405 255168,
தர்சிகா - 0044 7984 734518

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## Dr.திருமதி ருக்மணி உதயகுமார்

(MBBS - Colombo)



திதி:ஐப்பசி வளர்பிறை சஷ்டி

அதிசயமாக எம்மைவிட்டுப் பிரிந்த அம்மாவே!
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த
வாழ்வு ஏனோ முடிந்து போனது
உதவியென்றால் உங்கள் கரம்
அரவணைக்கும் என்ற உண்மை உறங்கிப் போனதோ
மற்றவன் எப்படியும் வாழட்டும் என்று
எப்போதும் இருந்ததில்லை
இப்படி வாழுங்கள் என்று இதமாய் ஆறுதல் தரும்
மூன்று ஆண்டுகள் உங்களைப் பிரிந்து வாழும்
எமக்கு எங்கேயம்மா - ஆறுதல்
ஆண்டவன் பொன்னடியில் ஆராத இன்பமுடன் நீங்கள்
இருக்க என்றும் வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்

**உதயகுமார் (கணவர்), அர்ச்சனா (மகள்),**
**மற்றும் குடும்பத்தினர்.**

**அர்ச்சனா கிளினிக்,**
**மயிலணி, சுன்னாகம்.**

தோற்றம்
13.04.1954

மறைவு
08.11.2013

(ஜே/5923)(11.18.21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹொசைன் விடுவிப்பு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் செகாதத் ஹொசைனும், அவரது மனைவியும் வேலைக்காரச் சிறுமியை துன்புறுத்திய குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
ஹொசைனுக்குச் சொந்தமாக டாக்காவில் உள்ள வீட்டில் 11 வயது சிறுமியொருவர் வேலை செய்து வந்தார். அவரை, இவர்கள் இருவரும் கொடுமைப்படுத்தி தாக்கியதாக மிர்புர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து ஹொசைனும் அவரது மனைவியும் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்டனர். டிசெம்பர் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு அண்மையில் விசாரணைக்கு வந்தது. அவர்கள் இருவரும் தன்னைத் துன்புறுத்தவில்லை என சிறுமி தெரிவித்ததை அடுத்து ஹொசைனும் மனைவியும் விடுவிக்கப்பட்டனர். (ம)



## ஆஸியில் வைத்து ஆஸியையே ஊதித் தள்ளியது தெ.ஆபிரிக்கா

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் 177 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா.
உலகின் அதிவேக ஆடுகளமான பேர்த்தில் ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 242 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக குயின்டன் டி ஹொக் 84 ஓட்டங்களையும், பவுமா 51 ஓட்டங்களையும், பிளாசிஸ் 37 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் ஸ்ராக் 4 இலக்குகளையும், ஹசில்வூட் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், சிடில் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 244 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக வோர்ணர் 97 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஸ் 63 ஓட்டங்களையும், வோக்ஸ் 27 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில்பிளன்டர் 4 இலக்குகளையும் மகராஜ் 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா 540-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக டுமினி 144 ஓட்டங்களையும், எல்கர் 127 ஓட்டங்களையும், பிளன்டர் 73 ஓட்டங்களையும் குவித்தனர். பந்து வீச்சில் ஹசில்வூட், மிச்செல் மார்ஸ், சிடில் மூவரும் தலா இரு இலக்குகளையும், ஸ்ராக், சிமித் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா நான்காம் நாள் முடிவில் 169-4 என்றிருந்தது. கவாயா 58 ஓட்டங்களுடனும், மிச்செல் மார்ஸ் 15 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 26 ஓட்டங்களுடன் மார்ஸை வீழ்த்தினார் ரபாடா. மூன்று ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார் கவாயா. நெவில் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறு முனையில் சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்தன. 361 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 177 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது ஆஸ்திரேலியா. நெவில் 60 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் ரபாடா 5 இலக்குகளையும், பிளன்டர், டுமினி, மகராஜ், பவுமா நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ரபாடா ஆட்டநாயகனானார். (ம)

## இங்கிலாந்து - இந்தியா டெஸ்ட் தொடர் நாளை

இங்கிலாந்து-இந்தியா அணிகளுக்கு இடையிலான நீண்ட டெஸ்ட் தொடர் ராஜ்கோட்டில் நாளை ஆரம்பமாகவுள்ளது.
ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு வந்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் முதலாவது டெஸ்ட் ஆட்டம் ராஜ்கோட் மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது ஆட்டம் விசாகப்பட்டினத்தில் எதிர் வரும்



17ஆம் திகதியும், மூன்றாவது டெஸ்ட் மொகாலியில் எதிர்வரும் 26ஆம் திகதியும், நான்காவது டெஸ்ட் மும்பையில் அடுத்த மாதம் 8ஆம் திகதியும், ஐந்தாவதும் இறுதியானது மான டெஸ்ட் சென்னையில் எதிர்வரும் 16ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)



இலங்கையின் புகழ்பெற்ற கலைஞரான அமரதேவ உயிரிழந்ததையடுத்து, நடைபெற்றுவரும் சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை வீரர்கள் கறுப்புப் பட்டியுடன் விளையாடி வருகிறார்கள். (ம-எ)



## ஆஸியில் மாற்றமில்லை

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணியில் மாற்றம் இருக்காது என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.
தென்னாபிரிக்க அணி மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றிபெற்றது.
இரண்டாவது ஆட்டம் எதிர் வரும் 12ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான ஆஸ்திரேலியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் டெஸ்ட்டில் இடம்பெற்ற அத்தனை வீரர்களும் அவ்வாறே அணியில் தொடர்கின்றனர்.
ஆஸ்திரேலிய அணி - ஸ்ரீவ் சிமித், கசில்வூட், கவாயா, லையன், மிச்செல்; மார்ஸ், சோன் மார்ஸ், நெவில், சிடில், ஸராக், வோக்ஸ், வோர்ணர், ஜோ மென்னி. (ம)

## மட்ரிட் அபார ஆட்டம் டிப்போர்ரிவோ வீழ்ந்தது

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி 3:0 என்ற கோல் கணக்கில் டிப்போர்ரிவோவை வீழ்த்தியது.
ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்களும் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 38 ஆவது, 45 ஆவது நிமிடங்களில் கரீத் பலே கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் முன்னிலை வகித்தது.
ரியல் ட்ரிட் அணியின் ஏக ஆதிக்கத்துடனேயே இரண்டாம் பாதியும் நகர்ந்தது. அல்வாரோ மோர்ட்ரா 76 ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் மூன் றாவது கோலைப் பதிவுசெய்தார். 3:0 என்று பல மான ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட். ஆட்டத்தின் முடிவு வரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. மிக இலகுவாக டிப்போர்ரிவோவை வீழ்த்தியது ரியல் மட்ரிட். (ம)



## கால்பந்து ரசிகர்கள் மீது தென் சூடானில் துப்பாக்கிச் சூடு

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந் தாட்டத் தொடரை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் மீது மர்பநபரொருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தென் சூடானில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. குறித்த தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.
தென்சூடானின் ஜுபா நகர்ப் பகுதியில், 30 இற்கும் அதிகமான கால்பந்து ரசி கர்கள் ஒன்று திரண்டு இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த போது துப்பாக்கியுடன் வந்த மர்ம நபர் கண் மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டார்.
11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 16 பேர் காயங் களுடன் மருத்துவ மனையில் சேர்க் கப்பட்டனர். சிலரது உடல்நிலை கவ லைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புக் கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரானார் உப்புல் தரங்க

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில் இலங்கை அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார் அனுபவ வீரரான உப்புல் தரங்க.
குறித்த தொடருக்கான இலங்கை அணியில் தலைவர் மத்தியூஸ், துணைத்தலைவர் சந்திமல் இருவரும் களமிறங்கவில்லை. இதனால் புதிதாக ஒருவரை முத்தரப்புத் தொடரில் தலைவராக நியமிக்க வேண்டிய அழுத்தம் இலங்கை அணிக்கு ஏற்பட்டது. பலரும் எதிர்பார்த்ததைப் போன்று தரங்க தலைவராக அறிவிக்கப்பட்டார். குசல் பெரேரா துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அனுபவ வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகரவும் அணியில் சேர்க்கப்பட்டார்.
முத்தரப்பு தொடருக்கான இலங்கை அணி விவரம்: தனஞ்செய டி சில்வா, குசல் பெரேரா, நிரோசன் டிக்வெல்ல, தரங்க (தலைவர்), குசல் மெண்டிஸ், ஜெயசூர்ய, குணரத்ன, சசித் பதிரனா, நுவான் குலசேகர, தசுன் சானகா, நுவான் பிரதீப், லகிரு குமார, சுரங்க லக்மல், சன்டேகான், வண்டர்சே.
முத்தரப்பு தொடரின் முதல் ஆட்டத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி இலங்கை அணி, சிம்பாப்வே அணியை எதிர் கொள்ளவுள்ளது. (ம)



# ஆடுகளத்தைப் பொறுத்தே வாய்ப்புக்கள் வழங்கப்படும்

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் கருண் நாயர், ஹார்திக் பாண்டியா ஆகிய இருவரில் யாருக்கு வாய்ப்பளிப்பது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று இந்திய அணியின் பயிற்சியாளர் அனில் கும்ளே தெரிவித்தார்.
ராஜ்கோட்டில் நேற்றுமுன்தினம் வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கிலாந்து அணிக்கு எதிராக இந்தியா மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் கடந்த காலங்களைப் போன்று இம்முறை அமையாது. இளம் இந்திய அணி பலமாக உள்ளது. நியூசிலாந்துக்கு எதிராக வெளிப்படுத்தியதைப் போன்றதொரு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினால் தொடரை கைப்பற்றலாம். முதல் டெஸ்ட் ஆட்டம் நடைபெறவுள்ள ஆடுகளம் எவ்வாறு அமையும் என்பது குறித்து இன்னும் தெரியவில்லை. ஆடுகளத்தின் தன்மையை வைத்தே அறிமுக வீரர்களான பாண்டியா, நாயர் இருவரில் ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என கும்ளே மேலும் தெரிவித்தார். (ம)

# இங்கிலாந்தை சாய்த்த மிராஸுக்கு புதிய வீடு

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெறக் காரணமான மெகடி மிராஸுக்கு புதிய வீடு ஒன்று வழங்கப்படவுள்ளது என பங்களாதேஷ் பிரதமர் அறிவித்தார்.
சொந்த மண்ணில் பங்களாதேஷ் அணி உலகின் பலமான அணிகளுக்கெல்லாம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. கடந்த ஆண்டு ஒருநாள் தொடரில் 3:0 என பாகிஸ்தான் அணியை வழித்துத் துடைத்தது. அப்போதைய பங்களாதேஷ் அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களுக்கு பணப்பரிசு, கார் மற்றும் புதிய வீடு என பல பரிசுகளை அறிவித்தார் பங்களாதேஷ் பிரதமர் ஹசினா. இந்த நிலையில் டாக்காவில் நடந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், இங்கிலாந்தை வீழ்த்த உதவிய இளம் வீரர் மெஹடி ஹசன் மிராஸுக்கு புதிய வீடு ஒன்றை கட்டிக் கொடுக்க உத்தரவிட்டுள்ளார். குறித்த ஆட்டத்தின் 2 இன்னிங்சிலும் தலா 6 இலக்குகளைக் கைப்பற்றிய மிராஸ் ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் தெரிவானார். (ம)





# பரிஸ் தொடரில் முர்ரே சம்பியன்

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பிரிட்டனின் நட்சத்திர வீரர் அன்டி முர்ரே சம்பியனானார்.
ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரிட்டனின் நட்சத்திர வீரரும் ஒலிம்பிக் சம்பியனுமான அன்டி முர்ரேயை எதிர்த்து அமெரிக்க வீரர் ஜோன் இஸ்னர் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. அடுத்த செற்றிலும் அவர் வெற்றிபெற்றால் நேர் செற் கணக்கில் கிண்ணத்தைத் தனதாக்கலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் இரண்டாவது செற்றை 6:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் இஸ்னர். ஆட்டத்தின் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார். (ம)

# மைலோ கிண்ணம்; யாழ். லீக் முடிவு

யாழ்ப்பாணம், நவ. 8
மைலோ கிண்ணத்துக்காக யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. காலை நடைபெற்ற ஆட்டங்களில் கலைவாணி, பாரதி, ஞானகலா அணிகள் வெற்றிபெற்றன.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து திருக்குமரன் அணி மோதியது. இதில் நாவாந்துறை கலைவாணி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் பாரதி அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் பாரதி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
மூன்றாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஞானகலா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)






# ஜோகோவிக்கின் ஏக ஆதிக்கம் முடிவுக்கு வந்தது முர்ரேயால்

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் இறுதியாட்டத்துக்கு முன்னேறியதன் மூலம் பன்னாட்டத் தரப்படுத்தலில் நீண்டகாலமாக முதலிடத்தில் இருந்து வந்த ஜோகோவிக்கை வீழ்த்தி முதலிடத்தைப் பிடித்தார் முர்ரே.
பரிஸ் மாஸ்டர்ஸ் தொடர் ஆரம்பிக்கும் போது பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஜோகோவிக் முதலிடத்தில் இருந்தார். இந்தத் தொரை ஜோகோவிக் கைப்பற்றினால் அல்லது முர்ரே வெளியேறினாலேயே அவர் முதலிடத்தில் தொடரலாம் என்ற நிலைப்பாடு இருந்தது. காலிறுதியுடன் ஜோகோவிக் வெளியேற்றப்பட்டார். முர்ரே சம்பியனானார். இதனால் ஜோகோவிக் தரப்படுத்தலில் சரிவுகாண முர்ரே முதலிடத்தைக் கைப்பற்றினார்.
கடந்த 122 வாரங்களாக பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஜோகோவிக் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வந்தார். தற்போது அவரது தொடர் ஆதிக்கம் முர்ரேயால் முடிவுக்கு வந்துள்ளது. 2003ஆம் ஆண்டு முர்ரே 540 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தார்.
13 வருடகால உழைப்பின் பயனாக தற்போது அவர் முதலிடத்துக்கு தரப்படுத்தப்பட்டார்.
நீண்ட கால கடின உழைப்பு முர்ரேவுக்கு இந்த சிறப்பு வெகுமதியை வழங்கியுள்ளது. இந்த இடத்துக்கு ஒரே நாளில் வந்து விடவில்லை. கடந்த 12 மாதங்களாக ஆட்டங்களில் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டதன் மூலம் இந்த நிலையை எட்டி இருக் கிறேன்.
கடந்த சில மாதங்கள் எனது ரென்னிஸ் வாழ்க்கையில் மிகவும் சிறப்புக்குரியதாகும். தர வரிசையில் உச்ச நிலையை எட்டியது பெருமை அளிக்கிறது. தர வரிசை என்பது நிரந்தரம் இல்லை. ஆனால் அதைத் தக்கவைக்க போராடுவேன் என முர்ரே தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் சுற்று இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 8
மைலோ கிண்ணத்துக்காக யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்திலேயே ஆட்டங்கள் அனைத்தும் நடைபெறவுள்ளன. காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழுறோயல் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதவுள்ளது. மதியம் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாரதி அணியை எதிர்த்து நாவாந்துறைசென். நீக்கிலஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



## சமபோச கிண்ண கால்பந்தாட்டம்: மகாஜனக் கல்லூரி இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், நவ. 8
சமபோச கிண்ணத்துக்காக பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரி அணி இறுதியாட்டத்தில் தோல்வியடைந்ததை அடுத்து இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியது.

வென்னப்புவ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் நிக்கம்பிட்டிய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 12 ஆவது ஆவது நிமிடத்தில் குருநாகல் அணியின் வீராங்கனை ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது. ஆட்டத்தை குறைந்த பட்சம் சமநிலையில் முடிக்க மகாஜனக் கல்லூரி பலமுறை முயற்சித்த போதிலும் எவையும் கைகூடவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது நிக்கம்பிட்டிய அணி. மகாஜனக் கல்லூரிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. (ம-422)

## இறுதியாட்டமும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், நவ. 8
மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளன. மைக்கல் வி.கழக மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. நிகழ்வின் ஓர் அங்கமாக தேசியமட்டப் போட்டியில் சாதித்த வீர,வீராங்கனைகள் சிலர் கௌரவிக்கப்படவுள்ளனர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த அனித்தா, டிலானி, ஹரீனா, டிலக்சன் ஆகியோரும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் நிதுசன், நெப்தலி ஜொய்சன், சுலக்சன், யதுசன் ஆகியோரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கிரிஜா, சங்கவி, புவிதரன் ஆகியோரும், பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த சுகிர்தா, திவ்யா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆரணி, கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரிசாந்தினி ஆகி யோரும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பிரகாஸ்ராஜ், அபிசாந், ஆனந்த், மதுசன், மிதுன்ராஜ் ஆகியோரும் கடந்த காலத்தில் தேசியத்தில் சாதித்த சில வீர, வீராங்கனைகளும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-108)

## கே.ஸி.ஸி.ஸி. வி.க. கூடைப் பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 8
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் மயூரதன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 5 வீரர்கள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது. குறித்த தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் நாளைக்கு முன்னர் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (ம-23)

## இலங்கை பலமான நிலை சிம்பாப்வேயும் போராட்டம்



சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய நிலவரத்தின்படி இலங்கை தோல்வியடைவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துள்ளது எனக் கருதப்படுகிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில்துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் நாள் முடிவில் 290-5 என்றிருந்தது. சில்வா 100 ஓட்டங்களுடனும், குணரத்ன 13 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். மேலும் சில பவுண்டரிகள் பதிவாகின. 127 ஓட்டங்களுடன் டி சில்வாவை வீழ்த்தினார் கிரீமர். டில்ருவான் பெரேரா சிறிது அடித்தாடி 34 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். அரைச்சதம் கடந்தார் குணரத்ன. கேரத் ஓர் முனையில் தாக்குப்பிடிக்க மறுமுனையில் குணரத்னவின் சதம் அரங்கேறியது. 27 ஓட்டங்களுடன் கேரத்தையும், லக்மலை ஓட்டமெதனையும் பெறவிடாமலும் வீழ்த்தினார் திரிபானோ. 116 ஓட்டங்களுடன் குணரத்ன ஆட்டமிழக்க இலங்கை 504 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் திரிபானொ, கிரீமர் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், மசகட்சா இரு இலக்குகளையும், மொபு, வோலர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே இரண்டாம் நாள் முடிவில் 126-2 என்றுள்ளது. சறி 60 ஓட்டங்களுடனும், எர்வின் 60 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். மவோயோ 3 ஓட்டங்களுடனும், எர்வின் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் கேரத்தின் சுழலில் சிக்கினர். (ம)

இலவச UK முகாமைத்துவ டிப்ளோமா
வியாபார முகாமைத்துவம் DBM
மனிதவள முகாமைத்துவம் DHRM
சந்தைப்படுத்தல் DMKT
சான்றிதழ் கட்டணம் மட்டுமே
பயிற்சியுடன் வேலைவாய்ப்பு
தொடர்பு: Dr.ந.பிரபு MBBS (SL)
சுவடி இலாப நோக்கற்ற நிறுவகம்
076 8384466

## யுத் விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட இறுதிகள்

யாழ்ப்பாணம், நவ. 8
அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் ஏ, பி என இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டங்கள் இன்று இரவு 7 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளன.

பி பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியும், ஏ பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதவுள்ளன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-422)

## பார்சிலோனா வென்றது

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா வெற்றிபெற்றது. பார்சிலோனாவை எதிர்த்து செவில்லா மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியின் 32 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி முதல் கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்று பார்சிலோனாவின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 68 ஆவது நிமிடத் தில் சுவாரஸ் இரண்டாவது கோலைப் பதிவுசெய் தார். செவில்லாவின் சார்பில் ஓர் கோல் பதிவான போதிலும் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.